விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 22 செவ்வாய்க்கிழமை (05.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 168

## நினைவேந்தலுக்கு செலவான தனது பணத்தை கேட்ட தவராசா
## பணத்தை ஒவ்வொரு ரூபாய் வீதம் சேகரிக்கும் கிழக்கு இளைஞர்கள்



(பனிக்கன்குளம்) முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு செலவான தனது பணத்தை திருப்பித்தருமாறு கேட்ட வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவுக்கு பணத்தை திருப்பிக் கொடுக்க கிழக்கு இளைஞர்கள் ஒரு ரூபாய் வீதம் பொதுமக்களிடமும் கடைகளிலும் சேகரித்து வருகின்றனர். குறித்த பணம் அடுத்த மாகாணசபை அமர்வில் அவரிடம் கையளிக்கப்படவுள்ளது. (23-ம் பக்...)

### வலி. வடக்கில் 33 ஏக்கர் காணி நேற்று விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த பொது மக்களது காணிகள் சில நேற்று விடுவிக்கப்பட்டன. 24

### 4 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைதடியில் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடியில் 4 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் 24

### யாழ். பல்கலையின் 33-வது பட்டமளிப்பு
8-ம் திகதி வெள்ளிக்கிழமை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 33ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி எதிர்வரும் 8-ம் திகதி 24

### முல்லை, வவுனியாவில் நடைபெறுகின்ற அத்துமீறிய குடியேற்றங்களை கட்டுப்படுத்த
### செயலணி ஒன்று உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் நடைபெறுகின்ற அத்துமீறிய குடியேற்றங்களை கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு பாராளுமன்ற மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கி செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்டங்களில் நடைபெறுகின்ற குடியேற்றங்களை தடுப்பது குறித்து பாராளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் நேற்றைய தினம் கலந்துரையாடியிருந்தனர்.

நேற்று 4.30 மணிய 24

### சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்த
### பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை கொண்டுவர தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக தமிழர் நிலங்களில் நடைபெறுகின்ற சிங்கள குடியேற்றங்களை தடுத்து நிறுத்த அந்த திட்டத்தின் சட்டமூலத்தில் திருத்தம் ஒன்றை கொண்டுவருவதற்கு பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றை கொண்டுவருவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெறுகின்ற அத்துமீறிய குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவது குறித்து, வடக்கு மாகாண மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய 24

### போட்டிப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

எதிர்வரும் 9-ந் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கான போட்டிப் பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள் நாளைய வலம்புரியில் வெளிவரும். உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்...


### குளத்தில் மூழ்கி இளைஞன் பலி
முள்ளியவளையில் சோகம்

(பனிக்கன்குளம்)

முள்ளியவளை மதவாளசிங்கன் குளத்தில் குளிக்க சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவது.

நேற்று முன்தினம் மாலை வேளை முள்ளியவளையினை சேர்ந்த இளைஞர்கள் 6பேர் குளத்தில் குளிக்க சென்றுள்ளார்கள். இதன்போது குளத்தின் ஆழப்பகுதியில் மூழ்கி இளைஞர் 24

## வடக்கில் மாகாண சபையின் அனுமதி பெறாமல் படையினர் காணிகளை சுவீகரிக்க முடியாது
### மீறினால் சட்ட நடவடிக்கை; முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில், மாகாணசபையின் அனுமதி பெறப்படாமல் படையினருக்கென காணிகளை சுவீகரிக்க முடியாதென யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானத்தை மீறி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் நீதிமன்றின் ஊடாக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 24

### காணி இல்லாதவர்களுக்கு பனையில் காணி வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் காணி இல்லாதவர்களுக்கு பனையில் காணி வழங்கி குடியேற்றுகின்ற திட்டமொன்று நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மீளாய்வு கூட்டம் நேற்றைய தினம் மாவட்ட செயலக 23

### செல்வாக்கை பயன்படுத்தி வழக்குகளை கையாளக்கூடாது
பொலிஸாருக்கு யாழ். நீதவான் கட்டளை

(யாழ்ப்பாணம்)

காணிக்கான பாதை பிணக்குக்கு தீர்வு காணகுடியியல் நீதிமன்ற நடவடிக்கைக்குச் செல்லவேண்டும். தனிப்பட்ட செல்வாக்குகளைப் பயன்படுத்தி பொலிஸார் இவ்வாறு வழக்குகளைக் கையாளக் கூடாது. எதிர்காலத்தில் இவ்வாறு நடவடிக்கைகள் இடம்பெறக் கூடாது என யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் நேற்று கட்டளை வழங்கினார்.

யாழ்.நாவலர் வீதியில் காணி ஒன்றுக்கான பாதை தொடர்பில் இரு தரப்பினர் இடையே எழுந்த பிணக்கில் யாழ்ப்பாணம் பொலிஸார் பாதையைத் திறந்துவிட்டுள்ளதாக நீதிமன்றுக்கு அறி 23

### வடமராட்சியில் தென்னிலங்கை மீனவர் கடலட்டை பிடிப்பதை தடுக்க வேண்டும்
### ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பலரால் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர் தங்கி நின்று கடல் அட்டை பிடிக்கும் தொழிலை கால அவகாசம் வழங்காது தடைசெய்ய வேண்டும் என யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பல தரப்பினரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீரியல் வளத்துறை அதிகாரிகளும் மீனவ சங்க பிரதிநிதிகளும் பரஸ்பரம் தத்தமது குற்றச் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தீவுப் பகுதிகளின் அபிவிருத்தி தொடர்பில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை

## பிரதேச செயலர்களை இணைத்து கூட்டம் நடத்த தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தீவுப் பகுதிகளின் அபிவிருத்தி தொடர்பில் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளை இணைத்து விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமொன்றை நடத்துவதற்கு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மீளாய்வுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்குறித்த பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்கள். மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள்.

அவர்களின் தேவைகள் அப்பிரதேச அபிவிருத்தி குறித்து விரைவான நடவடிக்கை எடுப்பதற்காக குறித்த விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இடம்பெற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்

அதன் அடிப்படையில் குறித்த விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இணைத்தலைவர்களை உள்ளடக்கி வேலணைப் பிரதேச செயலகத்தில் விரைவில் நடத்தப்படவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-9)


### வேப்பமரம் விற்பனைக்குண்டு

உடுப்பிட்டி றோட், மாலிசந்தி, வதிரி, கரவெட்டியில் 17 அடி உயரம் 3 1/2 அடி சுற்றும் கொண்ட வேப்பமரம் வதிரி உபதபாலகத்திற்கு பின்புறமாக விற்பனைக்குண்டு.

**தொடர்பு: தொலைபேசி இலக்கம்**
**0771547510**

(சி-2820)


# குரங்கின் தொல்லையை கட்டுப்படுத்த துப்பாக்கிகள்

வவுனியாவில் பல பகுதிகளில் குரங்கு மற்றும் மர அணிலின் தொல்லைகள் அதிகளவில் காணப்படுகின்றது. இதனால் வீட்டிலுள்ள கோழி கள் உடபட ஜீவனோபாயம் அனைத்திற்கும் பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதனைக்கட்டுப்படுத்த தென்னை பயிர்ச் செய்கை அலுவலக த்தினால் துப்பாக்கிகள் வழங்கி வைக கப்படுகின்றன.

வவுனியாவில் தேங்காய், மாங்காய் போன்றவற்றிற்கு குரங்குகள் பெரும் சேதம் ஏற்படுத்தியும் அழிவையும் தொடர்ந்து மேற் கொண்டு வருகின்றன. இதனால் குரங்குகளின் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு துப்பாக்கிகள் வழங்கும் நடவடிக்கையினை வவுனியா, மனனார் பிராந்திய தென்னை பயிர்ச் செய்கை அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. துப்பாக்கி பெற்றுக்கொள்பவர்களுக்கு பயிற்சிகளும் அறிவுறுத்தல்களும் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றன. (ம-281)


Quality Royal Guaranteed

## நல் ஆரோக்கியத்திற்கு "றோயல் சுத்தமான தேன்"

உங்கள் நலன் ஆரோக்கியம் கருதி "ஆய்வுகூடத்தில்" தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.

**Packed By: Royal Industries** R

**Marketed By: சிவா நறுமணப் பூங்கா**
**இல.288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.இல: 021 222 2567**

குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(C-2805)


## அறிவித்தல்
## கேள்வி திறத்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை

18.04.2018ஆம் திகதி எம்மால் பிரசுரிக்கப்பட்ட சபை நிதி-2018ன் கீழான வீதி வேலைத்திட்டங்கள் தொடர்பான கேள்வி அறிவித்தலிற்கான கேள்விகள் **08.06.2018 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு** யாழ். மாநகர சபை திட்டமிடல் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

முதல்வர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம். 04.06.2018

(சி-2821)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் கால்நடைப் பண்ணை, அறிவியல் நகரின் பின்வரும் கால்நடைகள் 20.06.2018 அன்று புதன்கிழமை விற்பனை செய்யப்படும்

காளைகள் (இன விருத்திக்கானது):

| இல. | இனம் | வயது | பால் |
|---|---|---|---|
| 007 | சகிவால் | 01 வருடம் 08 மாதங்கள் | ஆண் |
| 008 | சகிவால் | 01 வருடம் 03 மாதங்கள் | ஆண் |

ஆடுகள் (இன விருத்திக்கானது):

| இல. | இனம் | வயது | பால் |
|---|---|---|---|
| 008 | சாணன் | 01 வருடம் 07 மாதங்கள் | ஆண் |
| 009 | ஜமுனாபாரி | 01 வருடம் 01 மாதம் | ஆண் |
| 0010 | ஜமுனாபாரி | 01 வருடம் | ஆண் |

செம்மறி (இன விருத்திக்கானது):

| இல. | இனம் | வயது | பால் |
|---|---|---|---|
| 0011 | பானூர் கலப்பு | 01 வருடம் 10 மாதங்கள் | பெண் |
| 0012 | ரெட் மெட்றாஸ் கலப்பு | 01 வருடம் 10 மாதங்கள் | ஆண் |
| 0013 | ரெட் மெட்றாஸ் கலப்பு | 01 வருடம் 10 மாதங்கள் | ஆண் |
| 0014 | ரெட் மெட்றாஸ் கலப்பு | 01 வருடம் 10 மாதங்கள் | ஆண் |
| 0015 | ரெட் மெட்றாஸ் கலப்பு | 01 வருடம் 01 மாதம் | பெண் |
| 0016 | பானூர் கலப்பு | 01 வருடம் 01 மாதம் | ஆண் |
| 0017 | பானூர் கலப்பு | 01 வருடம் 01 மாதம் | பெண் |

இவ் ஏல விற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 18.06.2018 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு கால்நடைப் பண்ணை, விவசாய பீடம், அறிவியல் நகரில் கால்நடைகளை பார்வையிடலாம்.

ஏல விற்பனையானது 20.06.2018 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கால்நடைப் பண்ணை, விவசாய பீடம், அறிவியல் நகரில் நடைபெறும்.

ஏலத்தில் வெற்றி பெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

-பதிவாளர்

(சி-2816)

## மாநகர சபையில் திரவக் கழிவகற்றல் தொடர்பான அறிவித்தல்

புதிய நடைமுறைக்கேற்ப 05.06.2018ஆம் திகதி தொடக்கம் மலக்கழிவு, நீர்க்கழிவு மற்றும், வியாபார நிறுவனங்களில் உள்ள நீர்க்கழிவு என்பவற்றை அகற்ற வேண்டிய தேவையுடையோர் மாநகர சபையில் நேரடியாக அதற்குரிய கட்டணத்தினைச் செலுத்தி சேவையினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலதிக விபரங்களை மாநகர சபையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி (தொ.பே இல:0212222275, 0212222019) மூலமாகவோ தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள், கட்டண விபரம் வருமாறு:

| லீற்றர் | மலக்கழிவு, இறால், நண்டு, நீர்க்கழிவு என்பவற்றிற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபாவில் (VAT, NBT அடங்கலாக) | உணவு நீர்க் கழிவுகளிற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபாவில் (VAT, NBT அடங்கலாக) |
|---|---|---|
| 2500L | 4, 387.50 | 1,755.00 |
| 4000L | 5, 850.00 | 2,808.00 |
| 5000L | 7, 312.50 | 3,510.00 |
| 6000L | 8775.00 | 4,212.00 |
| 10000L | 14, 625.00 | 7,020.00 |

திரு.இ.த.ஜெயசீலன்,
ஆணையாளர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை, (சி-2822) 05.06.2018

## துயர் பகிர்கின்றோம்

திருமதி
### கருணானந்தன் எலிசபேத்



எமது பாடசாலை ஆசிரியர் **சிவாகரன்** அவர்களின் அன்புத் தாயார் திருமதி கருணானந்தன் எலிசபேத் அவர்கள் 06.05.2018 அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

(4292)

## 31ம் நாள் நினைவுதின அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 06.05.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி

திருமதி
### கருணானந்தன் எலிசபேத்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.06.2018) செவ்வாய்க்கிழமை அன்னாரின் தற்காலிக வசிப்பிடமாகிய அனிஞ்சியன்குளம், மல்லாவியில் பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனுதாபச் செய்திகளை பலவழிகளிலும் பரிமாறிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு.**
**தொ.பே.இல.077 3934719**

(4265)

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

# 20 ஆவது திருத்தச் சட்டமூலம் நாட்டைப் படுகுழியில் தள்ளும்

## விமல் வீரவன்ச எச்சரிக்கை



(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கக்கோரி மக்கள் விடுதலை முன்னணியால் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச்சட்ட மூலமானது நாட்டைப் படுகுழியில் தள்ளும் ஒரு செயற்பாடாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளார்.

20ஆவது திருத்தச்சட்டத்தை பாராளுமன்றத்தில் ஒரு தனிநபர் மசோதாவாக சமர்ப்பிக்க முடியாது எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்த சட்டத்தின் நோக்கம், நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இரத்துச் செய்வது அல்ல. ஜனாதிபதி தேர்தலை ஒழிக்க வேண்டும் என்பதே. அதற்கு அரசாங்கம் நிலையற்றதாக இருக்க வேண்டும் மற்றும் நிர்வாகி பலவீனமாக இருக்க வேண்டும். தீர்மானங்களை மேற்கொள்ள முடியாமல் இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே விமல் வீரவன்ச இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார். (இ-7)


# பிணைமுறி விவகாரத்தால் ஆட்சி மாற்றம் ஏற்படாது

## திகாம்பரம் திட்டவட்டம்

(தலவாக்கலை)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் பிரதமர் மீது பாரிய குற்றங்கள் சுமத்தப்பட்டு இருந்தாலும் 2020ஆம் ஆண்டு வரை எமது ஆட்சி தொடரும் என மலைநாட்டு புதிய கிராமங்கள், தோட்ட உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் 250 வீடுகளை தலவாக்கலை மடக்கும்புரை மேல் பிரிவு தோட்டத்தில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது.



இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"பணம் வாங்கியதாகச் சொல்லப்படும் 118 பேர் தொடர்பில் பிரதமர் ஜனாதிபதியிடம் கூறி குறித்த நபர்களின் பெயர் பட்டியலை வெளியிட வேண்டும். இருந்தாலும் இந்தக் குற்றசாட்டில் அர்ஜுன் அலோசியஸிடமிருந்து பணம் வாங்கியதாக சொல்லிக்கொண்டு அரசாங்கத்தை கவிழ்க்க திட்டமிடுகின்றனர். அதற்கு இடம் கொடுக்கப்போவதில்லை.

மலையகத்தில் லயன்களை உடைக்கும் அளவிற்கு மக்கள் ஒரு பக்கமாக ஒற்றுமையை பலப்படுத்தி வருகின்றனர். லயம் என்பது எமது அடையாளமாகும். இந்த அடையாளத்தை மாற்றியமைத்து புதிய கிராமங்களை அமைத்து சொந்தக் காணியில் வீடுகளைக் கட்டி வாழ வேண்டும்.

இந்திய அரசாங்கம் 14 ஆயிரம் வீடுகளை மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் அமைக்க உதவிகள் செய்துள்ளது. 2020ஆம் ஆண்டுக்குள் இந்த வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டும் என இந்திய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

இன்றுவரை 1300 வீடுகள் கட்டப்பட்ட நிலையில் மேலதிகமாக வீடுகளை கட்டியமைக்க எனது அமைச்சு இந்திய அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும்" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முதுகெலும்பு இருந்தால் பகிரங்கமாக மோதுங்கள்

## ஆட்சியாளர்களுக்கு பகிரங்க சவால்



(கொழும்பு)

"முதுகெலும்பு இருக்கின்றது என்பது உண்மையானால், மாகாண சபைத் தேர்தலை எப்போது நடத்துவோம் என்ற திகதியை இப்போதைய ஆட்சியாளர்கள் அறிவிக்கவேண்டும்" என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன சவால் விடுத்துள்ளார்.

பொதுஜன பெரமுன நேற்று திங்கட்கிழமை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக நாடு அனைத்து வகையிலும் சரிவினையே சந்தித்துக்கொண்டு வருகின்றது. மக்கள் ஓர் தீர்மானத்தோடு இருக்கின்றார்கள்.

தேர்தல்களை நடத்தாத நாடு இலங்கை என்றும் கூற வேண்டும். மாகாண சபைத் தேர்தல் எப்படியும் நடத்தப்படாது. இந்தத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அச்சமடைந்துள்ளது என்பதே உண்மை.

அவ்வாறு பயம் இல்லை, மக்களுக்கு சேவை செய்துள்ளது உண்மையானால் அச்சமின்றி தேர்தலை நடத்துவதற்கு இப்போதைய ஆட்சியாளர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி தரப்பில் அல்லது பிரதமர் தரப்பில் யாராவது ஒருவர் மாகாண சபை தேர்தலை நடத்தும் திகதியை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அது யாராக இருந்தாலும் பரவாயில்லை. அவ்வாறு அறிவிப்பார்கள் என்றால் இவர்களுக்கு முதுகெலும்பு உள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

இப்போது இலங்கை அடைந்துள்ள வீழ்ச்சி, கடந்த காலங்களில் காணப்படவில்லை. பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து மக்களின் வாழ்க்கை செலவுகளும் அதிகரித்துள்ளன.

குறிப்பாக மகிந்தவின் அரசாங்கத்தில், ஒரு பாதாள உலகக் கும்பலும் தேடுவதற்கும் இருக்கவில்லை என்பது முக்கியமாகும். ஆனால் அந்த நிலை இப்போது இல்லை என ரோஹித மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஸ்மார்ட் பேருந்து நிலையங்களை நிர்மாணிக்க அரசு நடவடிக்கை

## பிரதியமைச்சர் அபேசிங்க தகவல்

(கொழும்பு)

இலங்கையில் பல்வேறு பகுதிகளில் ஸ்மார்ட் பேருந்து நிலையங்களை நிர்மாணிக்க போக்குவரத்து பிரதி அமைச்சர் அஷோக் அபேசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இலங்கையில் சீன முதலீட்டாளர்களினால் நூற்றுக்கும் அதிகமான ஸ்மார்ட் பேருந்து நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

கொழும்பு, கண்டி, குருநாகல் உள்ளிட்ட பல நகரங்களில் இவ்வாறான ஸ்மார்ட் பேருந்து நிலையங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



சீன முதலீட்டாளர்கள் இதற்கு தேவையான நிதியை வழங்கவுள்ளனர். ஸ்மார்ட் பேருந்து நிலையங்கள் மூலம் அரசாங்கத்திற்கு வரிப்பணம் கிடைக்கவுள்ளது.

இந்த ஸ்மார்ட் பேருந்து நிலையங்கள் மூலம் சீன முதலீட்டாளர்களினால் மக்களுக்கு பல சேவைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இந்தப் பேருந்து நிலையங்களில் அனைத்து சேவைகளும் தானியங்கி இயந்திரங்கள் ஊடாகவே வழங்கப்படும். இவ்வாறான ஸ்மார்ட் பேருந்து நிலையம் உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளில் மாத்திரம் உள்ள திட்டமாகும் என கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (இ-7)

# 15 குழந்தைகள் உயிரிழப்பு

## பரவிவரும் வைரஸ் காய்ச்சல் காரணம் கண்டறியப்பட்டது

(கொழும்பு)

தென் மாகாணத்தில் பரவிவரும் வைரஸ் காய்ச்சலானது "இன்புளுவென்சா" வகையான வைரஸினால் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளதாக தென் மாகாண மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென் மாகாணத்தில் பரவிவரும் ஒருவகை வைரஸ் காய்ச்சலால் இதுவரை 15 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றுள் மாத்தறை மாவட்டத்தில் 9 குழந்தைகளும், காலி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் தலா 3 குழந்தைகளும் உயிரிழந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரெஞ்ச் ஓபன்: காலிறுதியில் நடால்

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு 4வது சுற்றில் ஸ்பெயினின் நடால், ஜேர்மனியின் மார்டிரரை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். இதனையடுத்து ஒட்டுமொத்த டென்னிஸ் அரங்கில் தனது 900வது வெற்றியை பதிவு செய்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4வது சுற்றில் உலகின் 'நம்பர் 1' வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால், ஜேர்மனியின் மேக்சிமிலியன் மார்டிரர் மோதினர். இரண்டு மணி நேரம், 30 நிமிடம் நீடித்த போட்டியில் அபாரமாக ஆடிய நடால், 6-3, 6-2, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். இதன்மூலம் 34 முறையாக கிராண்ட்ஸ்லாம் காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

**ஐந்தாவது வீரர்**

தவிர நடால், தனது 900வது வெற்றியை பதிவு செய்தார். இது வரை 1,087 போட்டிகளில் பங்கேற்று 900 வெற்றி, 187 தோல்வியை பெற்றுள்ளார். இதன்மூலம் இந்த இலக்கை எட்டிய 5வது வீரரானார். ஏற்கெனவே அமெரிக்காவின் ஜிம்மி கானர்ஸ் (1,256 வெற்றி, 279 தோல்வி), சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் (1,149 வெற்றி, 252 தோல்வி), அமெரிக்காவின் இவான் லெண்டில் (1068 வெற்றி, 242 தோல்வி), ஆர்ஜென்ரீனாவின் விலாஸ் (949 வெற்றி, 291 தோல்வி) இம்மைல்கல்லை எட்டியிருந்தனர்.

மற்றொரு போட்டியில் தென்னாபிரிக்காவின் கெவின அண்டர்சன், 6-1, 6-2, 5-7, 6-7, 6-2 என்ற செட்கணக்கில் ஆர்ஜென்ரீனாவின் டியாகோ ஸ்வார்ட்ஸ் மனிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.



**செரினா விலகல்**

பெண்கள் ஒற்றையர் 4வது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா ஷரபோவா மோத இருந்தனர். ஆனால் செரினாவின் வலது கை தோள் பகுதியில் உள்ள தசையில் காயம் ஏற்பட்டது. இதனால் இவரால் பந்தை 'சர்வீஸ்' செய்ய முடியாத நிலை ஏற்பட்டதால், போட்டி துவங்குவதற்கு முன் விலகுவதாக தெரிவித்தார். இதனையடுத்து ஷரபோவா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு, காலிறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு போட்டியில் ஜேர்மனியின் கெர்பர், 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் பிரான்சின் கரோலின் கார்சியாவை வீழ்த்தி, காலிறுதிக்கு முன்னேறினார்.

# ரபாடாவுக்கு 6 விருதுகள்



தென்னாபிரிக்கா அணிக்காக சிறப்பாக செயல்படும் நட்சத்திரங்களுக்கு ஆண்டுதோறும் அந்நாட்டு கிரிக்கெட் சபை சார்பில் விருது வழங்கப்படும். இதில், 6 விருதுகளை வேகப்பந்து வீச்சாளர் ரபாடா தட்டிச் சென்றார்.

கடந்த ஆண்டு ரபாடாவுக்கு சிறப்பானதாக அமைந்தது. டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட் (11 போட்டி, 57 விக்.,) வீழ்த்தியவர்கள் பட்டியலில் அவுஸ்திரேலியாவின லயனுக்குப்பின் (11 போட்டி, 106 விக்.,) இரண்டாவது இடம்பிடித்தார். இந்த ஆண்டில் தற்போது வரை, அதிக டெஸ்ட் விக்கெட் (7 போட்டி, 38 விக்.,) வீழ்த்தியவர் இவர்தான். இப்படி சிறப்பான செயல்பாட்டிற்காக விருதுகளை குவித்துள்ளார். ஒட்டுமொத்தமாக, ஒரே ஆண்டில் 6 விருதுகளை வென்றதன் மூலம், இந்த இலக்கை எட்டிய முதல் தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமை பெற்றார்.

டி வில்லியர்சிற்கு விருது

அம்லா, கலிஸ், நிடினி, டி வில்லியர்ஸ் வரிசையில் சிறந்த வீரர் என்ற விருதை இரண்டு முறை (2016, 18) கைப்பற்றிய வீரரானார் ரபாடா. சமீபத்தில் ஓய்வுபெற்ற டி வில்லியர்ஸ், 'ரி20' போட்டியில் சிறந்த வீரர் என்ற விருதுக்கு தேர்வாகி உள்ளார். சர்வதேச அரங்கில் அறிமுகமான சிறந்த வீரர் விருதை மார்க்ரம் பெற்றார்.

## 'ஃபிபா' கால்பந்து கவுண்ட் டவுன் 09

# ஸிடேன் - மட்டராஸி மோதல்

பதினெட்டாவது உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் 2006ல் ஜேர்மனியில் நடந்தது.

இதில் ஸிடேன் -மட்டராசி மோதல் பெரும் சர்ச்சையை கிளப்பியது. இதில் 32 அணிகள் பங்கேற்றன. இவை 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, லீக் முறையில் போட்டிகள் நடந்தன.

காலிறுதியில் பலமான ஆர்ஜென்டினா, பிரேசில் அணிகள் முறையே ஜேர்மனி, பிரான்ஸிடம் வீழ்ந்தன.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஜெர்மனி - இத்தாலி இடையிலான அரையிறுதியில், இத்தாலி வென்றது. மற்றொரு அரையிறுதியில் போர்த்துக்கலை வீழ்த்திய பிரான்ஸ் அணி இறுதிக்கு நுழைந்தது.



**ஸிடேன் 'அவுட்'**

இறுதிப் போட்டியில் இத்தாலி - பிரான்ஸ் அணிகள் மோதின. நிர்ணயிக்கப்பட்ட ஆட்ட நேர முடிவில் ஸ்கோர் 1-1 என நீடிக்க, போட்டி கூடுதல் நேரத்துக்கு சென்றது. இதில், இத்தாலியின் மட்டராசி கடும் வார்த்தைகளால் திட்ட, ஆத்திரமடைந்த பிரான்ஸ் வீரர் ஸிடேன், தனது தலையால் அவரது நெஞ்சில் முட்டி கீழே தள்ளினார். உடனே நடுவரால் 'ரெட் கார்ட்' காட்டப்பட்டு, ஸிடேன் வெளியேற்றப்பட்டார்.



ஸிடேன் - மட்டராசி மோதல்

கூடுதல் நேரத்திலும் கோல் அடிக்கப்படாததால், போட்டி, 'பெனால்டி ஷூட் அவுட்' முறைக்கு சென்றது. இதில் இத்தாலி 5-3 என்ற கோல் கணக்கில் வென்று, நான்காவது முறையாக கிண்ணத்தை கைப்பற்றியது.

இதன்மூலம் 'பிபா' சர்வதேச ராங்கிங் (தரவரிசை) பட்டியலில் இத்தாலி அணி 1993க்கு பின் முதன்முறையாக முதலிடம் பிடித்தது. இத்தொடரில் ஜேர்மனியின் குளோஸ் (5 கோல்) 'தங்கக் காலணி' விருது வென்றார்.

**ஃபிரி கிக்**

உலகக் கிண்ண வரலாற்றில் அதிக கோல்கள் அடித்து வெற்றி பெற்ற அணி என்ற சாதனை ஹங்கேரிக்கு உண்டு.

1982ஆம் ஆண்டு ஸ்பெயினில் நடந்த உலகக் கிண்ண போட்டியில் எல்சல்வடோர் அணியை 10-1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தியது.




அமரர் கந்தையா சரவணபவன்

(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

7வது நினைவு தினம்

மேற்படி தினத்தையொட்டி முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டை உயர்த்த கட்டுரைப் போட்டி நடத்த உள்ளோம்.

கட்டுரைத் தலைப்பு

"தமிழ் எங்கள் உயிர்மொழி"

பிரிவு விபரம்

| தரம் | பிரிவு | சொற்கள் |
|---|---|---|
| 6 - 9 | 1 | 200 சொற்கள் |
| 10 - 11 | 2 | 350 சொற்கள் |
| 12 - 13 | 3 | 400 சொற்கள் |

போட்டி நடைபெறும் காலம் :- 07.06.2018 பி.ப 2 மணி

போட்டி நடைபெறும் இடம் :- மத்திய கல்லூரி மு. புதுக்குடியிருப்பு

மாணவர்கள் தங்கள் தரங்களை அதிபரூடாக உறுதிப்படுத்தி வந்தால் போதுமானது. வெற்றியாளருக்கு 08.06.2018 மு.ப 10 மணிக்கு நினைவுப்பரிசில் வழங்கப்படும்.

(C-2824) அமரர் சரவணபவன் ஞாபகார்த்த நற்பணி மன்றம்



31ம் நாள் நினைவு அஞ்சலி

எங்கள் நித்தி

அமரர் நித்தியானந்தம்



நித்தி ஆனந்தம்
நித்தமும் ஆனந்தம்
முருகன் கோயிலுக்கு முன்னின்று
நிதி சேர்த்து- முருகன்
திருப்பணி செய்தவனே
நேரம் தவறாது மணியோசை-
ஒலித்தவனே
மணியோசை ஒலிக்கும் போது
உன் நினைவு வருகுதையா

பரிபாலன சபை
வில்லையடி விநாயகர் ஆலயம்
நெடுங்கேணி.

(4-2817)

# 2018ஆம் ஆண்டுக்கான வரி வருமான இலக்கு 792 பில்லியன் ரூபாய்

## இறைவரித் திணைக்களம் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டுக்கான வரி வருவாயாக 792 பில்லியன் ரூபாவினை ஈட்டுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எதிர்பார்த்துள்ளது.

இது தொடர்பாக இறைவரித் திணைக்கள ஆளுநர் தெரிவிக்கையில்,


2017 ஆம் ஆண்டு இறைவரித் திணைக்களத்தினால் வரி வருமானமாக 602 பில்லியன் ரூபா ஈட்டப்பட்டது.

கடந்த வருடம் பெறப்பட்ட வரி வருமானத்தை விட இவ்வருடம் 190 பில்லியன் ரூபா அதிகமாக வருமானமாக ஈட்ட எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையில் தற்போது 1.6 மில்லியன் மக்கள் மீது வருமானவரி செலுத்துவதற்கு பதிவுசெய்யப்பட்டள்ளது. புதிய இறைவரித் திணைக்கள செயற்பாடு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இறைவரித் திணைக்களத்தினால் புதிதாக 80,000 பேர் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 2020 ஆம் ஆண்டில் வருமான வரி செலுத்துவோரினது எண்ணிக்கை 3 மில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# சிறுவர் சேமிப்புக் கணக்குகளுக்கான வரியை நீக்க அரசாங்கம் நடவடிக்கை




(கொழும்பு)

18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான சேமிப்பு வங்கிக் கணக்குகளிலிருந்து அறவிடப்படும் 5 சதவீத வரியை முழுமையாக நீக்க அரசாங்கம் தீர்மானத்துள்ளது.

சிறுவர் சேமிப்புக் கணக்குகளின் வட்டி வருமானம் 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு தேக்கநிலை வரி கடந்த ஆட்சிக்காலத்திலிருந்து அறவிடப்பட்டது.

இந்நிலையில், அமைச்சர் மங்கள சமரவீரவின் யோசனைக்கு அமைய இந்த வரியை முழுமையாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், தற்போது அறவிடப்படும் எழுத்தாளர் உரிமை வரியின் மாதாந்த வருமானத்தை 50 ஆயிரம் ரூபாவரை விடுவிப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த வருமானம் அதிகரிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 14 சதவீத வரி அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்.M.A.பஞ்சநாதன் J.P

(ஓய்வுநிலை அலுவலர்,மக்கள் வங்கி,வடபிராந்திய அலுவலகம்)



தோற்றம் 1942 - 12 - 13

மறைவு 2016 - 05 - 28

திதி: தேய் பிறை ஸப்தமி (05.06.2018)

அன்புள்ள அப்பாவே! இன்று ஸப்தமி எங்களின் வாழ்விற்கும்
வளர்ச்சிக்கும் நல்வழிகாட்டி நானிலம் போற்ற வைத்த
எங்களின் அன்பு அப்பாவே! நீங்கள் இறைவனிடம் சென்று
ஆண்டு இரண்டு ஆனதுவோ. ஆறவில்லை எம்துயரம்
காயவில்லை எங்களின் கண்களின் ஈரம்,நீங்கள் இல்லாமல்
நாம் படும் துயரம் சொல்ல முடியவில்லை. எங்களின் மனம்
வெடிக்குதைய்யா வேதனையில் ஏனிந்த வாழ்க்கை என்று
எண்ணுகிறோம் இப்பொழுது உள் அன்போடு எமை அரவணைத்த
எங்கள் அன்பு அப்பாவே உங்களோடு வாழ்ந்த ஒவ்வொரு நிமிடமும்
உங்களின் மகத்துவத்தை நாம் உணர்ந்தோம்
பாசமே வேதமாய் எங்களை ஆட்கொண்டீர்கள்
அதனால்தானோ நித்தம் எங்களின் உள்ளத்தில் வாழும்
ஓர் உன்னத தெய்வமாகிவிட்டீர்கள்
காலனுக்கு கூட பொறுக்கவில்லை உங்களின் சிறப்பு
கவர்ந்துவிட்டான் உங்களை நொடிப் பொழுதில் ஆறாத
காயமாய் உங்களின் மறைவு ஓயாமல் நித்தமும் எங்களின்
மனதை வதைக்குதைய்யா ஆண்டுகள் பல சென்றாலும்
எங்களின் உயிருள்ளவரை நித்தம்
நினைத்திருப்போம் உங்களின் நினைவுகளை

69வி, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2560

மனைவி, மகன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



# ஈரவிழிகளுடன் 16ஆம் நாள் நினைவாக எங்களது கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்



## பொன்னுத்துரை ஜெயரட்ணம்

(ஓய்வுநிலை தபாலதிபர், கொக்குவில்)

05.06.2018

தோற்றம் 06 - 02 - 1941

மறைவு 21 - 05 - 2018

எங்களது நெருங்கிய உறவினரும் உறவுகளில் ஒருவருமாகிய சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டு கொக்குவில் மேற்கு, நீர்கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட எங்களது குடும்ப உறுப்பினர் பொன்னுத்துரை ஜெயரட்ணம் அவர்கள் 21.05.2018 அன்று கொக்குவிலில் அமரத்துவம் அடைந்த செய்தி நம் எல்லோரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. அமரர் அவர்கள் சேவைக் காலத்திலும் சரி, நியவாழ்விலும்சரி மனிதநேயத்துடன் நல்ல மனிதராக வாழ்ந்த நல்ல மனிதராவார். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்ற வாக்கிற்கிணங்க தனது குடும்பத்தை வளர்த்தெடுத்தவர்.

அன்னாரின் மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது எங்களுக்கும் பேரிழப்பாகும். எனவே அன்னாரைப் பிரிந்து தவிக்கும் மனைவி ஸ்ரீமல்லிகாதேவி (மல்லிகா), பிள்ளைகளான ஜெயகாந்தன் (குகன்) கனடா, ஜெயதர்சனன் (பவா) லண்டன் , யாழினி-கொக்குவில் மற்றும் அமரரின் நெருங்கிய உறவினர்கள் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரியமுள்ள உறவுகள்: நடராசா ஸ்ரீபாலன்[சிறி], ஸ்ரீபாலன் வசந்தாதேவி[வசந்தா], ஸ்ரீபாலன் சுபாகர், சுபாகர் சந்திரிகா[சசி], அருள் சஜீதா, சுதன், சுபாங்கி-[கனடா]


# இராசி பலன்

**மீனம்:** மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மேடம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**இடபம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், போசன சுகமுண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**மிதுனம்:** விட்டுப் போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், விரயங்கள் கூடும், ஒரு சில வேலைகளை முடிக்க பல மணிநேரம் காத்திருக்க நேரிடலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, புத | சுக் |
| சந் | இராசி பலன் | | ராகு |
| கேது, செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம், ஆயிலியம் | | |
| சனி | | குரு | |

**05.06.2018**

வைகாசி 22, செவ்வாய்க்கிழமை

சஷ்டி காலை 6.40 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 3.29 மணிவரை

சுபநேரம் 10.22-11.52 மணிவரை

இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

சர்வதேச சுற்றுச்சூழல் தினம்.

வளவன்

**கடகம்:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்கால வெற்றிக்கு அடித்தளம் இடுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


**சிம்மம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**விருச்சிகம்:** உறவினர் சந்திப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களால் முன்னேற்றம் காண்பீர்கள், சந்தித்த நபர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.



யாழ்.வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 25 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 27 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் , 28 ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# வடமராட்சியை விட்டு தென்னிலங்கை மீனவர்கள் வெளியேறாவிட்டால் நாளை பாரிய போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் அடாத்தாக தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடுகின்ற தென்னிலங்கை மீனவர்களை இன்று ஐந்தாம் திகதிக்குள் வெளியேற காலக்கெடு விதிக்கப்பட்ட நிலையில், அவர்கள் வெளியேறுவதற்கான எந்த ஆயத்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதியை சேர்ந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அடாத்தாக தங்கியுள்ள மீனவர்கள் அனைவரும் வெளியேறாவிட்டால் நாளை பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்க போவதாகவும் வடமராட்சி பகுதி மீன்வர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு-மருதங்கேணி பகுதியில் அடாத்தாக தங்கியுள்ள சுமார் 1500 இற்கும் மேற்பட்ட தென்பகுதி மீனவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் இரு தினங்களுக்கு முன்னர் மருதங்கேணி பிரதேச செயலர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில், மருதங் கேணியில் தங்கியிருக்கும் தென்பகுதி மீனவர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என மத்திய கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை விடப்படும்.

அதற்கமைய இன்று 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தகுந்த பதில் வழங்கப்படவேண்டும். 5ஆம் திகதிக்குள் தகுந்த பதில் கிடைக்கவில்லை என்றால் 6ஆம் திகதி பாரிய மக்கள் போராட்டம் ஒன்றுக்கு மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

அந்தப் போராட்டத்தில் நாமும் கலந்து கொள்வோம். அதற்கும் தகுந்த பதில் உடனடியாக கிடைக்கவில்லையாயின் அடுத்தகட்டம் மிகப்பெரியளவில் மக்களை ஒன்றுதிரட்டி அரசியல்வாதிகளும் இணைந்து யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் திணைக்களத்தை முற்றுகையிட்டு தொடர்ச்சியான போராட்டத்தை நடத்துவதென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் வடமராட்சி கிழக்கு மீனவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மாகாணசபை உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.சுகிர்தன் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மருதங்கேணியில் அடாத்தாக தங்கியுள்ள தென்பகுதி மீனவர்களை ஒரு மாதத்திற்குள் வெளியேறுமாறு மருதங்கேணி பிரதேச செயலர் உத்தரவு ஒன்றையும் வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் குறித்த தென்பகுதி மீனவர்கள் வெளியேறுவதற்கான எந்த முன்னாயத்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை எனவும், நேற்றும் அவர்கள் வழமை போன்று கடலுக்குள் சென்று தொழிலில் ஈடுபட்டு வந்ததை காணக்கூடியதாக இருந்தது எனவும் வடமராட்சியை சேர்ந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வடமராட்சியில் அத்துமீறிய தென்பகுதி மீனவர்களை வெளியேறக் கோரி இரு தினங்களுக்கு முன்னர் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டம் ஒன்றை அரசியல் வாதிகள் தலையிட்டு நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

## 'தேனீக்கிராமம்' தொடக்க நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றுச்சூழல் தினம் -ஜூன் 5, உலக தேனீக்கள் தினம்-மே 20 ஆகிய தினங்களை முன்னிட்டு தேனீக்களின் வளர்ப்பை ஊக்குவிக்கும் தேனீக்கிராமம் திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி கோண்டாவில் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

தேனீக்கிராமம் திட்டத்தில் முதலாவதாக கோண்டாவில் கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கோண்டாவில் பகுதியில் வாழ்கின்ற 50 பேர் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் தேனீப் பெட்டியும் தேனீக்களும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வைத்திய கலாநிதி சிவன்சுதன், பேராசிரியர் சோ.கிருஷ்ணராசா, சட்டத்தரணி தி.அர்ச்சுனா ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## நினைவஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் மு. சிவசிதம்பரம் கூட்டணியின் யாழ். மாவட்ட முன்னாள் உப தலைவர் அமரர். சி.நமசிவாயம் ஆகியோரின் நினைவஞ்சலி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் காரியாலயத்தில் இடம்பெறும்.

2002 ஜூன் 5 இல் மு.சிவசிதம்பரம் இறந்தமையும், 1998 ஜூன் 5 இல் சி. நமசிவாயம் கொட்டடியில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பொதுக்கிணற்றை துப்புரவு செய்யுங்கள்



(கரணவாய்)

வதிரி அரசடிப்பகுதியிலுள்ள வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட பொதுக் கிணற்றினுள் பியர் ரின்கள், சாராயப்போத்தல்கள், குப்பை கூழமாக உட்புறமும் வெளிப்புறமும் காணப்படுகிறது.

இக் கிணற்றில் உள்ள குடிநீரை முன்பள்ளி சிறார்களும் பொதுமக்களும் பாவிப்பதாக தெரியப்படுத்தியுள்ளனர்.

எனவே உடனடியாக இக் கிணற்றினை துப்புரவு செய்து பாவனைக்கு உகந்ததாக மாற்றித் தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-60)

## வயோதிபப் பெண்ணின் கழுத்தில் கத்தி வைத்து தங்கச்சங்கிலி அபகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கச்சாய் வீதி தம்புதோட்டம் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8மணியளவில் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த வயோதிபப் பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து அவர் அணிந்திருந்த ஒரு பவுண் தங்கச் சங்கிலியையும் அவரது கையடக்கத் தொலைபேசியையும் அபகரித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த வீட்டில் வயோதிபப் பெண்ணிற்கு துணையாக இரண்டு பெண்கள் இருந்துள்ளனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு திருடர்கள் கத்தியைக் காட்டி மிரட்டி வீட்டினுள் பூட்டி விட்டு சங்கிலி,கையடக்கத் தொலைபேசியை அபகரித்த பின்னர் வீட்டினை சல்லடை போட்டு தேடி விட்டு வீட்டில் இருந்தவர்களை அறை ஒன்றினுள் பூட்டி விட்டு தப்பியோடியுள்ளனர். பின்னர் வீட்டில் இருந்தவர்கள் கூக்குரல் இடவே அயலவர்கள் வந்து கதவினைத் திறந்து மீட்டுள்ளனர்.

வயோதிபப் பெண்ணின் மகன் வெளிநாட்டில் இருந்து வந்து தங்கி விட்டு நேற்று முன்தினமே மீண்டும் புறப்பட்டதாகவும் இதனை அறிந்தவர்கள் தான் இந்த துணிகர திருட்டில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். திருட்டு,வாள் வெட்டு, வீட்டு உடைமைகளை சேதப்படுத்தல் போன்ற விஷமச் செயல்கள் சாவகச்சேரி பகுதியில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




## LED Panel ஒருங்கிணைப்பு தொழில்நுட்ப பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை LED பனல் ஒருங்கிணைப்பு தொழில்நுட்ப துறையில் உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதாவள நிலையத்தால் LED Panel ஒருங்கிணைப்பு தொழில்நுட்ப பயிற்சி நெறியானது எதிர்வரும் 7.06.2018 வியாழக்கிழமை, 08.06.2018 வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறியினை பின்பற்றுவதற்கு விருப்பமுள்ளவர்கள் அத்தினங்களில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## கற்றல் உபகரணங்கள் கொள்வனவு



(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் உப தவிசாளர் பொலிகண்டி மக்கள் படிப்பக பாலர் பாடசாலை கற்றல் உபகரண கொள்வனவுக்காக ரூபா 20 ஆயிரம் வழங்கினார்.

இவர் தனது ஊதியத்தை தனது வட்டார பொது அமைப்புகளுக்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-60)

# சாவகச்சேரி வைத்தியசாலை மதிலை உயர்த்த வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சுற்று மதிலை உயர்த்த வேண்டிய தேவை இருப்பதாக வைத்தியசாலையின் அத்தியட்சகர் பசுபதி அச்சுதன் தெரிவித்தார்.

அண்மையில் யாழில் இடம்பெற்ற திணைக்கள தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடலின் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சுற்று மதிலின் உயரம் போதுமானதாக இல்லை. சுற்று மதிலை உயர்த்துவதன் மூலம் சில அசம்பாவிதங்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க முடியும்.

அத்துடன் தற்போது வைத்தியசாலையில் குருந்தம்(மது வெறுப்பு சிகிச்சை நிலையத்தின்) கூரைப் பகுதி சேதமடைந்து காணப்படுகின்றன.

அதன் கூரை வேலைகளை புனரமைக்க வேண்டிய தேவை உள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உள்ள மோட்டர் இயந்திரம் வலு, மின்சாரம் தடைப்படும் நேரத்தில் போதுமானதாக இல்லை.

இதனால் மின்சாரம் தடைப்படும் நேரங்களில் எக்ஸ்ரே எடுத்தல் போன்ற சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இந்த குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு வைத்திய அத்தியட்சகர் அச்சுதன் அதிக வலுவுடன் கூடிய மோட்டர் இயந்திரம் ஒன்றை வைத்தியசாலைக்கு பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பல்கலை.மாணவனின் கையை உடலுடன் இணைக்க முடியாது

(கொழும்பு)

பெல்மடுல்ல பிரதேசத்தில் பேருந்தில் சென்ற போது பல்கலைக்கழக மாணவனொருவரின் கை துண்டாகிய சம்பவம் நேற்று முன்தினம்பிற்பகல்பதிவாகியிருந்தது.

இந்த நிலையில் குறித்த மாணவனின் துண்டிக்கப்பட்ட கையை மீண்டும் உடலுடன் இணைக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய நிபுணர் சமிந்தி சமரகோன் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி - பதுளை வீதியில், பெல்மதுளை, சன்னஸ்கம கிரிவெல்தெனிய சந்தியில் வைத்து இந்த சம்பவம் ஏற்பட்டிருந்தது.

குறித்த மாணவன் தனது கையை பேருந்து ஜன்னலுக்கு வெளியில் வைத்தவாறு சென்ற போது, பாரவூர்தியொன்று மோதியதால் மாணவனின் கை துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் மாணவன், துண்டிக்கப்பட்ட கையுடன் இரத்தினபுரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் குறித்த மாணவனின் கையை மீண்டும் உடலுடன் இணைக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது . (இ-7)

# ஐந்து வயதுச் சிறுமி கடத்தல் நகரசபைத் தலைவர் உட்பட நால்வர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

5 வயது சிறுமியை கடத்தி விற்பனை செய்தனர் என்ற் குற்றச்சாட்டில், தலவாக்கலை-லிந்துலை நகர சபையின் தலைவர் உள்ளிட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. இந்த நால்வரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரபத்தனை போட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த 5 வயதுச் சிறுமியை 2017 ஆம் ஆண்டு கடத்தி, விற்பனை செய்தனர் என்பது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்தே இந்த நால்வரும் கைதுசெய்யப்பட்டனர்.

தலவாக்கலை-லிந்துலை நகர சபையின் தலைவர் அனகிபுர அசோக சேபால, நகர சபையின் உறுப்பினர் பஹல விதானகே இஷார அனுருத்த மஞ்சநாயக்க உள்ளிட்ட நால்வரே நுவரெலியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வீதிவிளக்குகளை மாற்றுமாறு பிரதேச சபையிடம் கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப்பகுதியில் காணப்படும் வீதி விளக்குகள் பல ஒளிராத நிலையில் இருக்கின்ற போதும் இது குறித்து பிரதேச சபையினர் கவனம் செலுத்தவில்லை என பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நெல்லியடி நகரில் இருந்து கொடிகாமம் வீதி, வதிரி வீதி மற்றும் விக்னேஸ்வரா வீதி ,கரணவாய் வீதி பேருந்து நிலைய பகுதிகளில் உள்ள வீதி விளக்குகள் தொடர்ந்தும் எரியாத நிலையில் காணப்படுகின்றன.

நெல்லியடி நகரில் வெளியிடங்களுக்கு செல்லும் பயணிகள் இரவு நேரங்களில் பேருந்து நிலையத்தினை பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் இரவு வேளையில் வரும் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே செயலிழந்துள்ள வீதிவிளக்குகளை மாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-60)








## வேலையாள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்டவேலை செய்வதற்கு ஆடு, மாடு வளர்ப்பில் அனுபவமுள்ளவர்கள் தேவை. குடும்பமாக தங்குவதற்கு வசதியுண்டு. சம்பளம் 30.000/-, சாப்பாடு, தங்குமிடம் உண்டு.

(I-2806) தொடர்புகளுக்கு: 077 168 1697, 076 620 5322

## விற்பனைக்கு

Rollei 7எனும் வகையைச் சேர்ந்த கமரா விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 075 853 5451

(4286)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2 ஆம் பாதம்
கி.பா: 33 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA தனியார் தொழில்
தொ.இ: B/8614

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 52 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:IT அமெரிக்கா PR
எதிர்பார்ப்பு: எழுத்துடன் குழம்பியது
தொ.இ: B/8615

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 2 ஆம் பாதம்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:O/L சொந்தத் தொழில்
தொ.இ: B/8617

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1ஆம் பாதம்
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BSc பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/8618

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரோகினி 4 ஆம் பாதம்
கி.பா: 62 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: டிப்ளோமா அரச தொழில்
தொ.இ: G/8632

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1ஆம் பாதம்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:BA படிக்கிறார்
தொ.இ: G/8635

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3ஆம் பாதம்
கி.பா: சூரிசெவ் 5 இல்
உயரம்: 148cm
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/8636

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2ஆம் பாதம்
கி.பா: 45 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி
தொ.இ: G/8642

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# யுத்த காலத்தில் மற்றைய அரசியல்வாதிகளை போன்று இந்தியாவில் ஓடி ஒளியவில்லை

## அமைச்சர் மனோகணேசன் மன்னாரில் தெரிவிப்பு



(மன்னார்)

நாட்டில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் இன ஒற்றுமையை தோற்றுவிக்கும் வகையில் தமது செயற்பாடுகள் இடம்பெற்று வருவதோடு,வடக்கு கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிங்கள மொழி மூலம் சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தும் பாரிய பொறுப்பை தாம் மேற்கொண்டு வருவதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற அரச,அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் தலைமையில் இடம் பெற்ற குறித்த விசேட கலந்துரையாடலின் போது அமைச்சர் மனோ கணேசன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தேசிய ஒருமைப்பாடு,நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய உட்பட அமைச்சின் பிரதிநிதி கள், அரச அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அருட்தந்தையர்கள் என பலர் கலந்து கொணடிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் கடந்த காலங்களில் அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதோடு, குறித்த அமைப்புக்கள் கடந்த காலங்களில் முகம் கொடுத்த நெருக்கடி தொடர்பிலும்,தற்போதைய அவர்களின் செயற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் யுத்தகாலத்தில் மற்ற அரசியல்வாதிகளை போல இந்தியாவில் ஓடி ஒளியவில்லை எனவும் எனக்கு வேகம் மட்டும் இல்லை விவேகமும் இருக்கின்றது.

கண் மூடித் தனமான வேகமாக மட்டும் இருந்தால் அது ஒரு விபத்தை ஏற்படுத்தி நானும் அழிந்து என் சார்ந்தவர்களையும் அழித்து விடும்.

எனவே வேகமாக மட்டுமல்ல விவேகமாக சிந்தித்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# கொழும்பு மாநகரத்திற்கு அருகில் விசேட அபிவிருத்தித் திட்டம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

இதனடிப்படையில் கொழும்பு மாநகரத்திற்கு அருகில் விசேட அபிவிருத்தித் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

உலக வங்கி, இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக 321 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட தொகையில் உலக வங்கி 213 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிவாரணக் கடன் அடிப்படையில் வழங்கவுள்ளது.அரசாங்கம் 108 மில்லியன் அமெரிக்க டொலர்களை இதற்குச் செலவிடவுள்ளது. 2020ம் ஆண்டளவில் இந்தத் திட்டம் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புகையிரத ஊழியர்கள் மீண்டும் போராட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கையினை எழுத்துமூலம் தெரிவிக்காவிடின் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக புகையிரத தொழில்நுட்ப சேவைகள் சாங்கம் அறிவித்துள்ளது.

சம்பள உயர்வு உட்பட 3 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 29 ஆம் திகதி முதல் 48 மணி நேர போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக புகையிரத தொழில்நுட்ப சேவை தொழிற்சங்கம் அறிவித்திருந்தது.

இருப்பினும் பின்னர், புகையிரத ஊழியர்களின் விடுமுறைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்படும் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்ததை அடுத்து அமைச்சருடன் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றமையினால் இந்த போராட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் துரிதமாக தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என தெரிவித்த போதும், இதுவரை தீர்வு கிடைக்கப் பெறவில்லை என தெரிவித்த அச் சங்கம், நிறைவேற்று குழு கூட்டத்தின் பின்னர் பணிப்புறக்கணிப்பு தொடர்பில் தீர்மானிக்கப்படும் என அறிவித்துள்ளது. (இ-7)

# பாண்டியன்குளம் ஆரம்ப வித்தியாலயத்தின் வளாகம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் துப்புரவு



(கண்டாவளை)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் ஆரம்ப வித்தியாலயத்தின் வளாகம் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாண்டியன்குளம் ஆரம்ப வித்தியாலய வளாகத்தையும் அதனை சூழவுள்ள பகுதிகளையும் பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் துப்பரவு செய்து வருகின்ற போதும், இந்தப்பகுதியில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக மீளவும் துப்புரவு செய்யவேண்டிய நிலை காணப்பட்டது.

இதனையடுத்து பாடசாலை வளாகத்தை வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து மாணவர்களின் நன்மை கருதி பாடசாலை மைதானத்தையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் துப்புரவு செய்துள்ளனர். (2-315)

# குழந்தை கடத்தல் விவகாரம்; சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

வவுனியா, குட்செட் வீதியில் உள்ள வீடு ஒன்றில் 8 மாத ஆண் குழந்தை ஒன்று கடத்தப்பட்டு புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பாக இரண்டு பெண்களைக் கைது செய்த பொலிஸார் நேற்று மேலும் ஒரு சந்தேக நபரான நந்தகோபால் கோபால் (வயது33) என்ற) புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை 2 மணியளவில் வீட்டிற்குள் நுழைந்த 6 நபர்களினால் 8 மாத ஆண் குழந்தை கடத்தப்பட்டு 3 தினங்களின் பின்னர் புதுக்குடியிருப்புப் பகுதியில் வைத்து மீட்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அன்றைய தினம் இரண்டு பெண்களைக் கைது செய்த பொலிஸார் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையையடுத்து மேலும் ஒரு நபரைக் கைது செய்துள்ளதாகவும், இவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

# நிறைவாழ்வு மையத்தின் மருத்துவ முகாம்



(விசுவமடு)

நிறைவாழ்வு மையத்தின் மருத்துவ முகாம் விசுவமடுவில் இடம்பெற்றது. தென்னிந்திய திருச்சபை நிறைவாழ்வு மையத்தின் ஏற்பாட்டில் குறித்த மருத்துவ முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த மருத்துவமுகாம் மாலை 5 மணிவரை இடம்பெற்றது. விசுவமடு தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த மருத்துவமுகாமில் 180 இற்கு மேற்பட்ட மக்கள் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இரு வைத்தியர்கள் அடங்கிய குழுவினர் குறித்த நடமாடும் மருத்துவமுகாமில் கலந்து மக்களிற்கு மருத்துவ சேவை வழங்கியிருந்தனர்.

இதன்போது வெளிநோயியல் மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டதுடன், சுகாதாரம், மருத்துவ ஆலோசனைகள் என பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டன.

இம்மருத்துவ முகாமில் விசுவமடு பகுதியை அண்மித்த பல பகுதிகளிலிருந்தும் மக்கள் சேவையை பெற்றனர்.

எதிர்வரும் காலங்களில் கல்மடுநகர், கண்டாவளை, பொன்நகர் ஆகிய பகுதிகளில் மருத்துவ முகாம்களை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. (2)

# காவலாளிகள் நியமிக்கப்படாமையால் பாடசாலையின் சொத்துக்கள் களவாடல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளில் காவலாளிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினால் பாடசாலைகளின் சொத்துக்கள் களவாடப்படுதல் போன்ற சம்பவங்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சிவலயக்கல்விப் பணிமனைக் குட்பட்ட பல பாடசாலைகளில் காவலாளிகள் நியமிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக, பூநகரி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட ஜெயபுரம் பாடசாலையில் காவலாளி நியமிக்கப்படாமையினால் அந்தப் பாடசாலையிலிருந்து பல பெறுமதியான பொருட்கள் கடந்த காலங்களில் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன.

தற்போது இப்பிரதேச மக்களால் பாடசாலைக்கான ஒரு காவலாளி தற்காலிகமாக நியமிக்கப்பட்டு மாணவர்களின் பெற்றோர்களால் அவருக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நிரந்தரமான காவலாளி ஒருவரை நியமிக்குமாறு மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட 104 பாடசாலைகளில் 46 பாடசாலைகளுக்கு மட்டுமே காவலாளிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன.

ஏனைய 64 பாடசாலைகளுக்கான காவலாளி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாகவும் வலயக்கல்வி பணிமனை நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏனைய ஆளணித் தேவைகளும் பூர்த்தி செய்யவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-35)

# கல்வி எமது இனத்தின் மிகப்பெரும் மூலதனம்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

(கண்டாவளை)

கல்வி என்பது எமது இனத்தின் மிகப்பெரும் மூலதனம் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிராஞ்சி அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் அகிலன் பவுண்டேஷன் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் நடைபெறவுள்ள மாலை நேர கணனி வகுப்புக்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எந்த ஒரு இனத்தை அழிப்பதாக இருந்தாலும் அழிக்க நினைப்பவர்கள் முதலில் அந்த இனத்தின் கல்வியில்தான் கைவைப்பார்கள். கல்வித்தரப்படுத்தல் முறை ஆரம்பிக்கப்பட்டதால் தான் அரசிற்கு எதிராக இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்.




மாறி வரும் தொழில்நுட்ப உலகிற்கு ஏற்ப நாமும் தொழில்நுட்ப அறிவில் சிறந்து விளங்கி எம் இனத்தின் இருப்பை தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் தான் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் தம் இனத்தின் எதிர்கால இருப்பை உணர்ந்து இவ்வாறாக கல்விக்காக உதவி செய்கிறார்கள்.

குறித்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் லதீஸ்குமார், அகிலன் பவுண்டேஷன் நிறுவனத்தின் இயக்குநர் பிரபாகரன்,பிரதேச சபை உறுப்பினர் ஜெயச்சித்திரா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிராஞ்சி பிரதேச அமைப்பாளர் கிருஸ்ணராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.(2-315)

# பிலவுக்குடியிருப்பில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டப்பணி

(கண்டாவளை)

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாதிரி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிலவுக்குடியிருப்பு பகுதியில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு வீட்டுத்திட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பிலவுக்குடியிருப்பு பகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்வின் பின்னர் கேப்பாபிலவு மாதிரிக்கிராமத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கு சொந்தமான 42.5 ஏக்கர் காணிகளும் விமானப்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில் தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி பிலவுக்குடியிருப்பு மக்கள் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் ஒரு மாத காலம் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தியதையடுத்து 84 குடும்பங்களுக்கு சொந்தமான 42.5 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டு



மீள்குடியேறிய நிலையில் தற்காலிக வீடுகளில் நீண்டகாலமாக தங்கியிருந்த மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாதிரி வீடமைப்பு திட்டத்தின் கீழ் தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

இருந்தபோதும், இதன் பணத்தொகையை அதிகரித்து வழங்குமாறு பயனாளிகள் கோரியுள்ளனர்.(2-315)

# கிளிநொச்சியில் விழிப்புணர்வு பேரணி

2018 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களை பதிவு செய்யும் விழிப்புணர்வு பேரணி ஒன்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.


கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகத்தினால் இந்த விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டுள்ளது.

பளை பொது மைதானத்தில் இருந்து ஆரம்பமாகிய குறித்த பேரணி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது.

இதில், மக்களுக்கு துண்டுப்பிரசுரங்கள் கொடுக்கப்பட்டதுடன், வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பேரணி நடைபெற்றுள்ளது. மேலும், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# தபால் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு





(பனிக்கன்குளம்)

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து தபால்துறை ஊழியர்கள் மேற்கொண்டு வரும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் வவுனியாவில் தபால்துறை முடங்கி காணப்படுகின்றது.

"தகுதிகாண் காலம் நிறைவடைந்த 11 வகுப்பு அஞ்சல் சேவை உத்தியோகத்தர்களின் நியமனங்களை உடனடியாக உறுதி செய், 2018 ஜனவரி 10 ஆம் திகதி வாக்குறுதியளித்த கெபினெட் பத்திரிகைக்கு உடனடியாக ஒப்புதல் வழங்கு, கணனி தொழில்நுட்பக் கோளாறுகளை உடனடியான சீர் செய், 2012 பொறுப்பு பரீட்சையை நடைமுறைப்படுத்தல், பொறுப்புக் கொடுப்பனவை உடனடியாக பெற்றுக்கொடு, பொறுப்பு பரீட்சையில் சித்தியடைந்த முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு எம்.என் - 7 வேதன மட்டத்தைப் பெற்றுக் கொடு, விரிவுரையாளர் கொடுப்பனவை புதிய சம்பளத்திற்கு பெற்றுக்கொடு" போன்ற கோரிக்கையை முன் வைத்து நேற்று 4 ஆம் திகதி நள்ளிரவு 12.00 தொடக்கம் இன்று நள்ளிரவு 12.00 வரையிலான இரண்டு நாட்கள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக வவுனியா பிரதான தபால் நிலையம் உட்பட அனைத்துத் தபால் நிலையங்களும் மூடப்பட்டு காணப்படுகின்றன.

ஊழியர்கள் பணியில் இன்மையால் பல்வேறு தேவைகளுக்காக வும் தபால் நிலையங்களுக்கு வருபவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். (இ-281)

# 2 ஆயிரத்து 710 குடும்பங்களுக்கு நிலையான வாழ்வாதார உதவிகள் தேவை


(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள ஐயாயிரத்து 268 குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளபோதும் 2 ஆயிரத்து 36 குடும்பங்களுக்கான வீட்டுத் தேவைகள் காணப்படுவதாக பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 16 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இதுவரை 8 ஆயிரத்து 453 குடும்பங்கள் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றன. இந்நிலையில் ஐயாயிரத்து 268 குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடுகளும் 805 பகுதியளவில் சேதமடைந்த வீடுகளும் அமைக் கப்பட்டுள்ளதுடன் ஐயாயிரத்து 243 குடும்பங்களுக்கு கிணறுகளும் ஆறாயிரத்து 554 குடும்பங்களுக்கு மலசல கூடங்களும் ஐயாயிரத்து 743 குடும்பங்களுக்கு நிரந்தரமான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2 ஆயிரத்து 36 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்க வேண்டியிருப்பதுடன், பகுதியளவில் சேதமடைந்த 344 வீடுகளையும் திருத்த வேண்டியுள்ளதாகவும் மூவாயிரத்து 210 குடும்பங்களுக்கான கிணறுகள், ஆயிரத்து 799 குடும்பங்களுக்கான மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டியிருப்பதுடன் 2 ஆயிரத்து 710 குடும்பங்களுக்கு நிலையான வாழ்வாதார உதவிகள் வழங்க வேண்டியிருப்பதாகவும் பிரதேச செயலகத்தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# பேருந்து தரிப்பிடத்தின் மீது கழிவு ஒயில் வீச்சு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாலிநகர்ப்பகுதியில் பொதுமக்களின் தேவை கருதி தனியார் ஒருவரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பேருந்துத் தரிப்பிடத்தின் மீது கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது.

பாலிநகர் சந்தியில் அதிகளவான பயணிகள் கூடுகின்ற ஓர் இடமாகக் காணப்படுவதுடன், பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் மற்றும் ஏனைய கிராமங்களுக்கு செல்லுகின்ற பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்கின்ற வேண்டிய போதும், குறித்த பகுதியில் பேருந்து தரிப்பிடம் எதுவும் இல்லாத நிலையில் தனியார் ஒருவர் இப்பகுதியில் பேருந்துத்தரிப்பிடம் ஒன்றை அமைத்துமக்கள் பாவனைக்காக கையளித்து நீண்ட காலமாக பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் விசமிகளால் குறித்த பேருந்து தரிப்பிடத்தின் இருக்கைகள் மற்றும் சுவர்கள் மீது கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது. இது பல்வேறு தரப்புக்களிடம் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (2-315)

# ஞாயிறு நற்கருணைப் பவனி



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு குழந்தையேசு ஆலயத்தில் இருந்து இரணைப்பாலை தேவாலயம் வரையான ஞாயிறு நற்கருணைப்பவனி நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு குழந்தை யேசு ஆலயத்திலிருந்து திருச்சொரூப பவனியுடன் ஆரம்பமானது. அங்கிருந்து புதுக்குடியிருப்பு பிரதான வீதி ஊடாக புதுக்குடியிருப்பு சந்தி வரை சென்று அங்கிருந்து இரணைப்பாலை வழியாக இரணைப்பாலை தேவாலயம் வரை சென்று அங்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்றுள்ளன.

இதில் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகியவற்றின் பங்குத்தந்தை, பங்கு மக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு சூழல் பாதுகாப்பின் அவசியம்




### அறிமுகம்

2015 செப்டெம்பரில் நியூயோர்க்கில் நடந்த ஐக்கிய நாடுகளின் பேணத்தகு அபிவிருத்தி மாநாட்டில் உலகத் தலைவர்களால் உருவாக்கப்பட்ட புதிய உலகிற்கான நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள் வெளியிடப்பட்டது. இது 17 நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களை உள்ளடக்கியது. இவை ஒவ்வொன்றும் 169 இலக்குகள் வரைக்கும் சேர்க்கப்பட்டிருந்த பல்வேறு இலக்குகளை ஒன்றாகக் கொண்டிருந்ததுடன் நிலைத்திருக்கும் அபிவிருத்திப் பிரச்சினைகளின் பரந்துபட்ட வீச்சினை உள்ளடக்கியிருந்தது. இவை கி.பி. 2030ஆம் ஆண்டைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்கள் ஐந்து விடயங்களில் விரிவாகக் கவனம் செலுத்துகின்றது. அவை மக்கள், கோள், சுபீட்சம், சமாதானம், பங்குடைமை என்பனவாகும். எனவே நிலைத்திருக்கும் அபிவிருத்தி என்றால் என்ன? அதற்கும் சூழலுக்கும் என்ன தொடர்பு என்பது தொடர்பாக அறிந்து விழிப்புடன் செயற்பட வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும் ஜூன் 5 ஆம் திகதி உலகச் சுற்றுச் சூழல் தினம் என்பதாலும் இக் கட்டுரை வரையப்படுகின்றது.

### நிலைத்திருக்கும் அபிவிருத்தி/பேண்தகு அபிவிருத்தி (Sustainable Development) என்றால் என்ன?

குறித்த எதிர்கால சமூகம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் இயலுமையை விட்டுக் கொடுக்காத வண்ணம் நிகழ்கால சந்ததி தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதனைக் குறிக்கும்-Brundland Commision

"Sustainable development is development that meets the needs of the present without compromising the ability of future generations to meet their own needs. It contains within it two key concepts:

- the concept of needs, in particular the essential needs of the world's poor, to which overriding priority should be given; and
- the idea of limitations imposed by the state of technology and social organization on the environment's ability to meet present and future needs."

வேறுவிதமாகக் கூறுமிடத்து பொருளாதார, சமூக, மற்றும் சூழல் ஆகிய மூன்று பாகங்களிலும் சமநிலையாக அபிவிருத்தி அடையப்படுதல் நிலைத்திருக்கும் அபிவிருத்தியாகும்.

நிலைத்திருக்கும் அபிவிருத்தியின் முக்கிய மூன்று தூண்கள் (Pillars).

பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு என்பன நிலைத்திருக்கும் அபிவிருத்தியின் முக்கிய மூன்று தூண்களாகக் கருதப்படுகின்றன.

### நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு அவசியமான மூலதனங்கள்

நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு மனித மூலதனம், பௌதீக மூலதனம், இயற்கை மூலதனம், சமூக மூலதனம் போன்ற நான்கு மூலதனங்கள் மிகவும் முக்கியமாகும்.

நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு சூழல் பாதுகாப்பின் அவசியம்.

சூழல் பாதுகாப்பை ஏற்படுத்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் என்பன ஒரு பொருளாதாரத்திற்கு மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் பொருளாதாரம் தொகையளவில் விருத்தியடைந்த போதிலும் எதிர்கால பரம்பரையின் சுபீட்சத்திற்கு தடையாக இருக்குமாயின் அவ் அபிவிருத்தியால் பயன்கள் குறைவாகவே காணப்படும். இதனால் நிலைத்திருக்கும் அபிவிருத்தி தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டியிருப்பதுடன் நாடொன்றின் எதிர்கால முன்னேற்றமும், மக்களின் வாழ்க்கை நிலைமையின் தரமும் நிர்ணயிக்கப்படுவது சூழலின் தர ரீதியிலான தன்மையினாலாகும். நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி எண்ணக்கருவின் மூலம் முயற்சிக்கப்படுவது பொருளாதார வளர்ச்சியிலும் இயற்கை வளங்களின் விருத்தியிலும் சூழலிலும் சமநிலையான தன்மையினை ஏற்படுத்துவதாகும். இத்துடன் நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் மானிட அபிவிருத்தியின் அவசியமும் உணரப்பட வேண்டும் என்பதற்காக இன்று உலகப் பொருளாதாரங்கள் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியில் அதிகளவு ஈடுபாடு கொள்கின்றன.

உலக நாடுகளில் இன்று இயற்கை வளங்கள் தேய்வடைவதைத் தவிர்ப்பதற்கும் சூழல் பாதிப்புக்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்காகவும் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பல்வேறு செயற்றிட்டங்களை செயற்படுத்த ஆரம்பித்துள்ளன. அவற்றுக்கான சில உதாரணங்களாக,

- ஓசோன் படையைப் பாதிக்கும் குளோரோ புளோரோ காபன் வாயுவின் பாவனையைத் தடுத்தல்.
- பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தல்
- கைத்தொழிற்சாலைகளால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கான சட்டங்களைப் பிறப்பித்தல்.
- மோட்டார் வாகனங்களின் புகைகளைக் கட்டுப்படுத்தலுக்கான புகைப்பரிசோதனை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இந்த வகையில் உலக சுற்றுச் சூழல் தினம் கொண்டாடப்படுவது நிலைத்திருக்கும் அபிவிருத்தியின் முக்கிய தூண்களில் ஒன்றான சூழல் பாதுப்புக்கு உதவும் மற்றும் முக்கிய மூலதனங்களில் ஒன்றான இயற்கை மூலதனத்தினைப் பாதுகாக்கவும் உதவும். எனவே சூழல் பாதுகாப்புத் தொடர்பாக நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இங்கு இயற்கை மூலதனம் என்றால் என்ன என்பதனை நாம் முதலில் புரிந்து கொள்வோமாயின் இயற்கையிலிருந்து உற்பத்திக்கென கிடைக்கப்பெறுகின்ற உற்பத்தி விளைதிறனைக் கூட்டக் கூடிய இயற்கை வளங்களை இயற்கை மூலதனமாகக் கருதலாம்.

இயற்கையால் வழங்கப்படும் சக்தி வளங்கள், கனியவளங்கள், மரவளங்கள், மரமல்லா காட்டு வளங்கள், புல்நிலங்கள், சேற்று நிலங்கள் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இயற்கை மூலதனமானது மீள உருவாக்கக் கூடிய இயற்கை மூலதனமாகவோ, மீள உருவாக்க முடியாத இயற்கை மூலதனமாகவோ காணப்படலாம். தற்காலச் சமூகம் வள முகாமை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஏனெனில் நாம் வளங்களைச் சரியாகத் திட்டமிட்டுப் பயன்படுத்தாது விடுவோமாயின் எதிர்கால சந்ததியினர் தமது தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்யத் தேவையான வளங்கள் அற்றுப் போகும். அதாவது மீளும் வளங்கள் கூட மீளா வளங்களாக மாற்றமடையக் கூடிய நிலைமை ஏற்படும். மேலும் வளங்களை உருவாக்குதல் தொடர்பான செலவினங்களும், வளங்களைப் பாதுகாத்தல் தொடர்பான செலவினங்களும் அதிகரிக்கும் பொது வளங்களின் மிகையான பயன்பாடும், பொது நிலத்துன்பமும் ஏற்பட்டு பொருளாதார வளர்ச்சியும் நிலைத்திருக்கும் அபிவிருத்தியும் பாதிப்படையும். மனித விருப்பங்கள் வரையறுக்கப்படாத நிலையும் வளங்கள் அருமையாக உள்ள நிலையும் காணப்படும் போது நாங்கள் வளங்களை சரியாக முகாமை செய்து பயன்படுத்தாவிடின் எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

சரியான வள முகாமைத்துவமின்மையானது இயற்கைச் சமநிலையைக் குழப்புவதுடன் இயற்கை அனர்த்தங்களுக்கும் வழிவகுக்கும். நாளாந்தம் நமது தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பதைரப்பட்ட பொருட்களையும் சேவைகளையும் நுகருகின்றோம், மற்றும் நுகர்வுக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்கின்றோம். இதனால் வெளியேறும் கழிவுகளால் சூழல் மாசடைதல், சூழலியல் தேய்வுகள் என்பன ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. எனவே கழிவுகளை உரிய முறையில் தரம் பிரிப்பதன் மூலம் அவற்றில் மீள் சுழற்சிக்குப் பயன்படுத்தக் கூடியவற்றை மீளப்பயன்படுத்தும் போதும் தொழிற்சாலைக் கழிவுகளை உரிய முறையில் வெளியேற்றுவதாலும் சூழல் மாசடைவது தவிர்க்கப்படுவதுடன் பச்சைத்தேசிய உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்து பசுமையான பொருளாதாரத்தினை உருவாக்க முடியும்.

எமது யாழ்ப்பாணம் முன்னைய காலத்தில் மிகவும் அழகான பகுதியாக இருந்தது. யாழ்ப்பாண நகரத்தைப் போல சிங்கப்பூரை உருவாக்க வேண்டும் என்று அப்போதைய சிங்கப்பூர் பிரதமர் விரும்பினார். ஆனால் இன்று அந்த நிலை மாறி சிங்கப்பூரை வியந்து பார்க்கும் அளவுக்கு அந்த நாட்டினது வளர்ச்சி வியாபித்துள்ளது. சிங்கப்பூரின் தலா வருமானமும் உயர்வடைந்துள்ளது. சிங்கப்பூர் போல நாமும் எமது நாட்டை மாற்றயமைக்க வேண்டும். எமது நாட்டில் காணப்படும் வளங்களை உச்ச வினைத்திறனுடனும், விளை திறனுடனும் பயன்படுத்துவதுடன், வள் வீண் விரயங்களையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சூழலைப் பாதுகாக்க பொது அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

எனது ஊரில் உள்ள சனசமூகநிலையங்கள் பலவேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. உதாரணமாக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் சூழல் பாதுப்பினை ஏற்படுத்தும் நோக்குடன் அண்மையில் வீதி ஓரங்களில் சுமார் நூறு மரங்களை நட்டதுடன் அவற்றிற்கு கூடுகளும் அமைத்து பாதுகாத்து பராமரித்து வருகின்றது. இதேபோன்று சமூகப்பாதுகாப்பு தொடர்பான பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. இது இயற்கை வளத்தைப் பாதுகாப்பதற்கு உதவும். இவ்வாறு ஒவ்வொரு சனசமூக நிலையங்களும், பொது அமைப்புகளும் மரங்களை நடுதல், சூழல் முகாமை தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.

உக்கும் கழிவுகள், உக்காத கழிவுகள் தொடர்பான விளக்கங்களை அளித்தல், பிளாஸ்ரிக் கழிவுகளால் சமூகத்திற்கு ஏற்படும் விளைவுகளைத் தெளிவுபடுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு உதவுதல் வேண்டும். இன்றைய சமூகம் வாசிப்புக் குறைந்த சமூகமாக மாறியுள்ள நிலையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த இத்தகைய சனசமூக நிலையங்கள் வீதி நாடகங்கள், விழிப்புணர்வு பேரணிகளை நடத்துவது மக்களை சிறந்த முறையில் வழிப்படுத்தும் என்பது எனது நம்பிக்கை.

இயற்கையாக ஏற்படும் அனர்த்தங்கள், இயற்கையின் கொடையாகக் கிடைத்துள்ள வளங்களை நிலைகாத் தபடி பயன்படுத்துதல், வளிக்கோளத்தின் வெப்பம் அதிகரித்தல், பனிமலைகள் உருகுதல், காலநிலை மாற்றம், காடழிப்பு, நீர்மாசடைதல், ஓசோன் படையில் ஓட்டை ஏற்படல் மற்றும் சூழலில் உள்ள வளங்களை மிகையாகப் பயன்படுத்தல் போன்ற நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திப் பிரவேசத்திற்குப் பாதிப்பினை ஏற்படுத்தும்.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று ஐக்கிய நாடுகள் சபையால் ஆண்டுதோறும் ஜூன் 5 ஆம் திகதி "உலக சுற்றுச் சூழல்" தினம் சர்வதேச ரீதியில் கொண்டாடப்படுகின்றது. இதன் நோக்கம் சுற்றுச் சூழல் பற்றி உலகத்தின் கவனத்தை ஈர்த்து. விழிப்புணர்வை ஏற்படுத்திச் சூழல் பாதுகாப்பில் அனைவரினதும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வேண்டுவதே ஆகும்.

பூமி எதிர்கொண்டுள்ள சுற்றுச் சூழல் சீர்கேடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து கவனம் செலுத்த வேண்டியவற்றின் அடிப்படையில் வருடா வருடம் சூழல் தினத்திற்கான கருப்பொருளானது தீர்மானிக்கப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு கருப்பொருளாக "மக்களை இயற்கையோடு இணைத்தல்" (Connecting People to Nature) என்பது தேர்வு செய்யப்பட்டது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டுக்கான கருப்பொருளாக "பிளாஸ்ரிக் மூலம் மாசடைதலில் வெற்றி கொள்ளல் (Beat Plastic Pollution) கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

ஜூன் 5 ஆம் திகதி மட்டும் இதனை நாம் கருத்தில் கொள்ளாது நாளாந்தம் எமது செயற்பாடுகளை உரிய முறையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். இயற்கையோடு இணையக் கூடிய வகையிலும் திட்டங்களை வகுக்க வேண்டும். பிளாஸ்ரிக் பாவனையை இயன்றளவு தவிர்க்க வேண்டும். எமது முன்னோர்கள் பிளாஸ்ரிக் பாவனையை மிகவும் குறைந்த மட்டத்தில் வைத்திருந்தனர். இன்று உலகம் முழுவதும் குறைந் தது வருடாந்தம் 5 ரில்லியன் (5trillion) இற்கு மேலான பிளாஸ்ரிக்பைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு நிமிடமும் ஒரு மில்லியன் பிளாஸ்ரிக் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இது எமது ஆரோக்கியத்தை பாதிப்பதுடன் எதிர்கால சந்ததியினரின் வாழ்வினையும் பாதிப்பதாகவே அமையும்.

முன்னைய கால மக்கள் இயற்கையிலிருந்து உணவுகளைப் பெற்று எமது காலநிலைக்கேற்ப உணவு முறைகளைக் கையாண்டு நீண்ட காலம் நலமாக வாழ்ந்தார்கள். வாழை இலைகளை உணவு பரிமாறுவதற்கும், உணவுகளை பொதி செய்வதற்கும் பயன்படுத்தி ஆரோக்கியமான நீண்ட ஆயுளில் வாழ்ந்தார்கள். தொற்றா நோய்களின் ஆதிக்கம் அப்போது மிக மிகக் குறைவாகவே காணப்பட்டன. பொலித்தீன் பாவனை, பிளாஸ்ரிக்பாவனை மிகவும் குறைவாகக் காணப்பட்டன. இன்று இந்த நிலை மாறியுள்ளது. இதனால் மனிதரின் ஆயுள் எதிர்பார்க்கை குறைவடைவதுடன் மனித வளத்தின் மீதான அழுத்தங்களும் அதிகரிக்கும். இன்று இலங்கையின் பிறப்பிலிருந்து வாழ்நாள் எதிர்பார்ப்பு 2015 ஆம் ஆண்டு த்தரவுகளின்படி (மூலம்: 2016 ஆம் ஆண்டு மத்திய வங்கி ஆண்டறிக்கை) 75 வருடங்களாக காணப்படுகின்றது. நாம் இயற்கையோடு இணை யாது விடுவோமாயின் இந்நிலை குறைவடைந்து ஆயுட்காலம் குறைந்த குடித்தொகை உருவாகும். இது பொருளாதார வளர்ச்சிக்கும் நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கும் பாதிப்பாக அமையும். எனவே நாம் இயற்கையைப் பாதுகாத்து இயற்கையுடன் இணைந்து வாழ்வதற்குப் பழக வேண்டும். குறித்த பிரதேசங்களில் காணப்படும் வளங்கள் அப்பிரதேசத்தின் மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும். இதனைத்தான் "படைத்தவன் படியளப்பான்" என எமது முன்னோர்கள் குறிப்பிட்டார்கள் போலும். நாம் பிறந்த பிரதேசத்திலேயே நாம் வாழ்வதற்கான சகல வளங்களும் உண்டு. எமது தேவைக்கேற்ப அவை கிடைக்கப்பெறும்.

இதற்கு நாம் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். வீட்டுக்கொரு மரமாவது நடு வோம். ஒவ்வொரு வீடுகளில் கழிவுகளை தரம் பிரிப்பதற்கான வழிமுறைகளைக் கையாண்டு அவற்றைத் தரம் பிரிப்போம். வளர்ச்சியடைந்த நாடுகள் எவ்வாறு தமது நாட்டில் கழிவை உரியமுறையில் முகாமை செய்கின்றனவோ அவ்வாறு நாமும் முயற்சிகளை எடுப்போம். சட்ட திட்டங்களை மதிப்போம்.

குப்பை கூளங்களை உரிய முறையில் தரம் பிரிப்பதற்கு ஒவ்வொரு வீடுகளிலும் குறைந்தது ஐந்து பைகளையாவது பேணுங்கள் (அதுவும் பிளாஸ்ரிக், பொலித்தீன் அற்றதாக இருந்தால் சிறந்தது).

- பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகளை ஒரு பையிலும்.
- கடதாசி காகித அட்டையினை ஒரு பையிலும்.
- கண்ணாடி போன்ற உடையும் பொருட்களை ஒரு பையிலும்.
- உலோகப் பொருட்களை ஒரு பையிலும்.
- சேதன உக்கத்தக்கவற்றை ஒரு பையிலும்

இட்டு கழிவுகளை வகைப்படுத்துங்கள், விவசாயத்திற்குப் பசளையாகப் பயன்படுத்தக் கூடியவற்றை அதற்குப் பயன்படுத்திக் கொண்டு மீதிக் கழிவுகளை உங்கள் பிரதேசத்தில் கழிவு அகற்றுவதனை முகாமை செய்யும் அல்லது கழிவுகளை அகற்ற உதவும் பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை, தனியார் நிறுவனங்கள், சமூக அடிப்படையிலான நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறவனங்கள், தன்னார்வத் தொண்டு அமைப்புக்கள் போன்ற ஏதாவது ஒன்றின் உதவியுடன் அதனை அப்புறப்படுத்தி எமது இலங்கைத் தாய் நாட்டை வளர்ச்சியடைந்த நாடுகளின் அழகுக்கு நிகராக பேணுவதுடன் இலங்கைப் பொருளாதாரத்தின் நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு உதவவும் நாம் முன்வர வேண்டும். இது என்னைத் தாங்கும் பூமி. இதனை நான் அழகாக பேண வேண்டும் என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் உணர்வுபூர்வமாக எழ வேண்டும். இயற்கையுடன் இணைந்து இயற்கையைப் பாதுகாக்க முன்வந்து நிலைத்திருக்கும் அபிவிருத்திக்குப் பங்காளியாவதில் பெருமை கொள்ள வேண்டும்.

குணரெட்ணம் பிரதீபன்
பொருளியல்ஆசிரியர்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாரிய சக்தியாக உருவாகும்

## புதிய செயலாளர் ரோஹண நம்பிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மக்கள் நேயமிக்க பாரிய சக்தியாக கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக அக்கட்சியின் புதிய பொதுச் செயலாளர் கலாநிதி ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய நிறைவேற்றுக் குழுவும், நிறைவேற்று சபையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் காலை கொழும்பிலுள்ள அபேகம முன்றலில் ஒன்றுகூடியிருந்தனர்.

இதன்போது கட்சியின் பொதுச் செயலாளராக கலாநிதி ரோஹண லக்ஷ்மன் பியதாஸ நியமிக்கப்பட்டார். இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்.

“தேசிய சிந்தனை, மக்கள் நேயமிக்க நோக்கம் மற்றும் உற்பத்தி பொருளாதாரம் போன்றவற்றை சிறந்த முறையில் கட்டியெழுப்ப திடசங்கற்பம் பூண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமைத்துவத்தை ஆரம்ப காலத்தில் இருந்து பார்க்கும் பொழுது அதன் ஜனநாயக விழுமியங்கள் மேலோங்கியிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது என்று தெரிவித்தார்.

சமாதானமாக அனைவரையும் ஒன்றுபடுத்த வேண்டியது தமது பிரதான கடமையாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# சரணடைந்த ஆளுநரின் மனைவியும் மகளும் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் சரணடைந்ததை அடுத்து இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் தலா ஒரு இலட்சம் பெறுமதியான சரீர பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் ரங்க திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

பெண் ஒருவரை அச்சுறுத்திய மற்றும் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் அவர்களை கைது செய்வதற்கு நீதிமன்றம் கடந்த முதலாம் திகதி உத்தரவிட்டிருந்தது.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் கறுவாத்தோட்ட பொலிஸாருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தெற்கில் வைரஸால் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

தென் மாகாணத்தில் பரவிவரும் ஒரு வகை வைரஸ் காய்ச்சலால் நேற்று முன்தினம் இரவு மற்றுமொரு குழந்தை உயிரிழந்துள்ளது. காலி-கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஒரு வயதும் 11 மாதங்களுமேயான ஆண் குழந்தையொன்று நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கமைய, இதுவரை 15 குழந்தைகள் உயிரிழந்துள்ளதுடன், இதில் மாத்தறை மாவட்டத்தில் 9 குழந்தைகளும், காலி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் தலா 3 குழந்தைகளும் உயிரிழந்துள்ளன. (இ-7)

# புகையிரத திணைக்களத்தை அரசு தனியார்மயப்படுத்த முயற்சிக்கிறது

## மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைபுகையிரதத்திணைக்களத்தை தனியார்மயப்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளார்.

கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்றின் ஊடாக அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

புகையிரத திணைக்களத்தை தனியார்மயப்படுத்தும் முதல் கட்டமாக அம்பாந்தோட்டை புகையிரத பாதை அமைக்கும் பணிகள் வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.



அரசாங்க நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் கைவிடப்படவில்லை. புகையிரத பாதை அமைப்பதற்கான பணிகளை வெளிநாட்டு நிறுவனமொன்றிடம் ஒப்படைப்பதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அம்பாந்தோட்டை பெலியத்த கதிர்காமம் புகையிரத பாதையை அமைப்பதற்காக வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு 800 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் புகையிரத பாதையை நிர்மாணிப்பதற்கான பணிகளை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# போதைப்பொருள் ஒழிப்பு ஊர்வலமும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் ஊர்வலமும் கருத்தரங்கும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் இ.இரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி கருத்துரை வழங்குவார். (இ)

# சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்புவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை-அரசு எச்சரிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கையர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வெளிநாட்டில் பணிபுரிந்த போது உயிரிழந்தவர்களுக்காக இழப்பீடு வழங்கும் வகையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு பிரதியமைச்சர் மனுஷ நாணயக்கார உரையாற்றினார்.



இதன்போது வெளிநாட்டில் உயிரிழந்த 20 பேருக்காக 7 மில்லியன் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டது.

மலேசியாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட ஒரு பெண் அண்மையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். கொரியாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி நிதிமோசடியில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் பிரதியமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அதேபோல், சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுக்கு அனுப்புபவர்களுக்கு எதிராகவும் கடுமையாக சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். வெளிநாட்டுக்கு செல்ல முன்னர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# கணவனை பிணையில் எடுக்க வந்த மனைவி மற்றும் மகன் கைது

(கொழும்பு)

பல குற்றச்சாட்டுகள் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், தேடப்பட்டு வந்த, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாய்,தந்தை, மகன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பேலியகொட பொலிஸார் தெரிவித்தனர்.

13 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்த 41 வயது சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் ஹுனுப்பிட்டிய பிரதேசத்தில் வைத்து பேலியகொட பொலிஸின் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சந்தேக நபரின் மனைவி மற்றும் மகன் ஆகியோர் சந்தேகநபருக்கு பிணை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளனர். இதன்போது அவர்களுக்கும் பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்ததை அறிந்த பொலிஸார் அவர்களையும் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்ணுக்கு எதிராக மூன்று பிடியாணைகளும் அவரது மகனுக்கு எதிராக இரண்டு பிடியாணைகளும் பிறப்பிக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ‘உண்மையைக் கூறுவோம்’

## ஐ.தே.க.நாடளாவிய ரீதியில் பிரசாரம்

(கொழும்பு)

‘உண்மையைக் கூறுவோம்’ எனும் தொனிப்பொருளில், நாடளாவிய ரீதியில் பிரசார நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தியமை முதல் இன்று வரையிலும் ஐக்கிய தேசியக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் வகையிலேயே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அன்றிலிருந்து இன்று வரையிலும் செய்தவற்றை பலரும் மறந்துவிட்டனர் என்றும் குறிப்பிட்டுள்ள அக்கட்சி, அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் பணி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் கட்சியின் பிரசார செயலாளர் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது. (இ-7)

# பாரதம்

# உரிமைப் போராட்டங்களை மக்கள் ஒருபோதும் நிறுத்தமாட்டார்கள்

## –ரஜினிக்கு கமல் பதிலடி–



(சென்னை)

போராட்டங்களில் வன்முறைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

இனிவரும் போராட்டங்கள் வன்முறை என்னும் கறைபடியாமல் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

வன்முறை இடம்பெற்றதற்காக உரிமை சார்ந்த போராட்டங்களை மக்கள் ஒருபோதும் நிறுத்த மாட்டார்கள் என்றும், அதனை மக்கள் ஒருபோதும் நிறுத்தக் கூடாது எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது, எதற்கெடுத்தாலும் போராடக்கூடாது என்று நடிகர் ரஜினிகாந்த் கூறியதற்கு நடிகர் கமல்ஹாசன் இவ்வாறு பதிலளித்திருந்தார்.

முன்னதாக நடிகர் ரஜினிகாந்த், தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடத்தப்படும் போராட்டம் சமூக விரோதிகளால் தூண்டப்படுவதாகவும், இதனால் சட்ட ஒழுங்கு பாதிக்கப்படுவதோடு மக்களாலேயே வன்முறைகள் தோற்றுவிக்கப்படுவதாகவும், போராட்டங்கள் எல்லாவற்றிற்கும் தீர்வல்ல என்றும் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதில் வழங்கும் முகமாகவே நடிகர் கமல்ஹாசன் மேற்படி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியலில் வெற்றிடமிருப்பதாக நடிகர் ரஜினிகாந்த் மற்றும் கமல்ஹாசன் ஆகியோர் அரசியலுக்குள் வந்துள்ளனர்.

இந்நிலையில் இருவரும் நண்பர்கள் எனினும் அரசியலில் கொள்கைகள் வேறென்றும், கருத்து முரண்பாடுகள் வரும் போது நட்பை மீறிதான் ரஜினியை எதிர்க்க நேரிட்டால் பின்னிற்க மாட்டார் என்றும், கமல்ஹாசன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# அமெரிக்கா புதிய பொரு... விதித்தால் வர்த்தக பலன்...



(பீஜிங்)

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு வரிவிதித்தால் வர்த்தக பலன்களை பெற முடியாது என அமெரிக்காவுக்கு, சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளான அமெரிக்காவும், சீனாவும் அண்மைக் காலமாக வர்த்தக மோதலில் ஈடுபட்டுள்ளன. இரு நாடுகளும் பரஸ்பரம் இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு 150 பில்லியன் டொலர் அளவுக்கு வரி விதிக்கப்போவதாக மிரட்டியதால் இந்த மோதல் உச்சக்கட்டத்தை அடைந்தது. இதனால் இருநாடுகளும் பரஸ்பர இறக்குமதியை குறைத்தன. இந்த வர்த்தக போரை முடிவுக்கு கொண்டு வர இரு நாடுகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. இதில் கடைசியாக சீன வர்த்தகக்குழு ஒன்று கடந்த மாதம் வோஷிங்டன் பயணம் மேற்கொண்டு, ட்ரம்ப்

சீனா...

பின் பொருள... பேச்சுவார்த்த...

இதில் உட... அடுத்தகட்ட ... வர்த்தக அ... முன்தினம் பீ... பிரதமர் லியு... வர்த்தக பேச்... குறிப்பிடத்தக்... எதுவும் கை... விபரம் வெளி...

எனினும்... தொடர்ந்தா... செல்லுபடியாக... ள்ளது. இது ... வனம் தெரிவ...

விவசாயம்... எட்டுதல் மற்... துறைகள் ... டப்பட்ட உடன்... இரு தரப்பும் ... க்கின்றன. அ... நாடுகளில் இ... சீனாவின் ந...

# புயிகோ எரிமலை வெடித்தது; 25 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(கௌதமாலா)

மத்திய அமெரிக்க நாடான கௌதமாலாவில் உள்ள புயிகோ எரிமலை நேற்று முன்தினம் வெடித்து சிதறியதில் பலியானோர் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்று கௌதமாலா. அங்குள்ள புயிகோ என்ற எரிமலை நேற்று முன்தினம் வெடித்துச் சிதறியதில் பாறைகளும், சாம்பல் துகள்களும் பரவின. இதையடுத்து கௌதமாலா சர்வதேச விமான நிலையம் உடனடியாக மூடப்படுவதாக தேசிய பேரிடர் மீட்புப் படை தகவல் தெரிவித்துள்ளது.

எரிமலை வெடிப்பினால் நேற்றுக்காலை வரை 25 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தேசிய பேரழிவு தடுப்பு ஒருங்கிணைப்பாளர் கான்ரெட் தெரிவித்துள்ளார்.

புயிகோ எரிமலையைச் சுற்றி உள்ள கிராம மக்களும், விவசாயிகளும் பலர் காணாமல் போனதாகவும், அவர்கள் குறித்த விபரம் ஏதும் தெரியவில்லை என்றும் அந்நாட்டு செய்தித் தொடர்பாளர் கூறியிருக்கிறார்.

முன்னதாக தேசிய பேரிடர் கட்டுப்பாட்டு குழு தலைவரும், அந்நாட்டு ஜனாதிபதி ஜிம்மி மொராலசும் இந்த



சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய ஜனாதிபதி ஜிம்மி மொராலஸ், எரிமலை வெடிப்பால் பாதிக்கப்பட்ட பகுதியில் 'ரெட் அலார்ட்' அறிவிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இந்த ஆண்டின் மிகப் பெரிய எரிமலை வெடிப்புகளில், இது இரண்டாவதாக கருதப்படுகிறது. (7)

# நாட்டின் விவகாரங்களில் த... நரகத்துக்கு செல்ல வேண்...

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஐ.நா. அதிகாரிக்கு மிரட்டல்

(மணிலா)

உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டால் நரகத்துக்கு செல்ல வேண்டி இருக்கும் என ஐ.நா. அதிகாரிக்கு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ துதர்தே மிரட்டல் விடுத்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதி ரோட்ரிகோ துதர்தே, சர்வாதிகார போக்கு உடையவர். தன்னை எதிர்க்கக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு பொது வெளியில் நேரடியாக மிரட்டல் விடுக்கும் மனோபாவம் கொண்டவர்.

அங்கு உச்சநீதிமன்றின் தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்த மரியா லூர்தஸ் செரினோ, ஜனாதிபதி ரோட்ரிகோ துதர்தேவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, தொடர்ந்து அவருக்கு எதிரான கருத்துகளை தெரிவித்து வந்தார்.

இதனால் அவரை தன்னுடைய எதிரி என்று கூறிய ரோட்ரிகோ து... பதவியில் இரு... வலியுறுத்தின... மாதம், உச்ச... ப்பு நடத்தி ம... நீக்கம் செய்... தெரிவித்த பி... உரிமைகள் ... கார்சி-சயான்... லூர்தஸ் செரி... யில் மிரட்டல்... செய்யப்படுவத... சாட்டினார்.

இந்நிலை... முன்தினம் ... பேசியபோது ...

## கருணை மனுவை நிராகரித்த ஜனாதிபதி

# இந்தியாவில் ஏழு பேரை எரித்துக்கொன்ற நபருக்கு தூக்குத்தண்டனை உறுதியானது

(டில்லி)

2006ஆம் ஆண்டு 7 பேரை எரித்து கொன்ற ஜகத் ராயின் கருணை மனுவை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நிராகரித்தார். இந்த தகவலை ஜனாதிபதியின் செயலகம் தெரிவித்துள்ளது.

பீகார் மாநிலம் வைசாலி மாவட்டத்தை சேர்ந்தவர் மாக்தோ. இவர் கடந்த 2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், தான் வளர்த்து வந்த எருமை மாட்டை திருடியதாக அதே பகுதியை சேர்ந்த ஜகத் ராய், வசீர் ராய், அஜய் ராய் ஆகியோர் மீது பொலிஸில் புகார் அளித்தார். இந்த புகாரை திரும்ப பெறுமாறு அவர்கள் 3 பேரும் மாக்தோவை மிரட்டினர்.

ஆனாலும் அவர் புகாரை திரும்பப் பெறவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த ஜகத் ராய், கடந்த 2006 ஆம் ஆண்டு மாக்தோவின் வீட்டுக்கு தீவைத்தார். இதில் மாக்தோ, அவருடைய மனைவி மற்றும் 5 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். இது தொடர்பான வழக்கில் ஜகத் ராயுக்கு தூக்குத் தண்டனை விதித்து வைசாலி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த தீர்ப்பை கடந்த 2013ஆம் ஆண்டு பீகார் உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தது. இதையடுத்து தூக்குத் தண்டனையை இரத்து செய்யக்கோரி ஜகத் ராய், ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினார்.

இந்த நிலையில், ஜகத் ராயின் கருணை மனுவை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நிராகரித்தார். இந்த தகவலை ஜனாதிபதியின் செயலகம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் ஜகத் ராயின் தூக்குத் தண்டனை உறுதியாகி இருக்கிறது. ராம்நாத் கோவிந்த் ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்ட பின்னர் அவர் நிராகரித்த முதல் கருணை மனு இது என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கமாட்டேன்

## வைகோ உறுதி



(கோவை)

பொதுமக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்திற்கும் நான் ஆதரவு வழங்கப் போவதில்லை என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களை சந்தித்தபோதே வைகோ மேற்படி தெரிவித்தார்.

அத்துடன் தான் தொழில் வளர்ச்சிக்கு எதிரானவன் அல்லன் என்றும் மக்களைப் பாதிக்கும் விடயங்களையே எதிர்ப்பதாகவும் வைகோ மேலும் தெரிவித்தார்.

மேலும் தொழில் வளங்கள் வளர்ச்சி காண வேண்டும் என்றும் அவை தமிழக மக்களை பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# அப்பாவி மக்க... கைது நடவடிக்கை...

## தேசிய குழு உறுப்பினர் ஆர்.நல்...



தூத்... பொலீஸ... கைது ந... ஈடுபட்டு ... என்று ந...

இந்தி... குழு உ... சியில் நி...

காவி... அமைத்...

போது முடிவுக்கு வந்தது. முதல் கட்டமாக ... அணையில் தண்ணீர் திறந்து விடவேண்டு... செய்ய வேண்டும்.

தூத்துக்குடியில் அப்பாவி மக்கள் மீது பொ... கைது நடவடிக்கைகளிலும் தொடர்ந்து ஈடுபட்... அங்கு அமைதியை நிலை நாட்ட தமிழக... ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட... தெரிவித்தார்.

# வெளிநாடு

## ாருளாதார தடைகளை லன்களை பெற முடியாது

### ீனா எச்சரிக்கை

ா பொருளாதார ஆலோசனைக்குழுவுடன் சுவார்த்தையில் ஈடுபட்டது.

இதில் உடன்பாடு எட்டப்பட்டதை தொடர்ந்து த்தகட்ட பேச்சுவார்த்தைக்காக அமெரிக்க த்தக அமைச்சர் வில்பர் ராஸ் நேற்று ர்தினம் பீஜிங் வந்தார். அவர் சீன துணை தமர் லியு ஹியுடன் நேற்று முன்தினம் த்தக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இதில் ப்பிடத்தக்க வகையிலான புதிய ஒப்பந்தம் வும் கையெழுத்தானதா? என்பது குறித்த ரம் வெளியிடப்படவில்லை.

எனினும் அமெரிக்காவின் வரி விதிப்பு டர்ந்தால் அனைத்து ஒப்பந்தங்களும் ல்லுபடியாகாது என சீனா எச்சரிக்கை விடுத்து து. இது குறித்து சீன அரசின் செய்தி நிறு ம் தெரிவித்திருப்பதாவது,

விவசாயம், எரிசக்தி, நேர்மறையான முடிவை டுதல் மற்றும் உறுதியான வளர்ச்சி போன்ற றகள் தொடர்பாக வோஷிங்டனில் எட் ட்ட உடன்பாட்டை செயற்படுத்துவது குறித்து தரப்பும் நல்ல தொர்டர்பில் ஈடுபட்டு இரு ன்றன. அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து களில் இருந்தும் இறக்குமதி செய்வது என்ற ாவின் நடைமுறையில் மாற்றம் இல்லை.

அமெரிக்கா மற்றும் சீனா தற்போது ஏற்படுத்தியிருக்கும் உடன்பாட்டை அடுத்த கட்டத்துக்கு எடுத்து செல்வது குறித்து இருதரப்பும் சந்தித்து பேச வேண்டும் மாறாக வர்த்தக போரில் ஈடுபடக் கூடாது.

சீன பொருட்களுக்கு வரி விதிப்பு உள்ளிட்ட பொருளாதார தடைகளை அமெரிக்கா அறிமுகம் செய்தால், வர்த்தக பலன்கள் எதையும் பெற முடியாது. இது தொடர்பாக ஏற்படுத்தப்பட்டு இருக்கும் ஒப்பந்தங்கள் அனைத்தும் செயலற்றதாகி விடும் இவ்வாறு அந்த செய்தி நிறுவனம் கூறியிருந்தது.

முன்னதாக பீஜிங்கில் செய்தியாளர்களை சந்தித்த வில்பர்ராஸ் கூறுகையில் 'எங்கள் சந்திப்புகள் இது வரை நட்பு ரீதியாகவும், வெளிப்படையாகவும் அமைந்து இருக்கிறது. மேலும் குறிப்பிட்ட ஏற்றுமதி பொருட்கள் தொடர்பாக சில பயனுள்ள தலைப்புகளும் இதில் இடம் பெற்றிருந்தன' என்று தெரிவித்தார். (7)

## அகதிகள் சென்ற படகு கவிழ்ந்தது! பலி எண்ணிக்கை 47 ஆக உயர்வு

ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த சுமார் 180 குடியேறிகள் சென்ற படகு துனிசியா கடற்பகுதியில் கவிழ்ந்த விபத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது.

உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர்கதை ஆகி வருகிறது. அண்மைக் காலமாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள மக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 25 இலட்சத்தை எட்டியுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் அடைந்துள்ளனர்.

உள்நாட்டில் பசி, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள லிபியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் இன்றும் அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக படையெடுத்தவாறு உள்ளனர். லிபியா நாட்டின் கடற்பகுதி வழியாக சென்றால் கண்காணிப்பு அதிகமாக உள்ளதால் துனிசியா கடற்பகுதி வழியாக இவர்கள் பெரும்பாலும் இத்தாலியை நோக்கிச் செல்கின்றனர். அந்தவகையில், ஐரோப்பிய நாடுகளில் குடியேறும் நோக்கத்தில் ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த சுமார் 180 அகதிகள் சென்ற படகு துனிசியா கடற்பகுதியில் நேற்று முன்தினம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 35 பேர் உயிரிழந்ததாக முதல்கட்ட தகவல்கள் நேற்று முன்தினம் வெளியாகின. இந்நிலையில், மேற்கொள்ளப்பட்ட மீட்புப்பணிகளில் மேற்கொண்டு 12 பேரின் உடல்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுவரை 67 பேர் மீட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கடலில் மூழ்கி காணாமல்போன பலரை தேடும் பணி நடைபெற்று வருகிறது. பலி எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (7)



## சோகத்தில் முடிந்த விடுமுறை

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் கடலில் மூழ்கிப் பலி!

(மும்பை)

மும்பையின் ரத்னகிரி கடல் பகுதியில் விடுமுறையை கொண்டாட சென்ற ஒரு குடும்பத்தை சேர்ந்த 6 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

மும்பையின் போரிவாலி பகுதியை சேர்ந்த ஒரு குடும்பத்தினர் விடுமுறை தினத்தை கழிக்க ரத்னகிரி பகுதியில் உள்ள கண்பதிபு லேவுக்கு சென்று கொண்டிருந்தனர். அவர்கள் செல்லும் வழியில் ஏரே வாரே கடற்கரையில் குளிக்க திட்டமிட்டு நின்றுள்ளனர்.

அவர் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக அதிக அளவில் வந்த அலையில் சிக்கினர். இதையடுத்து அருகில் இருந்தவர்கள் போராடி ஒருவரை பத்திரமாக மீட்டனர். மற்றவர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு துறையினர் மற்றும் உள்ளூரை சேர்ந்தவர்கள் ஈடுபட்டனர்.

அப்போது, காணாமல் போன ஆறு பேரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். விடுமுறையை கொண்டாட சென்ற இடத்தில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 6 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (7)

## ல் தலையிட்டால் ண்டி இருக்கும்

ட்ரிகோ துதர்தே, அவரை தலைமை நீதிபதி யில் இருந்து வெளியேற்ற வேண்டும் என புறுத்தினார். இதனைத்தொடர்ந்து கடந்த ம், உச்ச நீதிமன்றம் நீதிபதிகள் வாக்கெடு டத்தி மரியா லூர்தஸ் செரினோவை பதவி ம் செய்தனர். இது குறித்து வேதனை வித்த பிலிப்பைன்சுக்கான ஐ.நா. மனித மைகள் அமைப்பின் மூத்த அதிகாரியான சி-சயான் "ரோட்ரிகோ துதர்தே, மரியா தஸ் செரினோவுக்கு எதிராக பொதுவெளி மிரட்டல்கள் விடுத்ததே, அவர் பதவி நீக்கம் யப்படுவதற்கு முக்கிய காரணம்" என குற்றம் னார்.

ந்நிலையில் ரோட்ரிகோ துதர்தே, நேற்று தினம் பத்திரிகையாளர்களை சந்தித்து போது, தன் மீது கார்சி-சயான் முன்வைத்த குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்தார். அப்போது அவர் தெரிவிக்கையில், "அவரிடம் (கார்சி-சயான்) சொல்லுங்கள், என் நாட்டின் விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று, இல்லையென்றால் அவர் நரகத்துக்கு செல்ல வேண்டி இருக்கும்" என தெரிவித்தார்.

மேலும், "அவர் ஒன்றும் சிறப்பான நபர் இல்லை. அவருடைய பதவியை நான் அங்கீகரிக்கவில்லை" என்றும் தெரிவித்தார். (7)



## புதிய கிரகத்தில் தண்ணீர் மற்றும் உலோகங்கள்

### விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



(லண்டன்)

சூரிய குடும்பத்துக்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்ட புதிய கிரகத்தில் தண்ணீர் மற்றும் அதிக அளவிலான உலோகங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்பெயினின் ஆஸ்ட்ரோபிஸ்கா கனாரியாஸ் நிறுவனத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கிரான் டெலஸ்கோப் மூலம் விண்வெளியில் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது சூரிய குடும்பத்துக்கு வெளியே 'வாஸ்ப்-127பி' என்ற புதிய கிரகம் இருப்பதை கண்டுபிடித்தனர். அது ராட்சத அளவிலான வாயுக்கள் அடங்கிய கிரகமாகும். ஜுபிடர் கிரகத்தை விட 1.4 மடங்கு அகலம் அதிகம் உள்ளது. 20 சதவீதம் மட்டுமே பெரியது.

இந்த கிரகத்தில் அதிக அளவிலான உலோகங்கள் உள்ளன. தற்போது சோடியம், பொட்டாசியம், லிதியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் இங்கு தண்ணீர் இருப்பதும் தெரிய வந்துள்ளது. (7)

## க்கள் மீதான கையை நிறுத்துக

### ஆர்.நல்லக்கண்ணு வலியுறுத்து

(திருச்சி)

தூத்துக்குடியில் அப்பாவி மக்கள் மீது பொலீஸார் வழக்கு போடுவது மற்றும் கைது நடவடிக்கைகளிலும் தொடர்ந்து டுபட்டு வருவதை கைவிட வேண்டும் என்று நல்லக்கண்ணு தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் ஆர்.நல்லகண்ணு திருச் யில் நிருபர்களிடம் தெரிவித்ததாவது,

காவிரி மேலாண்மை ஆணையத்தை அமைத்து அரசிதழில் வெளியிட்டு தற் டமாக வருகிற 12 ஆம் திகதி மேட்டூர் வேண்டும். அதை மத்திய அரசு உறுதி

து பொலீஸார் வழக்கு போடுவது மற்றும் ஈடுபட்டு வருவதை கைவிட வேண்டும். தமிழக அரசு முயற்சிக்க வேண்டும். க மூட வேண்டும் என அவர் மேலும் (7)

## பெண்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும்

### சவுதி இளவரசருக்கு அல்கொய்தா எச்சரிக்கை



(டுபாய்)

பெண்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் சவுதி அரேபிய இளவரசருக்கு அல்கொய்தா பயங்கரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது

சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரான முகமது பின் சல்மான் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். குறிப்பாக பெண்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பெண்கள் கார் ஓட்ட அனுமதி அளிப்பது, விளையாட்டு மைதானங்களுக்குள் அனுமதி, திரையரங்குகளுக்கு அனுமதி உட்பட பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான துன்புறுத்தல் செய்யும் நபர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், 3 இலட்சம் ரியால்கள் அபராதமும் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவையும் ஒப்புதல் அளித்துள்ளதாக அரசு செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது. மேலும் சவுதி பெண்கள் சொந்தமாக தொழில் ஆரம்பிக்கலாம் எனவும் சவுதி அரசு தெரிவித்துள்ளது.

சவுதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் அந்நாட்டில் பொழுதுபோக்கு நகரம் ஒன்றையும் உருவாக்க இருக்கிறார். இந்த நகரம் குட்டி நியூயோர்க், சிங்கப்பூர், மலேசியா போல இருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், சவுதி அரேபியாவின் இந்த முடிவுக்கு அல்கொய்தா பயங்கரவாத அமைப்பு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சவுதி இளவரசர் பெண்களுக்கு தேவையில்லாத சுதந்திரம் கொடுக்கிறார், மேற்கத்தேய கலாசாரத்தை புகுத்தி இஸ்லாமிய நாட்டை நாசம் செய்கிறார். அவர் உடனே தன்னுடைய நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். இல்லையென்றால் அவர் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று சவுதி இளவரசர் பின் சல்மானுக்கு அல்கொய்தா பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது. (7)

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எதிரொலி

# ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்க இராணுவப் பேச்சாளருக்குத் தடை



(கொழும்பு)

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்க, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்துவுக்கு, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தடை விதித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், வாராந்தம் நடக்கும், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இராணுவப் பேச்சாளரும் பங்கேற்று வந்தார்.

அண்மையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பாகவும், இறுதிப் போர் தொடர்பாகவும், அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன சில கருத்துக்களை வெளியிட்டார்.

இந்தக் கருத்துக்களுக்கு இராணுவப் பேச்சாளர் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

ராஜித சேனாரட்னவின் கருத்துக்கள் தெற்கில் கடும் சர்ச்சையை தோற்றுவித்திருந்ததுடன், இராணுவ அதிகாரிகள் மத்தியிலும் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

ராஜித சேனாரட்னவின் கருத்துக்களை கண்டித்து, அவர் பங்கேற்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இராணுவம் புறக்கணிக்க வேண்டும் என்று சில கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்துவை, வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்பதற்கு இராணுவத் தளபதி தடை விதித்துள்ளார் என்று கூறப்படுக்கிறது.

இராணுவ அதிகாரிகள் சகலரையும் பாதுகாக்கும் நடவடிக்கையில், இராணுவ அதிகாரி ஈடுபடவேண்டும் என்பதே இராணுவத் தளபதியின் நிலைப்பாடு. சில விடயங்கள் தொடர்பில், இராணுவம் பதிலளிக்க வேண்டிய தேவையில்லை என்று இராணுவத் தளபதி கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகறது. (இ-7)

# ஹிருணிகாவின் தாய் வீட்டில் பாரிய தீ!



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவின் தாயாரின் வீட்டில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இந்த தீ விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கொழும்பு 7 குருந்துவத்தை, கெப்பட்டிபொல மாவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் தீப்பற்றியமைக்கான காரணம் இன்னமும் வெளியாகவில்லை.

எனினும் இந்தத் தீ விபத்தினால் உயிர் ஆபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# பேருவளையில் கரையொதுங்கிய பாரிய திமிங்கலம்



(கொழும்பு)

பேருவளை கடற்கரையில் பாரிய அளவிலான திமிங்கலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

மாகல்கந்த பிரதேசத்திலுள்ள கடற்கரையில் நேற்று முன்தினம் காலை இந்த திமிங்கலம் கரை ஒதுங்கியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கடற்கரையில் அதிகமான துர்நாற்றம் வீசியமையினால் மக்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது இறந்த நிலையில் திமிங்கலம் கரை ஒதுங்கியிருந்ததனை அவதானித்துள்ளனர். (இ-7)

# இலங்கைக் கடலில் சிக்கிய அதிர்ஷ்டம்! மட்டற்ற மகிழ்ச்சியில் மீனவர்கள்





(கொழும்பு)

சிலாபம் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

வழமைக்கு மாறாக பெருந்தொகை மீன்கள் பிடிபட்டுள்ளதுடன், இதுவொரு அபூர்வ நிகழ்வு என மீனவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

பருவ மழை ஆரம்பித்த போதிலும் பல்வேறு வகை மீன்கள் பாரியளவு திடீரென சிக்கியுள்ளதாக சிலாபம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களில் பாரியளவு மீன்களை மீனவர்களால் பிடிக்க முடிந்துள்ளது.

நேற்று முன்தினம் ஹெர்ரிங் என்ற ஒரு வகை மீன் அதிகளவு கிடைத்துள்ளது. இதன் மூலம் மிகப் பெரிய தொகைக்கு மீன்களை விற்க முடிந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மீன் வகை ஒரு கிலோ கிராம் 200 - 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தளவு மீன் சிக்கியதில்லை எனவும், இதுவொரு அபூர்வ விடயம் எனவும் சிலாபம் மீனவர்கள் கூறியுள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தவணை தவணையாக வருந்துவதா?

நடந்துவிட்ட கவலைக்குரிய விடயங்களை நன்கு மனத்தில் வாங்கிக் கொண்டு, தாங்காவிட்டால் அழுது தீர்த்து தத்துவங்களால் மனத்தைத் தேற்றிக் கொண்டு அவற்றைக் கெட்ட கனவுகளாக எண்ணிப் பார்க்கும் பக்குவ நிலைக்கு வரவேண்டும்.

ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் எப்படிப் பழகியிருக்கிறோம் தெரியுமா? நடந்ததை நினைத்துக் கொண்டு காலமெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது, அல்லது மற்றவர்கள் அதை நினைவூட்டும் போதெல்லாம் நினைத்து நினைத்து அழுவது அல்லது கவலைப்படுவது.

இந்தக் குறையிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

சிலர் பிள்ளை இல்லையே என்று நினைத்து நினைத்துக் கவலைப்படுவார்கள். அதுவும் பலர் முன்னிலையில் எவரேனும் ஒருவர் "உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?" என்று கேட்டு விட்டால் போதும். ஏதோ பெருத்த அவமானத்துக்கு உள்ளாக்கி விட்டதைப் போல வீடு திரும்பியும் அந்த மனைவி குமுறிக் குமுறி அழுவாள். பலவீனப்பட்டு விட்ட கணவன், சமாதானம் செய்ய முடியாமல் அவனும் வருந்துவான்.

ஒருவருக்கு இளநரை அல்லது வழுக்கை இருக்கும். பல ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கும் நண்பர் கேட்டார். என்னடா இப்படி ஆயிட்டே? உடனே இவர் மூட் அவுட். ஏதோ புதிதாக அன்றுதான் தலை நரைத்த மாதிரியும் வழுக்கை விழுந்தது மாதிரியும் கவலைப்பட ஆரம்பித்து விடுவார்.

"மகள் ஓடிட்டாளாமே" என்று ஒருவர் கேட்டதும் பாதிக்கப்பட்ட பெற்றோர் மறுபடி இன்னொரு மகள் ஓடிவிட்டதைப் போல் புதிதாக வருந்த ஆரம்பிப்பார்கள்.

தேர்வில் - போட்டியில் தோற்றவர்கள், தொழிலில் நட்டப்பட்டவர்கள், பிற வகைகளில் பாதிக்கப்பட்டவர்கள் என யாராக இருந்தாலும் சரி. சும்மா அவ்வப்போது தவணை தவணையாகக் காலமெல்லாம் வருந்திக் கொண்டே இருக்க வேண்டிய அவசியமில்லை.

கராத்தே கற்பவர்கள் தங்கள் கரங்களைச் சூடான சிறு கற்களுக்குள் கொடுத்துக் கொடுத்து மென்மைத் தன்மையை நீக்கி உறுதியான தன்மைக்குக் கொண்டு வருவார்கள்.

அதைப் போலத்தான் மனமும் வருங்காலத்தில் நாம் ஏற்கப்போகிற கடின சூழ்நிலையை மனதிற் கொண்டு மனத்தைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்படிப் பக்குவப்படுத்திக் கொண்டு விட்டால் உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்கிற கேள்விக்கு "இனிமேத்தாங்க என்றும் மகள் ஓடிட்டாளாமே" என்கிற கேள்விக்கு ஆமாங்க அவ சந்தோஷமா இருக்கா என்றும் முடி இப்படிக் கொட்டிப் போச்சே என்று சொல்பவர்களுக்கு "ஆமாங்க என் பரம்பரை தந்த பரிசுங்க இது" என்றும் பதில் சொல்லிவிட்டுச் சாதாரணமாக இருக்க முடியும்.

அதுமட்டுமல்ல நம் குறைபாடுகளைப் பெரிதுபடுத்தி மகிழ்ச்சி கொள்ளப் பார்க்கும் பொல்லாக் கூட்டத்தின் முகத்தில் கரி பூசவும் முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

# இலங்கையில் யுத்தத்தால் அழிவடைந்த நூலகம் தமிழக அரசால் சீரமைக்கப்படும்

## அமைச்சர் செங்கோட்டையன் தகவல்



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது சேதமடைந்த நூலகம் தமிழக அரசினால் சீரமைக்கப்படவுள்ளதாக தமிழக கல்வித்துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், கோபி அருகே உள்ள குள்ளம்பாளையம் அரசு உயர்நிலைப் பாடசாலையில், திறன் வழிக் கற்றல் வகுப்பறை மற்றும் கலை அரங்கத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்த பிள்ளைகள் மேல் நிலை கல்வி கற்பதற்கு ஏதுவாக குடியுரிமை சட்டத்தின் படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்” எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பில் 40 கோடி ரூபாவுக்கு சொகுசு வீடு வாங்கிய நபர்!

## சர்ச்சையில் அரசியல்வாதி

(கொழும்பு)

இலங்கை அரசியல்வாதியின் உறவினர் ஒருவர் கொழும்பிற்கு அருகில் அதி நவீன சொகுசு வீடு ஒன்றை கொள்வனவு செய்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சுமார் 40 கோடி ரூபா பெறுமதியான வீடு ஒன்றே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீட்டிற்கு செல்லும் வீதியின் இரு மருங்கிலும் சிறிய வீடுகள் மற்றும் பழைய பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இவற்றின் பெறுமதியை விடவும் இரண்டு மடங்கு அதிகமாக பணம் செலுத்தி அவற்றினை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

அரசியல்வாதியுடன் தொடர்புடைய நிறுவனம் ஒன்றுக்கு மீன் வழங்குநரான கோடீஸ்வரர் இந்த வீட்டினை வாங்கியுள்ளார். சொகுசு வீட்டில் டெனிஸ் மைதானம் மற்றும் நீச்சல் தடாகம் ஒன்றும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# கோத்தபாய ஜனாதிபதியானால் முழுநாடும் கண்ணீர் வடிக்கும்

## ஜே.வி.பி.எம்.பி. சுனில் எச்சரிக்கை

(கொழும்பு)



**புதிய அரசியலமைப்பை அரசாங்கம் கொண்டுவரத் தவறியதாலேயே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்கும் 20 ஆவது திருத்தத்தை நாங்கள் கொண்டுவந்தோம். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இருக்கும் நிலையில் கோத்தபாய ராஜபக்ஷவை மக்கள் ஜனாதிபதியாக தெரிவுசெய்தால் முழு நாடும் கண்ணீர் வடிக்கவேண்டிய நிலை ஏற்படும் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி எச்சரித்துள்ளார்.**

மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கும் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும்போது, புதிய அரசியலமைப்பு ஏற்படுத்துவதாகவும் அதனூடாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்குவதாகவும் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தது. என்றாலும் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் புதிய அரசியலமைப்பு தொடர்பான எந்தக் கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை. அதனால்தான் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்கும் நோக்கத்துடன் 20 ஆவது திருத்தத்தை நாங்கள் கொண்டுவந்தோம்.

அத்துடன் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்குவதாகவே அதிகாரத்துக்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளும் தெரிவித்திருந்தனர். ஆனால் இடம்பெறவில்லை. அதனால்தான் தொடர்ந்தும் அடுத்த ஜனாதிபதித் தேர்தல்வரைக்கும் இதனை வைத்துக்கொண்டிருக்காமல் அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடியவர் நிறைவேற்று அதிகாரம் இல்லாதவராக தெரிவுசெய்யப்படவேண்டும் என நாங்கள் முயற்சிக்கின்றோம்.

அத்துடன் தற்போதைய ஜனாதிபதியின் நடவடிக்கைகள் தொடர்பில் பலரும் விமர்சனங்களை தெரிவித்து நாட்டுக்கு உறுதியான, அச்சமின்றி தீர்மானம் எடுக்க வேண்டிய தலைவர் ஒருவர் அவசியம் எனத் தெரிவிக்கின்றனர்.

அதற்காக நிறைவேற்று அதிகாரம் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கக்கூடியவர்களும் இருக்கின்றனர். இவ்வாறான கருத்து நாட்டுக்குள் இருக்கும் நிலையில் தற்போது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் நிறைவேற்று ஜனாதிபதிமுறை இருக்கும் நிலையில் மக்கள் கோத்தபாய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவுசெய்தால் நாட்டு மக்கள் அனைவரும் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலையே ஏற்படும்.

மேலும் நாங்கள் முன்வைத்துள்ள 20 ஆம் திருத்தம் நாட்டை பிரிக்கக்கூடியது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரத்தை வழங்கும் நோக்கத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. மற்றும் 13 ஆம் திருத்தத்தில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை இல்லாமலாக்கிவிடும் என்று சிலர் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் அவ்வாறான எந்த விடயமும் இதில் உள்வாங்கப்படவில்லை. மாறாக பாராளுமன்ற உறுப்பினர்கள் விலைபோகாமல் கட்சி மாறுவதைத் தடுத்துள்ளோம்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் கைதிகள் விடுதலை செய்யப்படுவது, ஜனாதிபதி கட்சி சார்பற்றவராக இருப்பது மற்றும் பாராளுமன்ற அமர்வுகளை ஒத்தி வைக்கும் அதிகாரம் இல்லாமலாக்குதல் போன்ற விடயங்களே உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

இதில் யாருக்கும் பாதிப்பு ஏற்படப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### பிணைமுறி மோசடி விவகாரம்

# ‘மறைக்கப்பட்ட 106 பக்கங்களை மக்களுக்கு அம்பலப்படுத்தவும்’

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில், விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில், மறைக்கப்பட்ட 106 பக்கங்களையும் மக்களுக்கு அம்பலப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ள ஊழல் எதிர்ப்பு முன்னணி ஜனாதிபதி ஆணைக்குழு-2ஐ களத்தில் இறக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

மத்திய வங்கியிலிருந்து, 2016 ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரையிலும், மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியில் ஈடுபட்டமையால், பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு 12,500 மில்லியன் ரூபாய் கொள்ளை இலாபமாகக் கிடைத்துள்ளது என்றும் அம்முன்னணி தெரிவித்துள்ளது.

மருதானை சி.எஸ்.ஆர் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அம்முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பாடசாலை நிகழ்வில் அரசியல் பேசிய பிரதியமைச்சர் ரஞ்சனுக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வில் அரசியல் பேசிய பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நெருக்கடியான நிலையை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

நீர்கொழும்பு மாரி ஸ்டெல்லா கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. பழைய மாணவரான ரஞ்சன் ராமநாயக்கவிற்கும் இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஏற்பாட்டாளர்களின் கோரிக்கைக்கு அமைய ரஞ்சன் ராமநாயக்க பாடல் ஒன்றை பாடியுள்ளார். அதன் பின்னர் அரசியல் கருத்துக்களை வெளியிட்ட காரணத்தினால் ஏனைய பழைய மாணவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தினால் பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வில் பதற்றநிலைமை ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவை ஏற்பாட்டாளர்கள் பாதுகாப்பாக வெளியேற்றியுள்ளனர்.

நட்பு ரீதியான ஒன்றுகூடலில் பங்கேற்று அரசியல் பேசியதனால், ரஞ்சன் ராமநாயக்கவிற்கு ஒன்றுகூடலின் இடை நடுவில் பாடசாலை வளாகத்தை விட்டு வெளியேற நேரிட்டது. (இ-7)

# மனிதப் படுகொலைகளில் இலங்கை முன்னிலையில்

## 'உண்மை கசப்பாகத்தான் இருக்கும்'

## பொலிஸ்மா அதிபர் பூஜித அதிருப்தி

(கொழும்பு)

குறைந்த நிலப்பரப்பளவில் அதிக மனித படுகொலைகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மெத்சவிய (செண்டர் போ மெடிடேஷன் எண்ட் ரிசேச்) அமைப்பின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



குறைந்த நிலப்பரப்பளவில் மனித படுகொலைகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது. அதிகமாக போதைபொருள்பாவனை செய்யப்படும் நாடு, வன்புணர்வு உள்ளிட்ட குற்றங்கள் அதிகம் இடம்பெறும் நாடு, கருக்கலைப்பு செய்யும் நாடுகளில் நாம் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளோம்.

இதுதான் உண்மை, உண்மை கசப்பாகத்தான் இருக்கும் என்றாலும் நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் அடுத்தவர்களை விமர்சித்துக்கொண்டு இருக்காமல் இவற்றை தடுக்க ஒன்றுபட வேண்டும்.

இலங்கை குற்றச்செயல்களில் முன்னோக்கிச் செல்கின்றது என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

## எந்தக் கட்சியிலும் இணையேன்

(ஹற்றன்)

யார் எதைச்சொன்னாலும் எந்தக்கட்சியிலும்நான் இணையப்போவதில்லை என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் எஸ்.சதாசிவம் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் எதிர்கால அரசியல் திட்டங்கள் தொடர்பாக தெளிவுபடுத் தும் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா கூட்டுறவு விடுதியில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இன்று பலர் பொய்யான பிரசாரங்களை செய்து வருகின்றனர். நான் ஏனைய கட்சிகளில்இணையப்போவதாக தெரிவிக்கும் கருத்துகள் பொய்யான தகவலாகும்.

இன்று மலையகத்தில் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் என்னை இணைந்துகொள்ளுமாறு அழைத்தாலும், இதுவரை நான் எந்த முடிவும் எடுக்கவில்லை. எந்தக்கட்சியி லும் சேரக்கூடிய எண்ணம் இப்போதைக்கு இல்லை. அதற்கான வாய்ப்பும் இல்லை.

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி தொழிலாளர் நலன் கருதி தனித்து நின்று செயற்படவுள்ளது. தனித்து நின்று மலையக அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதே எனது தீர்மானமாகவுள்ளது.

இலாபத்திற்கேற்ப பலர் ஏனைய கட்சிகளுடன் இணைந்தாலும் நான் எனது கட்சியின் கொள்கைகளை விட்டுக் கொடுத்ததில்லை. இன்று அரசாங்கத்தோடு ஒட்டி இருக்கின்ற கட்சிகளும் வெளியில் இருந்து பேசிக் கொண்டிருக்கின்ற மலையக தொழிற்சங்கங்களும் மக்களுடைய நலன் கருதி செயற் பட்டதாக தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்த அமெரிக்கா ஆர்வம்

### அந்நாட்டு ஆயுதப் படைகள் சேவைக் குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொண்டு, முன்னோக்கிச் செல்வதில் அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளது என்று அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின்ஆயுதப்படைகள்சேவை குழுவின்தலைவரானமக்தோன் பெரி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களான, ஹென்றி கியூலர், விக்கி ஹாட்ஸ்லெர் ஆகியோருடன் இரண்டு நாட்கள் இலங்கையில் பயணம் மேற்கொண்டிருந்த மக்தோன்பெரி, அனைத்துலக ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இலங்கையுடனான அமெரிக்காவின் உறவுகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழைமையானது. இந்த உறவுகளை மேலும் ஆழமாக முன்கொண்டு செல்வதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது.

இந்தியப் பெருங்கடலில் இலங்கை மிக முக்கியமான கேந்திரமாகும்.

இந்த மூலோபாய தளமானது, வளமான, நிலையான ஜனநாயகம் என்பன வற்றைக் கொண்டிருப்பது முக்கியமானது.

கடந்த சில ஆண்டுகளில் இலங்கை நீண்ட பாதைகளைக் கடந்து வந்திருக்கிறது. ஆனால் அவர்கள் முன்னோக்கிச் செல்வதற்கு இன்னும் அதிகமாக- கடுமையாகப் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

இந்த முக்கியமான தருணத்தில், இலங்கையின் முன்னேற்றங்களுக்கு இராணுவ- இராணுவ பரிமாற்றங்களை அதிகரிப்பது, அபிவிருத்தி உதவி, ஆட்சியியல் திட்டங்கள் என்பனவற்றில் அமெரிக்காவின் அர்ப்பணிப்பு முக்கியமானது என்றும் அவர் கூறியுள்ளார். (இ-7)

## பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

### எண் 1 (சூரியன்) (ஆளும் வேந்தர்கள்)

அழகுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பார்கள். அழகான பொருட்களை விரும்பி புகழ்ந்து பாராட்டுவார்கள். பெரியவர்கள், குழந்தைகள் மீது பாசமிருக்கும். தந்திரசாலித் தனமும் தத்துவங்களில் ஆராய்ச்சியும் கொள்கைப் பிடிவாதமும் மேலோங்கியிருக்கும். சிறப்பான வாழ்க்கை வாழும் பாக்கியமுண்டு.

**28ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

சிரித்து சிரித்துப் பேசுவார்கள். புன்னகை தோய்ந்த முகத்தோடு காட்சியளிப்பார்கள். எப்போதும் அழகான, கவர்ச்சியான முகத்துடன் கவர்ச்சியாகவே இருக்க விரும்புவார்கள். பெண்தன்மை கலந்து காணப்படுவார்கள். பிறரை சுலபமாக நம்பி விடுவதே இவர்களது ஏமாற்றத்திற்குக்காரணமாகும். இதனால் பிறரை நம்பி தோல்வியைத் தழுவுவார்கள். மென்மையாகப் பழகும் இயல்புடையவர்கள், சுத்தமான எண்ணமுடையவர்கள். தன் தோல்விக்குப் பிறரைக் காரணம் கூறாமல் தானே காரணம் என்று பறைசாற்றுவார்கள். எல்லாச் செயல்களுக்கும் விதியையும் கர்மாவையும் கைகாட்டி விட்டுச் செல்வார்கள். பிறரை நம்பி எளிதில் ஏமாறுவார்கள். நம்பியவருக்குத் தியாக மனப்பான்மையுடன் உதவிகளைச் செய்வார்கள். இளகிய மனமிருக்கும். நல்ல நண்பர்கள். பலரை பெற்றுச் சிறப்பாக வாழ்வர். குழந்தை உள்ளமும் தெய்வீக வழிபாட்டில் ஆர்வமும் பந்தமும் உண்டாகும். சில நேரங்களில் குழம்பிப் போய்விடுவார்கள். இவர்களின் குழந்தைத் தனமும் புன்னகையும் அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும். வசீகரமான தோற்றமுடையவர்கள். மகிழ்ச்சியான இதயம் இருப்பதால் வாழ்நாள் முழுவதும் மன நிம்மதியுடன் வாழ்வார்கள். பார்வையில் கூர்மையும் கவர்ச்சியும் தெரியும். பெரியவர்களுக்கு மதிப்புக் கொடுப்பார்கள். எச்சரிக்கையுடனும் கட்டுப்பாட்டுடனும் வாழ்ந்து சிறப்புகள் சேர்ப்பார்கள்.

**பெயர் எண்களின் பலன்கள்**

பெயர் எண் என்பது பெயரில் உள்ள தனித்தனி எழுத்துக்களின் எண் மதிப்பைக் கூட்டி வரும் கூட்டுத் தொகையாகும். இப்பெயர் எண் குறித்த பலன்களே அப்பெயர் எண்ணை உடைய நபர்களின் வாழ்க்கையில் சம்பவங்களாக நிகழும். பெயர் எண் என்பது அனை




விநாயகராமன்

த்து விதமான தனி நபர்களின் பெயர்கள், குடும்பப் பெயர், வாகனப் பெயர், தொழிலின் பெயர், நிறுவனப் பெயர் அனைத்திற்கும் பொருந்தும். இரட்டைப் பெயர், மூன்று பெயர் உள்ள இடங்களில் பெயரின் மொத்த கூட்டுத்தொகை எண்ணே அவ்விடத்தில் பெயர் எண்ணாகும்.

**சூரிய ஆதிக்கப் பெயரெண்களின் பலன்கள்**

**பெயர் எண் 1:**

சூரியன் ஆதிக்கம் படைத்தது. பெயர் எண் 1 உடைய பெயர்கள் தனித்து நின்று வெற்றி பெறவே முடியாது. மற்றைய எண்களின் பலத்தால் துணையுடன் வெற்றி பெறும் சக்தி வாய்ந்தது. தனித்து இயங்கும் சக்தி இல்லை.

சிறிய முன்னேற்றம் ஏற்பட்டாலும் பெரிய பின்னடைவு ஏற்படும். வீண் வம்புகளை விலைக்கு வாங்கும். வீண் சிக்கல்கள் எதிர்பாராத வண்ணம் வந்து கொண்டேயிருக்கும். மனதில் தீராத குழப்பம் தொற்றிக் கொள்ளும். தனிப்பட்ட ஒன்று எண் வீடு, வாகனம், அலுவலக எண்ணாக வந்தால் நல்ல பல அதிர்ஷ்டங்களை உருவாக்கித் தரும்.

**பெயர் எண் 10:**

சூரியன் ஆதிக்கம் படைத்த இவ்வெண் ஒன்றுடன் பூஜ்ஜியம் சேர்ந்து அச்சாணியும் சக்கரமும்போல செயற்படும். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும். எவ்வழியிலாவது முன்னேற்றச் செய்யும். பலர் போற்றும் மனிதனாக்கும். பல நாள் வருமானமும் ஒரே நாளில் கிடைக்கச் செய்யும் அற்புதமான எண்ணாகும். பணத்தட்டுப்பாடு வரவே வராது. கண்ணியம் கீர்த்தி உடைய மனிதராக்கும். நிதானமும் தன்னம்பிக்கையும் இருக்கும். சந்தோசமான வாழ்க்கை கிடைக்கும். செல்வம்சேர்ந்து கொண்டேயிருக்கும். நேர்மையை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். சக்கரம் சுழல்வதைப் போலவே அதிர்ஷ்டமும் சுழன்று கொண்டே இருக்கும். வெகு எளிதில் மிகச் சுலபமாக பிரசித்தியடையச் செய்யும். நேர்மையான நடவடிக்கைகளால் குன்றாத யோகத்தைப் பெற்றுத் தரும். புகழை மலை போல் குவித்திடும். பிரசித்தி பெற்ற தெய்வீக எண்ணாகும்.

(தொடரும்....)

# சு.கவா? பெரமுனவா? மகிந்தவிடம் கேளுங்கள்




(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியா? அல்லது பொதுஜன பெரமுனவா? என்ற கேள்விக்கு மகிந்தவே பதில் தர வேண்டும் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்களாக முன்னாள் ஜனாதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் முன்னாள் பிரதமர் டி.எம்.ஜெயரத்ன ஆகியோர் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்களாக உள்ளனர்.

இந்த நிலையில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் "மகிந்த இனி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியா? அல்லது பொதுஜன பெரமுனவா?" என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளிக்கும் போது "இந்த கேள்வியை மகிந்தவிடம் கேட்டால் நல்லது" என பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திவிநெகும திணைக்களத்துக்கு சொந்தமான நிதியை தவறான முறையில் பயன்படுத்திய குற்றச்சாட்டுக்கு அமைய இவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. இது தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றுக்கு வருகை தந்திருந்த போதே இந்த கேள்வியை ஊடகவியலாளர்கள் பசிலிடம் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொலிஸ் நடமாடும் சேவையில் ஆடைகள் அன்பளிப்பு



(கரணவாய்)

பொலிஸ் நடமாடும் சேவையின் ஓர் அங்கமாக வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் உள்ள வயோதிபர்கள், சிறுவர்களுக்கு ஆடைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

நெல்லியடி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பொலிஸ் நடமாடும் சேவையின் ஒரு அங்கமாக வதிரியிலுள்ள பரமானந்தா ஆச்சிரமத்திலுள்ள சிறுவர், முதியோர் என இருபது பேருக்கு ஆடைகள் கடந்த சனிக்கிழமை வழங்கப் பட்டன.

இந் நிகழ்வில் நெல்லியடி உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி சியாளன் மற்றும் வட மாகாணசபை உறுப்பினர் சி. அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-60)

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக ஜூன் 18 ஆம் திகதி விசாரணை



(கொழும்பு)

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான வழக்கை மீண்டும் எதிர் வரும் ஜூன் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த விவகாரம் தொடர்பில், மாகல்கந்த சுதந்த தேரர் மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி ஒருவரும் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று மீண்டும் உயர்நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

இதன்போதே குறித்த வழக்கு எதிர்வரும் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வியாபாரிகளுடன் பிரச்சினை

# சந்தையை பூட்டிய குத்தகைக்காரர்; தவிசாளர் தலையிட்டு திறந்துவைப்பு

(கரணவாய்)

மரக்கறி சந்தையின் கதவுகளைத் திறவாது குத்தகைக்காரர் பூட்டி வைத்திருந்த நிலையில் பிரதேச சபை தவிசாளர் திறந்து வைத்த சம்பவம் மந்திகை சந்தையில் நேற்று திங்கட்கிழமை காலை இடம் பெற்றது.

சந்தை குத்தகைக்காரருக்கும் வியாபாரிகளுக்கும் இடையில் குத்தகைப் பணம் பெறுவது தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக குத்தகைக்காரர் மரக்கறி சந்தையின் கதவினைப் பூட்டியுள்ளார்.

குத்தகைக்காரர் சந்தையில் ஏதாவது பிரச்சினை ஏற்படும் இடத்து பிரதேச சபைக்கு அறிவிக்க வேண்டும். அல்லது தொடர்ந்து சந்தையின்னை நடத்த முடியாது போனால் பிரதேசசபையிடம் ஒப்படைக்க வேண்டும்.

அதைவிடுத்து குத்தகைக்காரர் சந்தையினை தன்னிச்சையாக பூட்டி வைத்துள்ளதாக பிரதேச சபையினருக்கு அறிவிக்கப்பட்டது.

இந் நிலையில் சந்தைக்கு சென்ற தவிசாளர் அ.சா. அரியகுமார் மற்றும் அப் பகுதிக்கு உரிய பிரதேச சபை உறுப்பினர்கள் , பிரதேச சபையின் செயலாளர் எஸ். ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் சந்தையை பூட்டமுடியாது. ஏதாவது பிரச்சினை இருப்பின் பிரதேச சபைக்கு அறிவிக்குமாறு கூறியதையடுத்து சந்தையினை குத்தகைக்காரர் திறந்து விட்டார். (இ-60)



அண்மையில் வீசிய கடும் காற்று காரணமாக உடுப்பிட்டி சமரபாகு வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த தெய்வேந்திரம் என்பவரது வீட்டின் மேல் வேப்பமரம் முறிந்து வீழ்ந்ததில் வீட்டின் ஒரு பகுதியும் மலசல கூடத்தின் ஒரு பகுதியும் சேதமடைந்துள்ளது. (படம்: மகாலிங்கம்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1433

Search for people, places and things | Nagendram Home

## அபிராமி

காதலிப்பதற்கும் விரும்புவதற்கும் இடையிலான வேறுபாடு...



ஒரு பூவை விரும்பினால் அதனைப் பறித்திடுவோம். அதுவே காதலித்தால் அதற்கு தினமும் தண்ணீர் ஊற்றுவோம்

## சுமதி

நினைவுகள் வித்தியாசமானவை! சிலவேளை அழுத நாட்களை நினைத்து சிரிக்க வைக்கும்



சிலவேளை சிரித்த நாட்களை நினைத்து அழ வைக்கும்

## நந்தினி

தேவை முடிந்தவுடன் விலகும் நண்பர்கள் சொத்து இருந்தால் உறவாடும் சொந்தங்கள்



இவர்களுடன் இருப்பதை விட அநாதையாக வாழ்வது எவ்வளவோ மேல்...!

## சாந்தன்

பொறுமையே இல்லாதவன் கூட ஒரு பிள்ளைக்கு தகப்பனாக முடியும்



ஆனால் பொறுப்புள்ள ஒருவனால் மட்டுமே தந்தையாக முடியும்...

## சாருகேஷ்

நீ யாருக்காகவும் கண்ணீர் சிந்தாதே...



உன் கண்ணீருக்குத் தகுதியானவர்கள் உன்னை அழ விடமாட்டார்கள்...!

## சாமினி

பிறகு செலவு செய்யலாம் என்று பணத்தைச் சேமிக்க முடியும்...!



பின்னாளில் வாழ்ந்து கொள்ளலாம் என்று ஒருநாளைக்கூட சேமிக்க முடியாது...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்–2018

# தேர்தல் முறையின் குறை நிறைகள்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர் (Ph.D) Durham
முன்னாள் துணைவேந்தர்

2018 உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல் புதிய தேர்தல் முறையில் நீண்ட கலப்புத் தேர்தல் இடைவெளிக்குப் பின்னர் இடம்பெற்றது. எல்பிட்டி பிரதேசசபை நீங்கலாக நாட்டிலுள்ள 340 சபைகளுக்கும் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. நாட்டில் தேர்தல் நடைபெற்று ஒருசில மணிநேரத்துக்குள் வட்டார ரீதியில் வெற்றி பெற்ற கட்சிகள், வெற்றி பெற்ற அபேட்சகர்கள் விபரங்கள் தெரியவந்தன. இதன் பின் சில மணிநேரங்களில் ஒவ்வொரு குறித்த உள்ளூராட்சி சபைகளில் போட்ட கட்சிகள்/சுயேட்சைக் குழுக்கள் எவ்வளவு ஆசனங்களை பெறுகின்றன என்ற விபரங்களும் கிடைக்கப் பெற்றன.

வட்டார ரீதியில் வெற்றி பெற்றவர்கள், விகிதாசார ரீதியில் கட்சிகளால்/சுயேட்சைக் குழுக்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் விபரம் அரச வர்த்தமானியில் 2018.03.09 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது. தேர்தல் முடிவுகளை உத்தியோகபூர்வமாக வெளியிட தேர்தல் ஆணைக்குழுவிற்கு 27 நாட்கள் எடுத்துள்ளன. இத்தாமதம் கட்சிச் செயலாளர்கள் விகிதாசாரப் பட்டியல் அங்கத்தவர்களின் பெயர்களைக் கொடுக்க ஏற்பட்ட தாமதமும் காரணங்களாகும்.

மேலும் சபைகளின் தவிசாளர், உபதவிசாளர் தெரிவுகளும் ஒவ்வொரு மாகாணத்திலும் மாகாணசபை உள்ளூராட்சி ஆணையாளர்களின் கட்டம் கட்டமாக நடைபெற்று மே மாதத்தில் இருந்து சபைகள் இயங்கத் தொடங்கி விட்டன. தேர்தல் நடைபெற்று சபைகள் இயங்க சராசரியாக 45 நாட்களுக்கு மேல் எடுத்துள்ளன. ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியதும் ஒரு சில மணி நேரத்தில் புதிய ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ பொறுப்பேற்பதும் இவரது அமைச்சர் சபையும் ஒரு சில நாட்களும் நியமிக்கப்படுவதும் வழக்கம். உள்ளூராட்சிச் சபைகளில் தேர்தல் முடிந்து சபைகள் 45 நாட்களின் பின்பே இயங்கத் தொடங்கியது ஏற்புடையதில்லை. இத்தாமதம் குறித்து பலரது விமர்சனத்துக்குள்ளாகியது.

உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல் முடிந்த கையோடு இப்புதிய கலப்புத் தேர்தல் முறை குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதான அரசியல் கட்சித் தலைவர்கள் இம்முறை தொடர்பாக எதிரான கருத்துக்களைத் தெரிவித்தனர். அதேநேரத்தில் சிறுகட்சிகள், ஜனநாயக சக்திகள் ஆதரவு தெரிவித்தன. தற்பொழுது நடைமுறையில் இருக்கும் கலப்புத் தேர்தல் முறைக்கு எதிராகவும் ஆதரவாகவும் கருத்துக்கள் வெளிவந்து கொண்டு இருப்பதால் அடுத்த உள்ளூராட்சிச் சபை தேர்தல் இம்முறையில் நடைபெறுமா என்பது கேள்விக் குறியாகும். மேலும் நடைபெற இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலும் புதிய தேர்தல் முறையில் இடம் பெறுமா, அல்லது பழைய முறையில்தான் இடம் பெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது?

தற்போதுள்ள கலப்பு உள்ளூராட்சி தேர்தல் முறை முன்னைய உள்ளூராட்சித் தேர்தல் முறையில் இருந்த குறைகளை நீக்கவே உருவாக்கப்பட்டது. ஜனநாயகத்தை மக்கள் ஆட்சியை வலுப்படுத்தவே கொண்டு வரப்பட்டது. முன்னைய உள்ளூராட்சித் தேர்தல் முறையில் ஒரு உள்ளூராட்சிச் சபை ஒரு தேர்தல் தொகுதியாக இருந்ததுடன் இச்சபைக்குட்பட்ட பரப்பில் நடக்கும் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் சுயேட்சைக் குழுவும் பெற்ற வாக்குகளுக்கு ஏற்ப அங்கத்தவர் எண்ணிக்கையைப் பெற்றனர். மேலும் வாக்காளர்கள் மூன்று விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்ததுடன் இவ்விருப்பு வாக்குகளை ஒருவருக்கோ இருவருக்கோ அல்லது மூவருக்கோ அளிக்கும் தகுதியைப் பெற்றிருந்தனர். வாக்காளர்கள் தாம் விரும்பும் கட்சியை அல்லது சுயேட்சைக் குழுவையும் தாம் விரும்பிய கட்சி அல்லது சுயேட்சைக் குழுவிலுள்ள அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர். மேலும் இத்தேர்தல் அமைப்பில் கூடிய வாக்குகளைப் பெறும் கட்சிக்கு இரு போனஸ் ஆசனமும் கிடைத்தது. வாக்காளர்கள் தங்கள் விருப்பு வாக்குகளால் அங்கத்தவர்களை தெரிந்த பொழுது அதிக கூடிய வாக்குகளைப் பெற்றவர் சபைத் தலைவராகக் கேட்கும் நிலையும் இருந்தது.

இக்கலப்பு தேர்தல் முறைக்கு ஓர் உதாரணமாக கொழும்பு மாநகர தேர்தல் முடிவு தரப்பட்டுள்ளது.

Local Authority - Colombo Municipal Council

Polling District - Colombo

| Local Authority Final Result | | Members |
|---|---|---|
| UNP United National Party | 131353 (46.09%) | 60 |
| SLPP Sri Lanka Podujana Peramuna | 60087 (21.08%) | 23 |
| UPFA United People's Freedom Alliance | 31421 (11.03%) | 12 |
| UPA United Progressive Alliance | 27168 (9.53%) | 10 |
| JVP People's Liberation Front | 14234 (4.59%) | 06 |
| IG2 Independent Group 2 | 4833 (1.7%) | 02 |
| UPA United Peace Alliance | 4700 (1.65%) | 02 |
| SLNF Sri Lanka National Force | 3251 (1.14%) | 01 |
| CWC Ceylon Worker's Congress (P.Wing) | 2853 (1%) | 01 |
| NFGG National Front for Good Governance | 2771 (0.97%) | 01 |
| UNFF United National Freedom Front | 1380 (0.48%) | 01 |
| IG1 Independent Group 1 | 929 (0.33%) | 00 |
| Total Members | | 119 |
| Valid | 284980 (0%) | (Over hang r mbers 09) |
| Rejected | 70230 (0%) | |
| Polled | 292003 (0%) | |
| Electors | 394044 (0%) | |

புதிய உள்ளூராட்சிச் சபை தேர்தல் முறை உருவாக்க காரணமாக இருந்த குறைபாடுகள் பின்வருமாறு,

(1) குறித்த உள்ளூராட்சி சபை பிரதேசம் முழுதும் ஒரு தேர்தல் தொகுதியாக தேர்தல் விகிதாசார/விருப்பு வாக்குகள் அடிப்படையில் இடம் பெறுவதால் சபையின் ஒரு பகுதியிலிருந்து பலரும் மற்றப் பகுதியில் இருந்து யாரும் தெரிவு செய்யப்படாத நிலைமைகள் காணப்பட்டன. இதனால் பிரதேச பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய முடியாத நிலைமைகள் காணப்பட்டதுடன் சரியான இடஞ்சார் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாத நிலை காணப்பட்டது.

(2) சபை பிரதேசம் முழுவதற்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டதால் தங்கள் பொறுப்புக் கூறலைத் தவிர்க்கக் கூடியதாக இருந்தது.

(3) தேர்தல் காலத்தில் கட்சி அபேட்சகர்கள் தங்களுக்கிடையே விருப்பு வாக்குகளுக்காக முரண்பட்டுக் கொள்ளும் நிலை காணப்பட்டது.

வட்டார ரீதியில் பிரதிநிதித்துவ முறையை உருவாக்குவதன் மூலம் பொறுப்புக் கூறலை அதிகரிக்க முடியும் என்றும் சகல பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய முடியும் என்றும் கருதப்பட்டது. மேலும் விருப்பு வாக்குகளை இல்லாது செய்வதன் மூலம் ஒரே கட்சி அபேட்சகர்களுக்கிடையே காணப்படும் முரண்பாடுகள், கோபதாபங்கள் நீங்கலாம் எனக் கருதப்பட்டது. இப்பின்புலத்தில் 70வீதம் பிரதிநிதிகள் வட்டார மூலமும் 30 வீதம் பிரதிநிதிகள் விகிதாசார முறை மூலமும் தெரிவு செய்யப்படும் கலப்புத் தேர்தல் முறை உருவாக்கப்பட்டு தேசிய உள்ளூராட்சி வட்டார நிர்ணயக் குழு அமைக்கப்பட்டது.

தேசிய உள்ளூராட்சி வட்டார நிர்ணயக்குழுவின் செயற்பாடுகள் அரசியல் சார்பானதென குற்றம் சாட்டப்பட்டு உள்ளூராட்சி வட்டாரங்களை மீள் நிர்ணயம் செய்ய உள்ளூராட்சி வட்டார மீள் நிர்ணயக் குழு அமைக்கப்பட்டு அவர்களின் சிபார்சுகள் ஏற்கப்பட்டன. பின்னைய குழுவிற்கு சபைகளின் அங்கத்தவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கவோ குறைக்கவோ அதிகாரம் இருக்கவில்லை. வட்டாரங்களை மீள் நிர்ணயம் செய்யவும் தேவைப்படின் வட்டாரங்களின் பெயர்களை மீள்பரிசீலித்து மாற்றவும் அதிகாரம் கொண்டு இருந்தது.

வட்டாரங்கள் மீள் பரிசீலனை செய்து கொண்டு இருக்கும் பொழுது 70:30 பிரதிநிதித்துவம் குறித்து விமர்சனம் எழுந்தது. உள்ளூராட்சிச் சட்டத்தில் மொத்த அங்கத்தவர்களில் 70 வீதம் வட்டார அடிப்படையிலும் 30 விகிதம் விகிதாசார அடிப்படையில் என்று இருக்காது மொத்த வட்டார அங்கத்தவர்களில் 30 வீதம் என பொருள்பட்டது. இதனால் உண்மையில் 23 வீதம் சம விகிதாசார ரீதியில் தெரிவாகும் அங்கத்தவர்கள் இருப்பர் என கருத்து வெளியிடப்பட்டு விகிதாசார பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டுமென்ற கருத்து பரப்புரைக்கப்பட்டது.

பிரதம மந்திரி, எல்லா உள்ளூராட்சி சபைகளில் பெண்கள் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்றும் மொத்த சபை அங்கத்தவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் மேலதிகமாக 25 வீதம் பெண் அங்கத்தவர்கள் இருக்க வேண்டுமென்றும் இவர்களை கட்சிகளால் நியமிக்கப்படவேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டது. விகிதாசார பிரதிநிதித்துவத்தை கூட்ட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையும் மேலதிகமாக பெண்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வட்டார ரீதியில் தெரிவாகும் அங்கத்தவர்கள் 60 வீத பிரதிநிதித்துவத்தை பெறவும் விகிதாசார முறையில் 40 வீதம் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்ற சட்டம் இயற்றப்பட்டது.

மேலும் எல்லா உள்ளூராட்சிச் சபைகளிலும் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையில் 25 வீதம் பெண்கள் இருக்க வேண்டுமென்பது சட்டமானது. வட்டார அடிப்படைத் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் சுயேட்சைக்குழுவும் ஒவ்வொரு சபையின் மொத்த வட்டார எண்ணிக்கையில் 10 விகிதத்தில் பெண்கள் அபேட்சகராக இருக்க வேண்டுமென்பதும் விகிதாசாரப் பெயர்ப்பட்டியலில் பெண்கள் 25வீதம் இருக்க வேண்டுமென்பதும் சட்டமாகியது.

இதனால் இன்றைய உள்ளூராட்சி தேர்தல் முறை 60 வீநம் வட்டார ரீதியிலும் 40 வீதம் விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படுவதுடன் மொத்த சபையில் 25 பெண்கள் இருப்பதுவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் விகிதாசார வாக்கு முறை தொடர்ந்து கடைப் பிடிக்கப்படுகின்ற பொழுதும் விருப்பு வாக்கு முறை ஒழிக்கப்பட்டு விகிதாசார முறையில் அங்கத்தவர்களை நியமிக்க பொறுப்பு கட்சிச் செயலாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. வட்டார ரீதியில் வெற்றி பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை கட்சி விகிதாசார ரீதியில் பெறும் ஆசனங்களின் எண்ணிக்கைக்குக் கூடுதலாக இருப்பின், கட்சி சுயேட்சைக்குழு அவ்வாசனங்களை வைத்திருக்கும் முறை உள்வாங்கப்பட்டுள்ளன. இம் மேலதிகமான ஆசனங்களை தொங்கு ஆசனம் (Over hang seats) என குறிப்பிடுவர்.

(தொடரும்)

# நெடுந்தாரகைப் படகுச்சேவை இலவசமாக வழங்கப்பட வேண்டும்

## யாழ்.மாநகரசபை உறுப்பினர் குகேந்திரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பகுதி மக்களின் போக்குவரத்து தேவைக்காக சேவையிலீடுபடுத்தப்படும் குமுதினி படகுச் சேவை இலவசமாக மக்களுக்கு கிடைக்கின்றபோது ஏன் நெடுந்தாரகை படகுச் சேவைக்கு மக்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றது? குறித்த படகுச் சேவையையும் மக்களின் நலன்கருதி இலவசமாக வழங்கவேண்டும் என ஈழுமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாகச் செயலாளரும் யாழ்.மாநகர சபையின் உறுப்பினருமான கா.வேலும்மயிலும் குகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கும்நெடுந்தீவுக்குமான போக்குவரத்து சேவையை மக்களின் நலன் கருதி எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பல தடைகளையும் தாண்டி சீரான முறையில் கடந்த காலத்தில் முன்னெடுத்திருந்தார். அதன் பயனாக எமது தீவகப்பகுதி மக்கள் தமது போக்குவரத்து தேவைகளை இலகுவாகவும் இலவசமாகவும் பெற்று வந்தனர்.

ஆனால் தற்போது நெடுந்தீவு பகுதி மக்களின் போக்குவரத்தில் பல அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் குமுதினி படகுக்கு பயணக்கட்டணம் அறவிடப்படாத போது நெடுந்தாரகை படகுச் சேவைக்கு ஏன் பணம் அறவிடப்படுகின்றது? அதனை குறித்த தரப்பினர் ஆராய்ந்து மக்களின் நலன்கருதி இலவசமாக சேவையிலீடுபடுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் இப்பகுதியில் காணப்படும் பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருவதால் போக்குவரத்து தேவைகளின் போது, மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதற்கான தீர்வுகளும் காலக்கிரமத்தில் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்த குகேந்திரன் குறித்த பிரதேச மக்களது தேவைகளும் பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டும் என்பதற்காக இந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் குறித்த பிரச்சினையை நாம் முன்நிறுத்தியிருந்தோம் என தெரிவித்தார். (இ-7)

# இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தை விட, 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு முதல் நான்கு மாதங்களில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளைவிட, இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில், 7இலட்சத்து 7924 பேர் வருகை தந்துள்ளனர். இது 17 சதவீத அதிகரிப்பை காட்டுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு 433 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலாபமாக கிடைக்குமென எதிர்பார்த்த நிலையில், 1,313 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலாபமாகக் கிடைத்துள்ளது. (இ-7)

# ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வருவார்

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



(ஏறாவூர்)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ போன்று ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வருவார் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கண்ணகிபுரம் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 75ஆவது மாதிரிக் கிராமமான முல்லை. நகர் வீடமைப்புத்திட்டத்திறப்பு விழா நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ வீடமைப்பு திட்டத்தினை திறம்பட மேற்கொண்டு வருவதையிட்டு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். எதிர்க்கட்சியில் இருக்கும் போது தனது மக்களின் நலனின் அக்கறை கொண்டு பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவதில் பெரும் ஊக்கமாக இருந்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் பிரகாரம் கடந்த வருடம் 1700 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இந்த வருடத்திலும் ஆயிரக்கணக்கில் பல வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 48 வீடமைப்பு மாதிரிக் கிராமங்கள் உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனை நூறாக மாற்றித் தருவேன் என என்னிடம் வாக்குறுதி வழங்கினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 87,455 வீடுகள் அமைக்க வேண்டிய தேவைப்பாடுகள் காணப்படுகின்றன. வட கிழக்கில் ஒரு இலட்சத்து ஏழாயிரம் பேருக்கு வீடுகள் தேவையாக உள்ளன. அத்தோடு இந்தியாவில் இருந்து வருகை தரும் 60 ஆயிரம் பேருக்குமாக ஒரு இலட்சத்து 67 ஆயிரம் பேருக்கு வீடுகள் தேவை.

அமைச்சர் விசேடமாக நடுத்தர வர்க்கத்தினரை கவனத்தில் கொண்டு வீட்டுத் திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார். வறிய நிலையில் வீடுகள் கட்ட முடியாத நிலையில் உள்ளவர்கள் வீடுகளைக் கட்டுவதற்கு நுண்கடன்களை பெறுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்கடனால் 17 பேருக்கு மேல் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். வறிய நிலையில் உள்ளவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட வேண்டிய அவசியம் இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




ஹற்றன் அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அஞ்சல் சேவை பிரச்சினை தீர்வாக உறுதி செய்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு தாமதமின்றி ஒப்புதல் வழங்குதல், சீரற்ற தொழில்நுட்ப சேவையை சீர் செய்து அஞ்சல் சேவை வீழ்ச்சியை தடுத்து நிறுத்துதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# செய்தித்துளிகள்

## புதிய மாணவர் அனுமதி பிற்போடல்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொடர்பாடல் மற்றும் வர்த்தக கற்கைகள் பீடத்தின் 2016/17 கல்வியாண்டுக்கான புதிய மாணவர் அனுமதி காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

புதிய மாணவர் அனுமதி இன்று நடைபெறவிருந்ததாகவும் குறித்த பீடங்களில் தற்போது கல்வி கற்கும் மாணவர்கள் மேற்கொண்டிருக்கும் தொடர்ச்சியான வகுப்பு பகிஷ்கரிப்பு காரணமாக அனுமதி காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாகவும் பீடாதிபதி வீ.கனகசிங்கம் தெரிவித்துள்ளார்.

அதன்படி குறித்த அனுமதிக்கான நாள் விரைவில் அறிவிக்கப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (இ-7)

## இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய தெரிவுக்குழு உறுப்பினர்களாக ஐவர்

(கொழும்ப)

இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய தெரிவுக்குழு உறுப்பினர்களாக ஐவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி தலைவராக, கிரேம் லெப்ரோய் மற்றும் காமினி விக்கிரமசிங்க, எரிக் உபசாந்த, ஜெரில் வுடெர்ஸ், சந்திரிகா, ஹத்துருசிங்க உள்ளிட்டோரே இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவின் புதிய உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## கஞ்சாவுடன் இரு இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

மட்டக்களப்பு -வெல்லாவெளி பொலிஸ் பிரிவின் கீழுள்ள திக்கோடை பிரதேசத்தில் கஞ்சாவுடன் இரு இளைஞர்களை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த பிரதேசத்திலுள்ள வீடுகளை சோதனையிட்ட போது 1500 மில்லி கிராம் பெறுமதியான கஞ்சாவை மீட்டுள்ளதுடன் இவர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். (இ-7)

## இலங்கையைப் பாராட்டிய மண்டேலாவின் மனைவி

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சுகாதாரத் துறை மூலமான முன்னேற்றத்தை, தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான நெல்சன் மண்டேலாவின் மனைவி க்ரேசலா மண்டேலா வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

ஜெனிவாவில் அண்மையில் இடம்பெற்ற உலக சுகாதார அமைப்பின் மாநாட்டில் க்ரேசலா மண்டேலா நிகழ்த்திய உரையில் இலங்கை சுகாதாரத் துறையில் கண்டுள்ள வெற்றியை இரண்டு முறை பாராட்டியதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்ஹ தெரிவித்தார்.

இதேவேளை, ஜெனிவா உலக சுகாதார அமைப்பின் மாநாட்டில் மேலும் பல நாடுகள் இலங்கையில் சுகாதாரத் துறையில் காணப்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பாராட்டியதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மின்சாரசபை ஊழியர்கள் மீது புத்தளம் பிரதேசத்தில் தாக்குதல்

(கொழும்பு)

பராமரிப்பு நடவடிக்கைகளுக்காகச் சென்ற மின்சார சபை ஊழியர்கள் இருவர் மீது புத்தளம் - கரம்ப பிரதேசத்தில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் பராமரிப்பு பிரிவின் அதிகாரிகள் மீதே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். தாக்குதல் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## வாகன பற்றரிகளை திருடிய குழுவில் ஒருவர் கைதானார்

(கொழும்பு)

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களின் பற்றரிகளை, திருடிய ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினரில் ஒருவர் தம்புள்ளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சில மாதங்களாக பொருளாதார மத்திய நிலையத்தின் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஆட்டோ, சிறிய லொறிகள் ஆகியவற்றின் பற்றரிகளைத் திருடியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (இ-7)




## குணம் மாறாத செல்வந்தன்



முன்னொரு காலத்தில் செல்வந்தன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அளவு கடந்த செல்வம் இருந்தும் ஒருவருக்கும் ஒரு பொருளையும் கொடுக்க மாட்டான். யாராவது வறியவர் அவனை நாடி வந்தால், "யாரிடமும் எதையும் கேட்கக்கூடாது, யாருக்கும் எதையும் கொடுக்கக் கூடாது என்று நான் ஒரு கொள்கை வைத்திருக்கிறேன். சும்மா என்னை தொந்தரவு செய்யாதே! போ...போ..." என்று விரட்டி விடுவான்.

தன்னிடம் வேலை செய்யும் பணியாளர்களை மிகக் கடுமையாக வேலை வாங்கி விட்டு, மிகக் குறைந்த ஊதியத்தையே அவர்களுக்கு வழங்குவான். இப்படி ஒரு விதத்திலும் எந்த நற்செயலும் புரியாமல் சுயநலத்துடன் வாழ்ந்தான். காலங்கள் உருண்டோடின. செல்வந்தன் கிழப் பருவமெய்தி மரணமடைந்தான்.

அன்பில்லாத அவனை அடக்கம் செய்த இடத்தில் ஒரு புல் பூண்டுகூட முளைக்கவில்லை. அவன் செய்த தீய செயல்களின் பயனாக அவன் நரகத்தில் உழல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நரகத்திலும் "பாழ் நரகக் குழி" என்ற இடத்தில் மிகமிகப் பாவம் செய்த ஆத்மாக்களுடன் கிடக்க நேர்ந்தது. அதன் கொடுமை தாங்காமல் "இறைவா, என்னை மன்னித்துவிடு!" என்று கண்ணீர் விட்டு மன்றாடினான்.

இதைக்கண்ட தர்மதேவதை, அவன் மேல் இரக்கப்பட்டு, அவனை அக்குழியிலிருந்து மேலே கொண்டு வர எண்ணியது. அவன் வாழ்நாளில் ஏதாவது ஒரு நற்செயலையாவது செய்திருப்பானா? என நினைத்தது. ஆம்! அவனும் தன்னையும் அறியாமல் ஒரே ஒரு நற்செயல் செய்திருந்தான்!

அது என்னவென்றால் அவன் ஒரு சமயம் நடந்து செல்லும்பொழுது வழியில் சிறு சிலந்திப் பூச்சியைத் தரையில் கண்டான். அதை மிதிக்காமல் தன் காலை எட்டி வைத்து நடந்தான்.

அவனை அறியாமல் செய்த அந்த நற்செயலின் பலனை அவனுக்கு வழங்க தர்ம தேவதை முடிவு செய்தது. தர்மதேவதையின் கையில் உடனே ஒரு சிலந்தி தோன்றியது. அது தன் வாயிலிருந்து நூல் போன்ற பொருளை உமிழ்ந்து அந்த நரகக் குழிக்குள் செலுத்தியது.

தர்மதேவதை அந்தக் கொடியவனை அழைத்து, "இந்த நூலைப்பிடித்து, நீ மேலேறி வந்தால், இந்தக் குழியிலிருந்து வெளியேறிவிடலாம்!" என்றது.

"இந்தச் சிலந்தியின் நூல் எப்படி என் எடையைத் தாங்கும்?" என்று கேட்டான் அவன்.

"முயற்சி செய்து தான் பாரேன்!" என்றது தர்ம தேவதை.

அதன்படியே அவன் முயற்சி செய்ய... என்ன அதிசயம்! அவன் கொஞ்சம் கொஞ்சமாக மேலே ஏறி வந்து கொண்டிருந்தான். இப்படி அவன் பாதித் தொலைவு ஏறி வந்து கொண்டிருக்கும் பொழுது தன் காலுக்கடியில் மேலும் சிலரும் அந்த சிலந்தியின் நூலைப் பிடித்துக் கொண்டு ஏறி வருவதைக் கண்டான். அவனுக்கு உடனே கோபம் தலைக்கேறியது.

"அடேய்! பாவிகளா! இது நான் மட்டுமே ஏற வேண்டிய நூல்! நீங்கள் ஒருவரும் ஏறக்கூடாது!" என்று கூறிய படியே பொறாமையாலும் சுயநலத்தாலும் தன் காலுக்குக் கீழே தொங்கிய அந்தச் சிலந்தி நூலை அறுத்து எறிந்தான். அதைப் பிடித்து ஏறத்தொடங்கியோர் அனைவரும் மீண்டும் பாதாளத்தில் வீழ்ந்தனர்.

அந்தோ பரிதாபம்! நரகத்திலும் மனம் திருந்தாத அவன் துர்குணத்தால் அவன் பிடித்திருந்த நூல் முழுவதுமாக அறுந்து அவன் மீண்டும் அந்தக் குழிக்குள்ளேயே வீழ்ந்தான்! தர்மதேவதை உடனே மறைந்து போனது! சிலந்தியும்தான்!




- 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவின் பியெட்மொண்ட் நகரில் இடம்பெற்ற போரில் அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளைத் தோற்கடித்து கிட்டத்தட்ட 1,000 பேரை சிறைப்பிடித்தனர்.
- 1900-இரண்டாம் போவர் போர்: பிரித்தானியர் தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியாவைக் கைப்பற்றினர்.
- 1912-ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் கியூபாவில் இறங்கினர்.
- 1946-சிக்காகோவில் உணவுசாலை ஒன்று தீப் பிடித்ததில் 61 பேர் கொல்லப்பட்டனர்.
- 1956-இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- 1959-சிங்கப்பூரின் முதலாவது அரசு பதவியேற்றது.
- 1969-அனைத்துலக கம்யூனிஸ்டுகளின் மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.
- 1974-ஈழப்போர்: சிவகுமாரன் உரும்பிராயில் பொலிஸார் சுற்றி வளைத்த போது சயனைட் அருந்தி மர்ணமடைந்தார். இவர் ஈழப் போரில் முதன் முதலில் சயனைட் அருந்தி வீரச்சாவையடைந்தவர்.
- 1977-முதலாவது தனிக்கணனி அப்பிள் II விற்பனைக்கு விடப்பட்டது.
- 1979-இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி அரசுடைமை ஆக்கப்பட்டது.
- 1984-இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சீக்கியர்களின் பொற்கோயிலில் தாக்குதல் நடத்த உத்தரவிட்டார்.

### பிறப்புகள்

- 1646-எலினா கார்னரோ பிசுகோபியா, இத்தாலியக் கணிதவியலாளர், மெய்யியலாளர் (இ. 1684)
- 1723-ஆடம் சிமித், இசுக்கொட்டியப் பொருளியலாளர், மெய்யியலாளர் (இ. 1790)
- 1862-ஆல்வார் குல்ஸ்ட்ரான்ட், நோபல் பரிசு பெற்ற சுவீடன் கண் மருத்துவர் (இ. 1930)
- 1882-சைமன் கிரகரி பெரேரா, இலங்கை இயேசு சபை கத்தோலிக்க மதகுரு, வரலாற்றாளர் (இ. 1950)
- 1883-ஜான் மேனார்ட் கெயின்ஸ், ஆங்கிலேயப் பொருளியலாளர், மெய்யியலாளர் (இ. 1946)
- 1896-முகம்மது இஸ்மாயில், இந்திய முஸ்லிம் அரசியல் தலைவர் (இ. 1972)
- 1900-டென்னிஸ் கபார், நோபல் பரிசு பெற்ற அங்கேரிய-ஆங்கிலேய இயற்பியலாளர், பொறியியலாளர் (இ. 1979)
- 1925-வ.அ.இராசரத்தினம், ஈழத்து எழுத்தாளர்
- 1929-வ.ந.நவரத்தினம், இலங்கை அரசியல்வாதி (இ. 1991)
- 1936-பூ.ம.செல்லத்துரை, இலங்கை எழுத்தாளர், பத்திரிகையாளர் (இ. 2016)
- 1965-மயில்சாமி, தென்னிந்திய நடிகர், நகைச்சுவையாளர், தொலைக்காட்சித்தொகுப்பாளர்
- 1974-ரம்பா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

- 1974-சிவகுமாரன், சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது ஈழப் போராளி (பி. 1950)
- 1994-கிருஷ்ண சைதன்யா, மலையாள இலக்கியவாதி, மதிப்புரைஞர் பி. 1918)
- 2004-கே.கணேஷ், இலங்கை மலையக எழுத்தாளர் (பி. 1920)

### சிறப்பு நாள்

- தந்தையர் தினம் (டென்மார்க்)
- இந்தியர் குடியேறிய நாள் (சுரிநாம்)
- விடுதலை நாள் (சீசெல்ஸ்)
- ஆசிரியர் நாள் (உருமேனியா)
- உலக சுற்றுச்சூழல் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 140 | 120 | 110 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 85 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 140 | 110 | 200 | 100 |
| தக்காளி | 150 | 140 | 160 | 130 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 35 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 150 | 120 | 120 | 80 | 120 | 100 |
| கரட் | 200 | 300 | 280 | 190 | 320 | 180 |
| பூசணி | 40 | 20 | 30 | 20 | 40 | 30 |
| புடோல் | 100 | 70 | 120 | 80 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 35 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 | 180 | 150 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 85 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 200 | 240 | 120 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 80 | 70 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 65 | 100 | 60 |
| பயற்றங்காய் | 60 | 100 | 80 | 50 | 80 | 200 |
| லீக்ஸ் | 250 | 300 | 320 | 220 | 350 | 220 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 70 | 120 | 100 |
| கறிமிளகாய் | 150 | 170 | 200 | 100 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 120 | 70 | 80 | 250 |
| போஞ்சி | 250 | 300 | – | – | 280 | 220 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | – | – | 140 | 90 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 40 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 160 | 130 | 180 | 210 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50-80 | 70 | 25-60 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | – | 200 | 180 |
| வெங்காயப்பூ | 250 | 350 | 280 | – | 280 | 220 |
| முள்ளங்கி | 100 | 100 | 140 | 40 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 10 | 40 | 35 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 30 |
| சரப்பலா | 100 | 100 | 80 | – | 100 | – |

அசல் சந்தோசம் மலிவாகக் கிடைக்கிறது. அப்படி யும் போலிக்காக நாம் அதிக விலை கொடுக்கிறோம்.
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தது கூட்டமைப்பு

*நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன்*
*நாலாறு மாதமாய் குயவனை வேண்டி*
*கொண்டு வந்தான் ஒரு தோண்டி மெத்தக்*
*கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.*

என்ற பாடல் பலரும் அறிந்ததே.

மனித உடம்பின் நிலையாமையை எடுத்துக் கூறுவதற்காக கடுவளிச்சித்தரால் பாடப்பட்டதே இது.

இந்தப் பாடலை வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதி அவர்கள் ஒருமுறை வடக்கு மாகாண சபையில் கூறியிருந்தார்.

வடக்கு மாகாண சபையில் வெளிநடப்புச் செய்யும்போது இந்தப் பாடலைப் பாடிய வண்ணம் பசுபதி அவர்கள் சபையை விட்டு வெளியேறினார்.

அப்போது அவர் எதற்காக இந்தப் பாடலை பாடுகிறார் என்பது நமக்கு மட்டுமல்ல, அவருக்குமே தெரிந்திருக்க நியாயமில்லை.

ஆனால் இப்போது நந்தவனத்து ஆண்டி யார் என்பதை வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதி அவர்கள் நன்கு தெரிந்திருப்பார் என்று நம்பலாம்.

நல்லாட்சி என்று கூறி அவர்களோடு சேர்ந்து சர்வதேச விசாரணையையும் கைவிட்டு; ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற கால அவகாசமும் வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் நந்தவனத்து நாடகத்தார் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

நல்லாட்சி எல்லாம் தரும் பொறுத்திருப்போம் என்பார் சம்பந்தர் அவர்கள்.

புதிய அரசியலமைப்புக்குள் சமஷ்டியும் இருக்கிறது. ஆனால் அது வெளிப்படையாகத் தெரியாமல் உள்ளது என்பார் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம்.

எங்கள் பொறுமையை அரசு சோதிக்கக் கூடாது என்று அதட்டலுடன் சொல்வார் எதிர்க் கட்சித் தலைவர்.

இவற்றையெல்லாம் கூறிக்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து தங்கள் நலனை மட்டுமே கவனித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இப்போது எல்லாவற்றையும் போட்டுடைத்துவிட்டது.

சுருங்கக்கூறின் நல்லாட்சிக்கு கூட்டமைப்பு வழங்கிய ஆதரவால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்பதற்கு அப்பால், தமிழ் மக்களுக்கு இருந்த சர்வதேசப் பலமும் இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது.

இது ஒருபுறமிருக்க, இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது கடும் கோபம் கொண்டுள்ளார்.

அந்தக் கோபத்தை காட்டிலும் பல மடங்கு கோபம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென நான் கடுமையாகப் பாடுபட, கூட்டமைப்போ ஒரு காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் வைத்துக் கிழித்தெறிந்தவர்களுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு அவர்களின் தாளத்துக்கு ஆட்டம் போடுகிறது.

இந்தாப்பார் நான் யார் என்று காட்டுகிறேன் என்பதுபோல ஜனாதிபதி மைத்திரிபால தன் விஸ்வரூபத்தை காட்டத் தலைப்பட்டுள்ளார்.

போதாக்குறைக்கு பிணைமுறி சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களுடன் வெளியிடப்பட, எங்கட கூட்டமைப்பு கூத்தாடிப் போட்டுடைத்தது தெரியவரும்.

### மலசலகூடம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட

# நிதியை அதிகரிக்க கோரி

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மலசலகூடம் அமைப்பதற்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதாத காரணத்தினால் பொதுமக்க ளின் நன்மை கருதி குறித்த தொகையை ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க வேண்டும் என ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மீளாய்வு கூட்டம் நேற்று மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றபோது கருத்து தெரிவித்த யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) முரளிதரன்,

யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக மலசலகூடம் இல்லாமல் பொதுமக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்கமைய அவர்களிற்கு தேவையின் விகிதாசார அடிப்படையில் மலசலகூடங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்துக்கு தற்போது 14 ஆயிரம் மலசலகூடங்கள் தேவையாக உள்ளது. இந்த வருடம் 891 மலசலகூடங்கள் அமைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. தேவையின் விகிதாசார அடிப்படையில் தற்போது அனைத்து பிரதேசங் களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இன்னமும் 13109 மலசலகூடங்கள் தேவைப்படுகின்றன. மேலும் தற்போது வீட்டுத் திட்டங்களும் வழங்கப்பட இருக்கின்றன.

அவ்வாறு வழங்கப்படும் வீட்டுத் திட்டத்தில் மலசலகூடமும் சேர்ந்ததாகவே அமையப் பெறவுள்ளன என தெரிவித்தார்.

ஆனால் தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற மலசலகூடங்களுக்கு 55 ஆயிரம் ரூபாயே ஒதுக்கப்பட்டும் வருகிறது. இந்த நிதி போதாதென பொதுமக்கள் முறையிட்டுள்ளார்கள்.

அத்துடன் தீவுப்பகுதிகளுக்கு முற்றிலும் போதாததாக இந்த நிதி உள்ளது. மலசலகூடம் மிக முக்கிய மானதொன்று. அதன் அடிப்படையில் அவர்களுக்கு சீரான முறையில் அமைப்பதற்கு வழியமைத்து கொடுக்க வேண்டும் என பலராலும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அதற்கமைய குறித்த நிதியை ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாயாக அதிகரித்து வழங்க வேண்டுமென கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம-9)

## தீவுப் பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் படகுகள்

## பிரதேச சபையின் அனுமதி பெற்றே சேவையில் ஈடுபடலாம்

### ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முடிவு

யாழ். தீவுப்பகுதி போக்குவரத்துக்கான படகுச் சேவையில் ஈடுபடும் படகுகள் இனி வரும் காலங்களில் பிரதேச சபையில் அனுமதி பெற்றே படகு சேவையை மேற்கொள்ள முடியும் என ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மீளாய்வு கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பிரதேசங்களுக்கான போக்குவரத்து கட்டணங்கள் சட்டத்துககு முரணாண வகையில் அதிகளவில் வசூலிக்கப்படுவதாக குற்றஞ்சாட்டப் பட்டது.

அத்தோடு உரிய அனுமதிகள் பெறப்படாது செல்வாக்குகளின் அடிப்படையில் படகுகள் பல சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் நயினாதீவிற்கான படகுச் சேவையை நயினாதீவு விகாராதிபதி மேற்கொண்டு வருகிறார். பிரதேச சபையில் எந்தவிதமான அனுமதியும் எடுக்காமல் அந்த சேவை இடம் பெற்று வருகிறது. ஆனால் அச்சேவைக்கு கட்டணம் அறவிடப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகளால் அங்குள்ள மக்களும் அப் பிரதேசங்களுக்குச் சென்று வருகின்ற பயணிகளும் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது குறித்து சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பல தடவைகள் தெரியப்படுத்தப் பட்டபோதும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஏனெனில் இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய தரப்பினர்களும் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றனர்.

ஆகவே இதற்கொரு முடிவை எடுக்க வேண்டுமென மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய இது தொடர்ச்சியாக இருந்து வருகின்ற பிரச்சனையாகவுள்ளது. தீவுப்பகுதிகளில் படகு சேவையில் ஈடுபடும் அனைத்து படகுகளும் பிரதேச சபையில் அனுமதி பெற வேண்டும். அதற்கான சட்ட ஏற்பாடுகள் விரைவில் அமைக்கப்படும். இதன்படி இனிவரும் காலங்களில் உரிய முறையில் படகு சேவைகள் இடம்பெற வேண்டும்.

தற்போது உள்ளூராட்சி சபைகளின் உப விதிகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அதனை நடைமுறைப் படுத்துவதுடன் இதற்கான மேலதிக நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என இணைத்தலைவர்கள் தெரிவித்திருந்தனர். (ம-9)

### அலோசியஸிடமிருந்து 118 பேருக்கும் அதிகமானோர்

## பணம் பெற்றுக் கொண்டனர் – கபே

மத்திய வங்கி ஊழல் விவகாரத்தில் பணம் பெற்றுக் கொண்டவர்களின் பட்டியலில் 118 பேருக்கும் அதிகமானோர் இருக்கலாம் என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டின் அரசியலில் பேசு பொருளாக மாறியுள்ள மத்திய வங்கி ஊழல் தொடர்பான விடயத்தில் அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் மாத்திரமல்லாது தேர்தலில் போட்டியிட்டவர்களும் பணம் பெற்று கொண்டிருக்கலாம் என தென்னகோன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேபோன்று தற்போது அரசியல்வாதிகள் பணம் பெற்றுக் கொண்ட விடயம் பூதாகரமாக வெளிப்பட்டுள்ள காரணத்தினால், மத்திய வங்கி ஊழலில் தொடர்புபட்ட முக்கிய குற்றவாளியான அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்கு கொண்டு வரும் விடயம் மறக்கடிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்டர்போல் மூலமாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு கொண்டு வரமுடியவில்லை என நினைவுபடுத்திய கீர்த்தி தென்னகோன், திருமண வீட்டுக்கு சென்று வருவதாக பிரதமரிடம் தெரிவித்து விட்டுச்சென்ற அவர் இன்னும் திரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ஒழுக்கம் உள்ளவராக இருங்கள். தைரியத்தை மனதில் நிலைநிறுத்துங்கள். இதயப்பூர்வமான அன்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.
- கோழை பாவம் செய்கிறான். தைரியசாலி மனதால் கூட பாவம் செய்வதில்லை.
- நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி, மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி செய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவி செய்வது தான்.
- அனைத்து மத வழிபாட்டின் ஒட்டுமொத்த சாராம்சம் என்பது தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வது மட்டும் தான்.
- பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனை தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே ஆன்மிகம்.
- சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் வேறுபாடில்லை.
- நல்லொழுக்கம் ஒருவனை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்கிறது. தீயொழுக்கமோ கீழ்நிலைக்கு இழுத்துச் செல்கிறது.

# கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டி மகுடம் சூடியது செல்வபுரம் சந்திரன் அணி

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு கழகங்களுக்கிடையில் நடைபெற்ற துடுப்பாட்ட போட்டியில் முல்லைத்தீவு செல்வபுரத் தினை சேர்ந்த சந்திரன் விளையாட்டுக் கழகம் 165 ஓட்டங்களை பெற்று வெற்றிக் கேடயத் தினை தனதாக்கிக் கொண் டுள்ளது.






முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் 59 ஆவது படைப்பிரின் 3 ஆவது படை யினர் நடத்திய மாவட்டத்தில் உள்ள கழகங்களுக்கிடையில் நடை பெற்ற துடுப்பாட்ட போட்டியில் 54 கழகங்கள் பங்கு பற்றி இறுதி போட்டிக்கு தெரிவான உடையார்கட்டு நண்பர்கள் அணியும், செல்வபுரம் சந்திரன் அணியும் மோதிக்கொண்ட இறுதி ஆட்டம் 03.06.18 அன்று முல் லைத்தீவு நகரில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முல்லைத் தீவு மாவட்ட படைத் தலைமையக கட்டளைத்தளபதி துஸ்யந்தராஜகுரு மற்றும் 59 ஆவது படைத்தளபதி பிரிகேடியர் றுவான் வணிகசூரிய உள்ளிட்ட படை அதிகாரிகள் மற்றும் இலங்கை துடுப்பாட்ட அணியின் முன்னணி வீரர் அஜந்த மெண்டிஸ் பொலிஸ் அதிகாரிகள் மாவட்ட செயலக அரச உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.





போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நண பர்கள் அணி துடுப்பெடுத் தாட தீர்மானித்தது. அதனடிப்படையில் துடுப் பெடுத் தாடிய நண்பர்கள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இதில் எஸ். சோமிதன் 39ஓட்டங்களையும், கே. வினுசன் 36 ஓட்டங்களையும், என். நிசாந்தன் 34 ஓட்டங்களையும் அதிகமாக பெற்றுள்ளார்கள்.

இதில் சந்திரன் அணியில் சிறந்த பந்து வீச்சாளராக கே.புவனகாந்தன் நான்கு ஓவர்களில் 41 ஓட்டங்களை கொடுத்து நான்கு விக்கெட்களை எடுத்துள்ளார்.

பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய செல்வபுரம் சந்திரன் அணி ஒரு விக்கெட்டினை இழந்து 165 ஓட்டங்களை பெற்று வெற்றிக்கேடயத் தினை தனதாக்கி கொண் டுள்ளது.

சிறந்த துடுப்பாட்ட நாயகனாக எஸ்.றஜீவன் 97 ஓட்டங்களை எடுத்து தெரிவாகியுள்ளதுடன் ஆட்ட நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த துடுப்பாட்ட போட்டிகளில் பங்கு பற்றிய 18 அணிகளுக்கு சான்றிதழ்களும், ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப் பட்டுள்ளன.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையக கட்டளைத்தளபதி துஸ்யந்த ராஜகுரு மற்றும் 59 ஆவது படைத்தளபதி பிரிகேடியர் றுவான் வனிகசூரிய மற்றும் இலங்கை துடுப்பாட்ட அணியின் முன்னணி வீரர் அஜந்த மெண்டிஸ் உள்ளிட்டவர்கள் சான்றிதழ்களையும் வெற்றிக்கிண் ணத்தினையும் வழங்கி கௌரவித்துள்ளார்கள்.

இந்த போட்டியில் முதலாம் இடத்தினை பெற்ற செல்வபுரம் சந்திரன் அணிக்கு ஐம்பதாயிரம் ரூபா பணப் பரிசிலும் வெற்றிக் கிண்ணமும்,இரண்டாம் இடத்தினை பெற்ற உடையார்கட்டு நண்பர்கள் அணிக்கு முப்பத்து ஐயாயிரம் ரூபா பணப்பரிசிலும் வெற்றிக்கிண்ணமும், மூன்றாம் இடத்தினை பெற்ற கள்ளப்பாடு உதயம் கழகத்திற்கு பதின் ஐந்தாயிரம் ரூபா பணப் பெறுமதியான காசோலை வழங்கி மதிப் பளிக்கப்பட்டு ள்ளதுடன் போட்டியின் துடுப்பாட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட கே.நிசாந்த னுக்கு சென்னைக்கு சென்று வருவதற்கான விமான பயணச் சிட்டையும் வழங்கி வைக் கப்பட்டுள்ளது. (க-281)



பண்டத்தரிப்பு, பிரான்பற்று இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்துக்கு வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனால் கடந்த வெள்ளிக்கிழமை விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபனின். 2018 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டில் இந்த உபகரணங்கள் கழகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

நிகழ்வில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் அ.ஜோன் ஜிப்றிக்கோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க-26)

# காதலைச் சொன்னேன் அவளிடம் கரம்பிடிக்க தந்தாள் சம்மதம்

## கிரிக்கெட் வீரரின் டுவிட்



கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் மயான்க் தனது நீண்ட நாள் தோழி ஆசிதா சூட் என்பவரை திருமணம் செய்துகொள்ளவுள்ளார்.

தற்போது 27 வயதாகும் மயான்க் உள்ளூர் போட்டிகளில் கர்நாடக அணிக்காக விளையாடி வருகிறார். இந்த வருட தொடக்கத்தில் இருவருக்கும் திருமணம் நிச்சயம் செய் யப்பட்டுள்ளது.

பின்னர் ஐபிஎல் தொடரில் பிஸியாக இருந்த மயான்க். தற்போது திருமணம் செய்து கொள்ளலாம் என முடிவு செய்துள்ளார். இந்த செய்தியை தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு அழகான போட்டோவுடன் தெரிவித்துள்ளார்.

மேலும், அண்மையில் தான் எனது தோழியை திருமணம் செய்துகொள்ள சொல்லி காதலை தெரியப்படுத்தினேன். அதற்கு அவள் தடுமாறாமல் சம்மதம் சொன்னாள்.

இதனைத் தொடர்ந்து நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளவுள்ளோம், இதனால் எங்கள் வீடு விழாக்கோலம் பூண்டுள்ளது என கூறியுள்ளார். (க)

# முதலாவது இருபது-20 போட்டியில் பங்களாதேஷை புரட்டியது ஆப்கான்

ஆப்கானிஸ்தான் அணி வீரர் ரஷித்கானின் அபார சுழற்பந்து வீச்சினால் பங்களாதேஷ் அணி தோல்வியை தழுவியது.

பங்களாதேஷ்- ஆப் கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் நடந்து வருகிறது.

இத்தொடரின் முதல் ஆட்டம் உத்தரகாண்ட் மாநிலம், டேராடூனில் நேற்று முன்தினம் நடந்தது.



நாணயச் சுழற்சியின் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது.

அதன் படி துடுப்பாட்டத்தை தொடங்கிய ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்கள் எடுத்தது.

அதிக பட்சமாக முகமது ஷாசத் 40 ஓட்டங்களும், ஷென்வாரி 36 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் அணி தரப்பில் அபுல் ஹசன், மக்முதுல்லா தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் களமிறங்கிய பங்களாதேஷ் அணியில் நட்சத்திர வீரர் தமிம் இக்பால் முதல் ஓவரிலேயே ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர், ரஷித் கானின் மாயாஜால சுழற்பந்துவீச்சில் பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுகள் சரியத் தொடங்கின.

மற்றொரு சுழற்பந்து வீச்சாளர் முஜிபுர் ரஹ்மானும் தனது சுழலில் மிரட்ட, 19 ஓவர் களில் 122 ஓட்டங்களுக்கு பங்களாதேஷ் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன்மூலம், ஆப்கானிஸ்தான் அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் அணியில் அதிகபட்சமாக ஷிதான் தாஸ் 30 ஓட்டங்களும், மக்முதுல்லா 29 ஓட்டங்களும் எடுத்தனர். ஆப்கானிஸ்தான் தரப்பில் ரஷித்கான் 3 விக்கெட்டுகளும், ஷாபூர் ஜாத்ரான் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

3 ஓவர்கள் வீசி 13 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகள் வீழ்த்திய ரஷித்கான் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. (க)

# முதலமைச்சர் நிதியத்துக்கு உடனடியாக அனுமதி வழங்கப்பட வேண்டும்-சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

(வவுனியா)

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலம் முடிவுக்குவரவுள்ள நிலையில் முதலமைச்சர் நிதியத்திற்கு இன் னமும் அனுமதி வழங்கப்படவில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். குறித்த விடயம் தொடர்பில் அவர் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றரை வருடங்களுக்கு முன்பாக இதற்கான நியதிச் சட்டங்கள் வட மாகாண சபையினால் விவாதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றுப்பட்டு ஆளுநரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் சட்டமா அதிபரின் திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை முதலமைச்சர் நிதியத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

போரினாலும் இடம் பெயர்வுகளினாலும் முற்றாக பாதிக்கப்பட்ட வட மாகாணத்தின் ஐந்து மாவட்ட மக்களும் இதிலிருந்து இன்னும் மீளவில்லை. இதேவேளை இடையிடையே மழை, வெள்ளம் வரட்சி என இயற்கை பேரிடர்கள் என்பனவும் பெரியளவிலான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலைவாசிகள் உயர்வடைந்துள்ளது என சுட்டிக்காட்டிய அவர் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்.

01.மீண்டும் வட மாகாணத்திற்கென நியமிக்கப்பட்ட ஆளுநர் அவர்களே! தயவு செய்து நீங்கள் துரிதமாக செயற்பட்டு ஜனாதிபதி, மற்றும் பிரதமர் ஆகியோரிடம் பேசி உடனடியாக முதலமைச்சர் நிதியத்திற்கான அனுமதியை பெற்றுக்கொடுங்கள். ஏற்கெனவே சட்டமா அதிபர் திணைக்களத்தால் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஒரு கருத்து நிலவுகிறது. அது உண்மையா?

02.நல்லாட்சி அரசின் பிரதான பாத்திரங்களை வகிக்கின்ற ஜனாதிபதி மற்றும் பிரதமர் அவர்களே! உடனடியாக மத்திய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் முதலமைச்சர் நிதியத்திற்கான அனுமதியை வட மாகாணத்திற்கு வழங்குங்கள்.

03.புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அபிவிருத்தி அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அவர்களே! தாங்கள் துரிதமாக செயற்பட்டு முதலமைச்சர் நிதியத்திற்கான அனுமதி கிடைப்பதற்கு ஒத்துழையுங்கள்.

04.வட மாகாணத்தை பிரதிநிதுத்துவப்படுத்தும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களே! பாராளுமன்றத்தில் முதலமைச்சர் நிதியத்தின் அனுமதிக்காக உடனடியாக ஒற்றுமையாக குரல் கொடுப்போம்.! நாம் அனைவரும் எமது மக்களுக்காக இந்த முயற்சியில் ஒன்றுபட்டு செயற்படுவோம்.

05.எதிர்க்கட்சி தலைவரும் த.தே.கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் அவர்களே! நீங்கள் உடனடியாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் பேசி இந்த நிதியத்திற்கான அனுமதியைப் பெற வட மாகாண முதலமைச்சருக்கு ஒத்துழையுங்கள்! பாராளுமன்றத்திலும் இதற்கு வலுவாக குரல் கொடுங்கள்.

06.இவை அனைத்துக்கும் மேலாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்களே! மற்றும் சகோதர இன மக்களே! நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் செய்தி ஊடகங்கள் மற்றும் கோரிக்கைகள் ஊடாக கொடுக்கும் அழுத்தங்கள் எமது முதலமைச்சர் நிதியத்திற்கு அனுமதியைப் பெற்றுத் தரும். எனவே அனைவரும் ஒன்றுபட்டு குரல் கொடுங்கள்.

07.செய்தி ஊடகங்கள் மற்றும் ஊடகவியாளர்களே! முதலமைச்சர் நிதியத்திற்கு அனுமதி கிடைக்க ஊடகம் என்ற மிகப் பெரிய ஆயுதம் மூலம் உங்கள் பங்களிப்பை செவ்வன வழங்குங்கள். இது தொடர்பான செய்திகள் கட்டுரைகளுக்கு முக்கியத்தும் கொடுங்கள்.

மக்களால் தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றத்திற்கு சென்றுள்ளபோதும் இன்று நாடாளுமன்றத்தில் பேச முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## வடமராட்சியில்...

சாட்டுக்களை முன்வைத்ததன் காரணமாக இது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு தீர்வு வழங்கப்பட வேண்டும் என ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு மீளாய்வு கூட்டம் நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. அதில் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில், தென்பகுதி மீனவர்களால் கடல் அட்டை பிடிக்கும் தொழிலால் உள்ளூர் மீனவர்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகுகிறார்கள். குறித்த தொழிலை தடை செய்ய வேண்டும் என்றும் அதை மீறி தொடர்ச்சியாக இத்தொழிலை மேற்கொண்டால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் கேட்டுக்கொண்டார்.

அதற்கமைய அப்பகுதியின் தற்போதைய நிலை தொடர்பாக மருதங்கேணி பிரதேச செயலர் கருத்து தெரிவிக்கையில், வடமராட்சி கிழக்கில் 1500 மீனவர் வாடி அமைத்து தொழில் செய்கிறார்கள். கடல் அட்டை அனுமதி கடற்தொழில் நீரியில் வளத்துறை பணிப்பாளரால் வங்கப்படுகிறது. நிபந்தனை அடிப்படையில் வழங்கப்படுகிறது. அதாவது 5 கிலோ மீற்றர் அப்பால் கடலில் அட்டை பிடிக்க வேண்டும். இரவில் பிடிக்கக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தங்கி நின்று வாடி அமைத்து தொழில் செய்வது அந்தந்த பிரதேச செயலரால் தான் அனுமதி வழங்கப்படவேண்டும். நான் அனுமதி வழங்கவில்லை. ஆனால் தனிப்பட்டவர்கள் மற்றும் சில மீனவ சங்கங்கள் அனுமதிக் கடிதத்தை கொடுக்கிறார்கள். பணத்தினை பெற்று அனுமதி கொடுக்கிறார்கள் அந்த வகையில் ஏராளமானவர்கள் தற்போது தங்கியுள்ளார்கள்.

இதனால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. அவர்கள் முறையற்ற முறையில் செயற்படுவதால் பல்வேறு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. உள்ளூர் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே அப்பகுதியை விட்டு வெளியேற 30 நாட்கள் அவகாசம் கொடுத்துள்ளோம் அதன் பின்னர் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இது கட்டாயம் தடுக்கப்பட வேண்டிய விடயம். ஆனால் எம்மால் தடுக்க முடியாமல் உள்ளது என தெரிவித்தார்

30 நாட்கள் அவகாசம் வழங்கத் தேவையில்லை, ஒரு கிழமை கால அவகாசம் கொடுத்து அவர்களை வெளியேற்ற வேண்டும். அத்துடன் தனிநபர் கடிதங்களை ஏற்றுக் கொள்ளாமல் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

மேலும் கடற்தொழில் நீரியல் வளத்துறை உத்தியோகத்தர், கடல் அட்டை பிடிப்பதற்கான அனுமதி கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கப்பட்டு வருகிறது. வடமராட்சி கிழக்கு பகுதியில் தங்கி நின்று பிடிக்கும் செயற்பாட்டை செய்யவில்லை, தற்போது தான் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். நாம் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அண்மைக் காலமாக அப்பகுதி மக்கள் யாருடைய அனுமதியும் இல்லாமல் தமது சொந்த காணிகளை அவர்களிடம் கொடுத்துள்ளார்கள். தற்போது 6 பேர் தமது காணிகளை கொடுத்துள்ளார்கள். அத்துடன் 2 மீனவ சங்கங்கள் அனுமதி வழங்கியுள்ளன. அதனால் தான் தங்கி நின்று தொழில் செய்கிறார்கள்.

எமது பகுதி மீனவர்களுக்கு குறித்த தொழில் தொடர்பான பொறிமுறையை பற்றித்து இந்த தொழிலை செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும். அப்போது தென்னிலங்கையில் இருந்து வருபவர்களை தடுக்கலாம். எமது பகுதி மீனவர்களுக்கு தொழில்வாய்ப்பும் கிடைக்கும் என தெரிவித்தார்.

நீரியல் வளத்துறை அதிகாரிகள் பக்கச்சார்பாக நடப்பதாகவும் மத்திய அரசின் உதவியுடன் அவர்களே திட்டமிட்டு இந்த விடயங்களை செயற்படுத்துவதாகவும் அப்பகுதி மீனவ சங்க பிரதிநிதிகளும் நகர சபை உறுப்பினர்களும் குற்றம் சாட்டியிருந்தனர்.

நாம் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். எம்மீது குற்றம் சுமத்துவது கவலையளிக்கிறது. அப்பகுதி மீனவ சங்கங்கள் தனி நபர்கள் தான். தென்பகுதி மீனவர்களுக்கு தமது நிலங்களை கொடுத்துள்ளார்கள். அதற்கான ஆதாரம் எம்மிடம் உள்ளது. அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டால் இந்த பிரச்சினைக்கு தீர்வு எட்டலாம் என நீரியல் வளத்துறை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து இந்த விடயத்தில் பல தரப்பினர் உரிய முறையில் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. தனி நபர் இதில் சம்பந்தப்பட்டு நடைபெறவில்லை. பல்வேறு துறையினர் தொடர்புபட்டுள்ளார்கள். எனவே சட்டத்தின் படி செயற்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மேலும் இரு தரப்பினருக்கும் இடையில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு தீர்வு காணப்பட வேண்டும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் அங்குள்ள உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு உடனடியாக இந்த தொழில் முறையை நிறுதத வேண்டும் என பல தரப்பினராலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மக்கள் பிரதி நிதிகள் மத்திய அரசுடன் பேசி சரியான முடிவை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ம-9)

## பளையில் காணி...

கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் படையினரின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். இங்குள்ள மக்களுக்கே காணிகள் இல்லாத நிலையும் இருக்கின்ற போது படையினருக்கு காணிகளை வழங்க முடியாது.

யாழில் மட்டும் காணிகள் இல்லாது 14 ஆயிரம் பேர் உள்ளார்கள். இவ்வாறு வடக்கில் ஏனைய மாவட்டங்களிலும் காணி இல்லாத பலர் உள்ளார்கள்.

எனவே தற்போது காணிகள் இல்லாதவர்களுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பளைப்பகுதியில் இருக்கின்ற காணிகளை வழங்க முடியுமென பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் யோசனை யொன்றை முன்வைத்தார்.

இதன்போது அமைச்சர் விஜயகலா மற்றும் சிறீதரன் ஆகியோர் பளையிலுள்ள இந்தக் காணிகள் குறித்து பகிரங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அதற்கு வேறு மாகாணங்களில் இருந்து மக்கள் யாரும் வந்து குடியேறுவதற்கு முன்னர் எமது பகுதி மக்கள் சென்று குடியேற வேண்டும் என தெரிவித்தார்.

எனவே காணியில்லாதவர்கள் பளைப் பகுதியில் காணியை பெற்று கொள்ள உரிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என கூட்டத்தில் உரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## செல்வாக்கை பயன்...

க்கை சமர்ப்பித்ததையடுத்தே நீதவான் இந்தக் கட்டளையை வழங்கினார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள காணி ஒன்றை குடும்பம் ஒன்று வாங்கியுள்ளது. அந்தக் காணிக்கு மற்றொரு காணி ஊடாகச் செல்வதற்கு பாதை விடப்பட்டிருந்தது. அந்தப் பாதையை காணியின் உரிமையாளர் மூடியுள்ளார்.

இந்த நிலையில் காணியை வாங்கியவர்கள் அந்தப் பாதையை மூடிப் போடப்பட்டிருந்த பூட்டை உடைத்து தமது காணிக்குச் சென்றுள்ளனர்.

தம்மால் போடப்பட்ட பூட்டை உடைத்து தமது காணி ஊடாக அத்துமீறியதுடன் தனது காணிக்குளிருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று அந்தக் குடும்பத்தின் தாயார், மகள் மற்றும் உறவினருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதையை மூடியவரான மருத்துவரால் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் அத்துமீறல் மற்றும் திருட்டுக் குற்றச்சாட்டில் தாயும் மகள் மற்றும் உறவினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்த போது, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, ஒளிப்படங்களை சமர்ப்பித்து மன்றில் உண்மை நிலையை விளக்கியிருந்தார்.

சம்பவம் தொடர்பில் நேரில் ஆராய்ந்து நேற்று மாலை 4 மணிக்கு முன்னர் மன்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

சம்பவம் இடத்துக்கு விரைந்த பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடைய காணிக்குச் செல்லும் பாதைக்கு போடப்பட்டிருந்த படலையை அகற்றி பாதையைத் திறந்துவிட்டனர்.

பாதை திறக்கப்பட்டமை தொடர்பில் மாலை நீதிமன்றுக்கு பொலிஸார் அறிக்கையிட்டனர்.

"இந்த வழக்கின் அரச உயர் மட்டத்தில் பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் செல்வாக்குச் செலுத்துகின்றார். அவருக்கு ஆதரவாக வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அதிகார முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார்.

இந்த மாண்புமிகு மன்றின் உத்தரவுக்கு அமைய நேரில் விசாரணை செய்யச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கு மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் இடமாற்றம் வழங்கியுள்ளார்.

அந்த பொலிஸ் அதிகாரியின் நடவடிக்கைகளுக்கு அஞ்சியே பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்த நீதிமன்றின் கட்டளையை நிறைவேற்றத் தவறியுள்ளனர் என்று சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் மன்றில் சமர்ப்பணம் செய்திருந்தார். (ம-9)

## நினைவேந்தலுக்கு செலவான...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகளை இவ்வருடம் வடமாகாண சபை உறுப்பினர்களின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்விடயத்தில் உடன்பாட்டிற்கு ஒத்துழைக்காத வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தனது நிதியைப் மீளப் பெற்றுத்தருமாறு வடக்கு மாகாண சபையிடம் கோரியிருந்தார்.

இதையடுத்து கிழக்கு மாகாண இளைஞர்கள் ஒன்றிணைந்து வடமாகாண சபை உறுப்பினரின் ஏழாயிரம் ரூபாவினை ஒவ்வொரு கடைகளிலும் ஒரு ரூபா வீதம் சேகரித்து வடமாகாணசபையின் அடுத்து இடம் பெறவுள்ள அமர்வில் வைத்து சேகரித்த பணத்தை அவருக்கு வழங்குவதற்கு உண்டியலில் பணத்தை நேற்று முதல் சேகரித்து வருகின்றார்கள். (ம-281)

## 33 ஏக்கர் காணி...

வலி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பலை வீமன்காமம் வடக்கில் உள்ள ஜே/236 கிராம சேவகர் பிரிவிலுள்ள 33 ஏக்கர் தனியார் காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படடன.

கடந்த 27 ஆண்டுகளுக்கு முன்னர் பொது மக்கள் இப்பிரதேசத்தை விட்டு வெளியேறிய நிலையில் அவற்றை இராணுவம் கையகப்படுத்திக் கொண்டது.

இவ்வாறான நிலையில் தற்போது அந்தக் காணிகளை படிப்படியாக மீள பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்றைய தினம் 33 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. (ம-9)

## இளைஞர் ஒருவர்...

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் இந்த கஞ்சா மீட்கப்பட்டது.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## யாழ். பல்கலையி...

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. 07 அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்த பட்டமளிப்பு விழாவில் கலை, மருத்துவ, விஞ்ஞான, பொறியியல் மற்றும் பட்டப்பின் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த ஆயிரத்து 223 உள்வாரி பட்டதாரிகளும், 43 டிப்ளோமா பட்டதாரிகளும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதோடு, யாழ். பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த 440 வெளிவாரிபட்டதாரிகளின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்படவுமுள்ளன.

இம்முறை, இருவர் கலாநிதிப் பட்டங்களையும், 7பேர் முதுவிஞ்ஞானமாணி பட்டங்களையும், வவுனியா வளாகத்தைச் சேர்ந்த 170பேர் முதுகல்விமாணி பட்டங்களையும், 7 பேர் சுகாதார முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், 21 பேர் சைவ சித்தாந்தத்தில் முதுமாணி பட்டங்களையும், 11 பேர் முதுவியாபாரமாணி பட்டங்களையும், 4 பேர் முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களையும், 95 பேர் மருத்துவமாணி சத்திரசிகிச்சைமாணி பட்டங்களையும் , ஒருவர் மருத்துவ விஞ்ஞானமாணி பட்டத்தையும், 31 பேர் பொறியியல் விஞ்ஞானமாணி பட்டங்களையும், 78 பேர் விஞ்ஞானமாணி சிறப்பு மற்றும் 79 பேர் விஞ்ஞானமாணி பொதுப் பட்டங்களையும், 16 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டங்களையும், 8 பேர் பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டங்களையும், 7 பேர் விவசாய விஞ்ஞானமாணி பட்டங்களையும், 146 பேர் நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பு) பட்டங்களையும், 459 பேர் சிறப்புக் கலைமாணி, 81 பேர் பொதுக் கலைமாணிப் பட்டங்களையும் பெறவிருப்பதோடு, 5 பேர் விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், 9 பேர் இதழியலில் தகைமைச் சான்றிதழ்களையும், 16 பேர் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழ்களையும், 13 பேர் மனிதவள முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழ்களையும் பெறவிருக்கின்றனர்.

வெளிவாரியாகப் பட்டங்களைப் பெறுகின்ற 374 கலைமாணிப் பட்டதாரிகளினதும், ஒரு இசைமாணிப் பட்டதாரியினதும், 3 நடனமாணி பட்டதாரிகளினதும் 37 வணிகமாணி, 25 வியாபார முகாமைத்துவ மாணி பட்டதாரிகளினதும் பட்டங்கள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

மொத்தமாக இம்முறை ஆயிரத்து 706 பட்டங்கள் வழங்கப்படவிருப்பதோடு, சகல கற்கை நெறிகளுக்குமாக 34 தங்கப் பதக்கங்களும், 48 பரிசில்கள் மற்றும் புலமைப்பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன. (ம-4-9)

## பாராளுமன்றத்தி...

தினம் வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் கலந்துரையாடியிருந்தனர். இந்த கூட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் தவராசாவினால், மேற்படி மகாவலி திருத்த சட்டத்தில் சிறு திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் வடக்கில் நடைபெறுகின்ற அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களை தடுத்து நிறுத்த முடியும் என யோசனை ஒன்றை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில் மேற்படி திருத்தத்தை பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை மூலமாவது கொண்டுவருவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வரைபு ஒன்றை உருவாக்கி பிரேரணையாக சமர்ப்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் தனிப்பட்ட விடயம் காரணமாக வருகை தரவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. (ம-4)

## குளத்தில் மூழ்கி...

ஒருவர் மீள வெளியில் வராத நிலையில் குறித்த இளைஞரை தேடும் நடவடிக்கையில் ஏனைய நண்பர்கள் ஈடுபட்டுள்ளனர். மேலும் இது தொடர்பில் பொலிஸாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞனின் சடலம் அதிகாலை குளத்தின் கரையில் ஒதுங்கியுள்ளது.

இதில் முள்ளியவளை முதலாம் வட்டாரம் பொன்னகரினை சேர்ந்த 21 வயதுடைய இந்திரன் தசீசன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் எஸ்.லெனிஸ்குமார் வருகை தந்து சடலத்தை பார்வையிட்டு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் குறித்து முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ம-281)

## முல்லை, வவுனி...

ஏவில் வடக்கு மாகாண சபையில் ஆரம்பமாகிய கலந்துரையாடலில் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைப்பது என தீர்மானிக்கப்பட்டது. அதனை அடுத்து மேற்படி சட்டவிரோத குடியேற்றங்களை தடுப்பது குறித்து அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க செயலணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், வி.ரி.லிங்கநாதன், து.ரவிகரன், கே.சிவநேசன், கே.சயந்தன், சி.தவராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், மற்றும் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோரும் மற்றும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியும் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களையும் கட்சி கூட்டம் ஒன்றின் மூலம் தெரிவு செய்வது என தமிழரசு கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இந்த செயலணி அத்துமீறிய குடியேற்றங்கள் தொடர்பில் சட்டநடவடிக்கை, சமூக நடவடிக்கை, விழிப்புணர்வு, தமிழ் மக்களை எல்லை கிராமங்களில் குடியேற்றல், போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தவிர அத்துமீறிய குடியேற்றங்களுக்கு எதிராக நீதி மன்றங்களில் வழக்கு தொடர்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்து தீர்ப்பு வேறு விதமாக வழங்கப்பட்டு விட்டால் என்ன செய்வது? என கூட்டத்தில் இருந்த உறுப்பினர்கள் சிலர் வலம்புரியிடம் கூறியிருந்தனர். ஆகவே மக்களின் தேவை விழிப்புணர்வு திட்டங்களை முன்னெடுத்து, எல்லை கிராமங்களில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து அங்கு தமிழ் மக்கள் விரும்பி குடியேறும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் கூறினார்கள்.

இது தவிர அத்துமீறிய குடியேற்றங்கள் தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு அழுத்தம் வழங்க வேண்டும் எனவும் கூறியிருந்தனர். (ம-4)

## வடக்கில் மாகாண...

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மீளாய்வு கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட மண்டைதீவு கிழக்கு (ஜே- 07) கிராம அலுவலர் பிரிவில், 18ஏக்கர் 1 றூட், 10 பேர்ச் விஸ்திரணமுடைய 29 பேருக்கு சொந்தமான காணியை கடற்படையினரின் முகாம் அமைப்பதற்கு என சுவீகரிப்பு நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்றும் அதை மக்களுக்கு மீள கையளிக்கப்பட வேண்டும் எனவும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்னம் உட்பட பலரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த சுவீகரிப்பு விடயம் காணி அமைச்சின் செயலாளரால் பிரதேச செயலருக்கு வழங்கப்பட்டதாகவும் அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பிரதேச செயலர் தெரிவித்தார். அத்துடன் பொது மக்களின் முறைப்பாடு தொடர்பாக காணி அமைச்சின் செயலாளருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த வடக்கு முதலமைச்சர், படையினருக்கு காணிகள் தேவை எனவும் அதனை வழங்குங்கள் எனக் கொழும்பில் இருந்து ஜனாதிபதியாலோ அரச அதிபருக்கோ அல்லது பிரதேச செயலாளர்களுக்கோ அறிவுறுத்தல்கள் வந்தால் முதலில் எமக்கு தெரியப்படுத்த வேண்டும். 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபையின் அனுமதியின்றி அதனை வழங்க முடியாது.

தேசிய பாதுகாப்போ வேறு எந்த தேவையோ முதலில் எமக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். எந்த படையினருக்கும் நாம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என சுட்டிக்காட்டினார். எமது தீர்மானங்களை மீறி சுவீகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றால் அதனை தடுக்க நீதிமன்றங்களுக்கு செல்ல வேண்டும் என்றாலும் நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து மண்டைதீவில் கடற்படையினருக்காக சுவீகரிக்கப்படவுள்ள காணியை வழங்கும் செயற்பாட்டை எதிர்ப்பதுடன், நிராகரிப்பதாகவும் இது தொடர்பாக மேல நிக நடவடிக்கை எடுக்கப்படும் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-9)


**விற்பனைக்கு**

★ மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை — தொடர்புகளுக்கு 077 357 3055

**வீடு வாடகைக்கு**

பருத்தித்துறை கிராமக் கோட்டடியில் வேலைபார்ப்பவர்களுக்கு, இருவர் அடங்கிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு :- 077 522 8485

ஹொட்டேல்துறை அனுபவமுள்ளவர்களுக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான

**செங்கன் விசா**

ஏற்பாட்டுடன் உடனடி வேலைவாய்ப்பு

சம்பளம் ரூ. 126,000/-

Waiters உணவு விநியோகஸ்தர் — 100 பேர் — வயதெல்லை 35 — Commis சமையல் உதவியாளர்

நட்சத்திர தர ஹொட்டேல் அல்லது உயர்தர உணவகங்களில் பணியாற்றிய அனுபவம், ஆங்கில தொடர்பாடல் திறன் அவசியம்

அனுபவம் இல்லாதவர்களுக்கு 3 - 4 மாத விசேட

**ஹொட்டேல் பயிற்சி**

& ஆங்கில தொடர்பாடல் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு, விசா ஏற்பாடு

O/L or A/L உடைய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

0717 324004 / 0773 6 16 798

SIKARAM ACADEMY — Emerald Isle Manpower & Travel Services

221-1/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் — ☎ 021 - 222 00 11 — www.sikaram.lk — 077 08 38 215 / 077 55 46 956 / 026 221 9 220

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK - 550 /-Kg
கனடா - 900 /-Kg
ஜேர்மனி - 700 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS

☎ 0768226240

V2 TRAVELS

மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

Certificate in

**Computer Networking**



Duration : 2 Months
Next Batch : 09-06-2018
CCTV Technician Course Starts on 16-06-2018

ICS EDUCATION — 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். — 076-7013060 ,021-7306000

**வேலைவாய்ப்பு - 2018**

எமது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் யாழ் புதிய கிளைகளிற்கு முகாமைத்துவத்துறையில் பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு ஆரம்பமாகவுள்ளது. (தகுதி O/L Pass) 180 நாட்கள் பயிற்சியின் பின்பு சார் வடுவதிகாக வணிகத்துறையில் இணைந்த, எமது நிறுவனத்திலே நிரந்தரமான பதவிகளும் வழங்கப்படும். யாழ் மாவட்டத்தினைத் தவிர்ந்த வெளிமாவட்டத்தினருக்குப் பயிற்சிக்காலத்தில் தங்குமிட வசதி, பயிற்சியின் போது 15,000/= - 25,000/= வரை பெற்றுக்கொள்ள முடியும், பயிற்சியின் பின் மாதமொன்றிற்கு 45,000/= க்கு அதிகமான கொடுப்பனவும் வேறு சலுகைகளும் உண்டு.

தொடர்பு :- 076 676 7620

FLC FRENCH LANGUAGE CENTRE

**பிரெஞ்சு**

V. ஜெகன் (Trained in France- 2007)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட Diplomas.

40, பலாலி வீதி, அறிவியல் நகர் 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 09.06.18 — 181, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973 ஆரம்பம் : 11.06.18 — 3.30 மணி

திருகோணமலை U.K. செல்லவோருக்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புகளும் நடைபெறுகின்றன.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 / 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.